Vol.8, Issue 4 | Annual Subscription ₹ 480
Rotary News, September 2025, Chennai

செப்டம்பர் 2025

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary


BAD TRASH MANAGEMENT COULD BE THE DOWNFALL OF HUMANITY, WILDLIFE, AND THE HEALTH OF ALL ECOSYSTEMS.
UPCOMING WORKSHOP
COMMUNICATION FOR BEHAVIORAL IMPACT (COMBI) IN SOCIAL DEVELOPMENT PROJECTS
WHO CAN ATTEND THIS WORKSHOP?
Anybody who is passionate about Environment and waste Management.This workshop will enhance your skills and help you make a meaningful impact on sustainable environment practices
LEARN FROM THE PROFESSIONALS
This workshop will be handled by experts from RJ Garbage Bank, bringing the wealth of knowledge and experience in decluttering 9,00,000 Kgs of waste from being dumped in the landfills.
THE COURSE COVERS
Mr. IEC, did you deliver on the Behavioural Promise?
Understanding KAP – Knowledge, Attitude, Practice
Mind, society and Behaviour - Social Preferences and their Implications
Because True Communication Begins with Listening
Diagnosing Psychological and social obstacles
Tools: DILO, MILO, CAR, NOSA, VARIED, EDGES, TOMA, WAIT
HIC-DARM: Overcoming intention-action Divides
Social Marketing Communication – 4 Cs
Psychological and Social Approaches to Changing Behaviours
Mental Models, Framing and Reframing
Framework for COMBI Planning
Monitoring and Measuring Behavioural Impact
The emphasis is to move beyond awareness-building to enable actual behaviour change, and integrate COMBI planning into ongoing and new development
COURSE FEE ₹ 1500/-
COURSE DURATION: 10 HOURS
COURSE TYPE: ONLINE
COURSE DATES: SEPTEMBER 19,20 & 21 2025
APPLY VIA
DPIIT #startupindia DIPP205349
LEND A HAND
Meri LiFE
RJ GARBAGE BANK குப்பை வங்கி
rj_garbagebank
www.ilovewaste.in
rjgarbagebank@gmail.com
87542 04222

# உள்ளே




12

பசுமையான
கிரகத்திற்கான
வேரூன்றல்



22

மால்டா-வில்
பலாக்கனவுகள்



24

ஆஸ்திரேலியாவில்
உள்ள
ஏழை மக்களுக்கு
உணவு வழங்குதல்



38

வகுப்பறையிலிருந்து
வயல்வெளி வரை



40

மணிப்பாலில்
ரோட்டரியின்
டெங்கு ஒழிப்பு இயக்கம்



44

சத்தாராவில்
பச்சிளங்குழந்தைகளுக்கு
புதிய விடியல்!



48

ஹாப்பி பள்ளிகளை
பெற்ற மராட்டிய
கிராமங்கள்



Rotary

A publication of Rotary
Global Media Network




சுற்றுச் சூழலைக்காக்க
மின்பதிப்புக்கு மாறவும்

**மின்னிதழ்**
**கட்டணம் குறைப்பு**

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு
சந்தா ₹420-லிருந்து ₹324-ஆக
குறைக்கப்பட்டுள்ளது.

## நெகிழ்ச்சியான ஒரு செயல்!




*ஆகஸ்ட் மாத அட்டைப்பட கட்டுரையில், கொடைக்கானல் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ராஜ்குமார் ராமன், தனிமனிதராக நிதி திரட்டி, கடினமாக உழைத்து கொடைக்கானல் அருகில் உள்ள மலைப்பகுதியில் வசிக்கும் பழங்குடியினருக்கு 14 வீடுகள் கட்டிக் கொடுத்த செய்தியை படித்தபோது மிகவும் நெகிழ்ந்துபோனேன். உலகையே வென்றுவிட்டதுபோல் மகிழ்ச்சிப் புன்னகையுடன், தன்னம்பிக்கை கொண்ட மல்லிகாவின் படம் உண்மையில் ஊக்கமளிப்பதுபோல் இருந்தது. இந்த திட்டத்தின் ஒரு பகுதி, அதாவது கடைசி கட்டமான மின் விநியோகம், நிதிப் பற்றாக்குறையால் தடைபடுவதை கட்டுரையை படித்து தெரிந்துகொண்டேன். இந்த உன்னதமான பணிக்காக எனது பங்காக நான் ரூ.1 லட்சம் நன்கொடையாக தருகிறேன்.*

PDG V R *முத்து* — D 3212

*ஆகஸ்ட் மாத ரோட்டரி நியூஸ் அட்டை படத்தை பார்த்த உடனே ஒரு வித்தியாசமாக தெரிந்தது. முகத்தில் இப்படி ஒரு மகிழ்ச்சியா! உடனே புத்தகத்தை படிக்க ஆவலை தூண்டியது. என்ன கொடைக்கானலில் உள்ள வாழைகிரி பழங்குடியினருக்கு கான்கிரீட் வீடுகளா! வீட்டைக் கட்டிப்பார் கல்யாணம் பண்ணிப்பார் என்று சொல்வார்கள். அதுவும் நடுத்தர வர்க்கத்தை சார்ந்த அனைவருக்கும் வீடு என்பது ஒரு கனவு. அவர்களுக்கே இந்த ஒரு நிலை என்றால்... பழங்குடியினர், வீடு என்ற கனவை கனவாகவாவது பார்க்க முடியுமா? என்ற ஒரு சூழலில் கனவல்ல நிஜம் தான் என்று அவர்களுக்காக ராஜ்குமார் ராமன் பட்ட கஷ்டங்கள் அனைத்தையும் அழகாக தொகுத்து எங்களுக்கு வழங்கிய ஆசிரியர் ரஷீதா பகத் அவர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்களும் பாராட்டுகளும்.*

C *பாண்டியன்,* RC *திண்டுக்கல்* — D 3000

*ரோட்டரி நியூஸ் ஆகஸ்ட் மாத இதழ் அட்டை படம் தொடர்பான கட்டுரை மற்றும் புகைப்படங்கள் அருமையாக தந்துள்ளார் ஆசிரியர் ரஷீதா பகத். ஒரு ரோட்டேரியன் ஒரு செயலைத் தொடங்கும் முன் என்னென்ன விடையங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்கு* RID 3000*ன் முன்னாள் உதவி ஆளுநர் ராஜ் குமார் ராமன் உதாரணமாக கண்முன் நிற்கிறார். திட்டம் சர்வதேச ரோட்டரி, மாவட்ட ரோட்டரி, மற்றும் கிளப் நிதியின்றி தனி மனித தேடுதல்களின் அடிப்படையில் வெற்றி பெற்றுள்ளது என்பது ஒவ்வொருவரும் எப்படி செயல்பட வேண்டும் என கற்றுக் கொடுத்துள்ளது. கொடையாளர்களை தேடி கண்டறிதல் அரசு அலுவலர்களை ஏழைகளுக்கு உதவுவதற்கு பயன்படுத்துதல் என அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுரையாளர் நமக்கு பாடமாக முன்வைத்துள்ளார்.*

K *பால்சாமி,* RC *திருவில்லிபுத்தூர் ஃப்ரண்ட்ஸ்* — D 3212

### தலைமைத்துவ சவால்கள்

ஆகஸ்ட் மாத இதழில் தனது ஆசிரியர் உரையில் ரஷீதா பகத், தலைமைத்துவம் குறித்து வெளியிட்ட கருத்துகள் என்னை மிகவும் ஈர்த்தது. தலைப்பில் அவர் தலைமைத்துவம் சவாலா அல்லது வாய்ப்பா? என்றும் கேள்வி எழுப்பியிருந்தார். ரோட்டரியை பொருத்தவரை இரண்டும்தான். ரோட்டரியில் தலைமைத்துவம் என்பது சேவைமனப்பான்மை உள்ள மக்கள் குழுவிடம் உள்ளது. மேலும் சங்கத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட எந்த பதவியானாலும் சரி சவால்களுடன் ஏற்க தயாராக உள்ளனர். ஆனால், அவர்களில் பெரும்பாலானவர்கள் இந்த பதவிகளை அமைப்புக்கும், சமூகத்திற்கும் சேவை செய்வதற்கு கிடைத்த வாய்ப்பாகவே கருதுகின்றனர். பெரும்பாலானவர்கள் அதில் வெற்றியும் அடைகின்றனர். குழுவில் திறமையுள்ளவர்களை அடையாளம் கண்டு அதை வெளிக்கொணர்வது என்பதுதான் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ரகசியம். இதை, ஒரு நிறுவனம் அல்லது நிறுவனத்தின் நிர்வாகத்திறனுடன் ஒப்பிடக்கூடாது என்று நான் நினைக்கிறேன்.

ரோட்டரியில் எனது நீண்ட ஆண்டு பயணத்தில், நிறுவன விவகாரங்கள் அல்லது வர்த்தம் செய்வதில் நிபுணர்களான பலரை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், அவர்களால் ரோட்டரி சங்கத்தின் தலைவர்களாக இருந்து சமூகத்திற்கு சேவை செய்து நல்ல பெயர் எடுக்க முடியவில்லை. சக ரோட்டேரியன்கள் சாதனை படைக்கவும், புதிய உச்சத்தை எட்டவும் ஊக்குவிப்பவர்தான் ரோட்டரிக்கு சிறந்த தலைவராக இருக்க முடியும். எளிமையான தோற்றமும், ரோட்டரியை பற்றிய முழு அறிவும், நல்ல தகவல் தொடர்புத்திறனும்தான் ஒருவருக்குத் தேவை.

R ஸ்ரீனிவாசன், RC பெங்களூரு J P நகர் — D 3191

ஆகஸ்ட் இதழில், RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ, கூறியுள்ளவை பொன்னான வார்த்தைகள். உறுப்பினர் வளர்ச்சி என்பது வெறும் எண்ணிக்கை சார்ந்தது அல்ல, இது கதவுகளை திறப்பது போன்றது தங்கள் நேரம், திறமை, உழைப்பை மனம் உவந்து தருவதற்கு தயாராக இருப்பவர்களுக்கான அழைப்பாகும்.

நாம் எண்ணிக்கையை கொண்டாடினால், அதிக

உறுப்பினர்களைப் பெறலாம். ஆனால், நாம் மக்களைக் கொண்டாடினால், நாம் ரோட்டேரியனை வளர்க்கலாம்.

R முரளி கிருஷ்ணா
RC பெர்ஹாம்பூர் — D 3262

மீண்டும் ஒரு அருமையான இதழை படித்தேன். மதிப்புமிக்க தலையங்கம், RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோவின் உரையாடல், உங்கள் குழந்தைகளுக்கு நன்றாக சொல்லிக் கொடுங்கள் கட்டுரை என அனைத்தும் சிந்தனையை தூண்டுபவையாக இருந்தன.

"இன்றைய குழந்தைகள்தான் நாளைய குடிமக்கள்" என்று கட்டுரை சரியாக கூறியுள்ளது. பள்ளி புத்தகங்களில் பருவநிலை மாற்றம், மாசுபடுதல், தண்ணீர் சேமிப்பு குறித்த தலைப்பிலான பாடங்களையும் சேர்க்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் பல்வேறு பரிமாணமுள்ள நெருக்கடிகளைப் புரிந்துகொள்ள முடியும். கழிவுகளைப் பிரித்தெடுத்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்தல், தண்ணீர் மற்றும் ஆற்றலை பாதுகாத்தல் போன்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகளை நாம் வீட்டிலேயே கடைப்பிடிக்க வேண்டும். நாம் முறையாக இவற்றை பின்பற்றினால்தான், குழந்தைகளும் அதை பின்பற்றுவார்கள்.

ராஜ்குமார் கபூர்
RC ரூப் நகர் — D 3080

### மனதை தொட்ட கட்டுரை

ஜூலை மாத இதழில் இடம்பெற்ற ஏழை குழந்தைகளுக்கு நம்பிக்கை அளிக்கும் RC பாவ்நகர் கட்டுரை மனதை தொடும் விதத்தில் இருந்தது. சஞ்சய் மற்றும் நேஹாலின் கதையும் மற்றும் ரோட்டரி குழந்தைகள் கல்வி மையம் மூலம் பாவ்நகர் ரோட்டரி சங்கத்தின் அர்ப்பணிப்பு உணர்வும் பிரமிக்கவைக்கிறது.

ஒரு ரோட்டேரியன் என்ற முறையில் இந்த சாதனைக்காக நான் பெருமைப்படுகிறேன். உலகத்திற்கு நன்மை செய்வதற்கும், நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் சக்திவாய்ந்த அமைப்பு ரோட்டரிதான்.

ராஜ் M கூப்லால், RC ரோஸ் பெல்லி — D 9229 (மொரீஷியஸ்)

ஜூலை மாத இதழின் அட்டைப் பட விளக்கம் மிக அருமை. ஆசிரியரின் குறிப்பும் சிறப்பாக இருந்தது. TRF அறங்காவலர் பரத் பாண்ட்யாவின் செய்தியும் சூப்பராக இருந்தது. மகாராஷ்டிரத்தில் கிராமப் பகுதிகளில் உள்ள 100 பள்ளிகளுக்கு டிஜிட்டல் வகுப்பறைகள் ஏற்பாடு செய்த RID 3132-க்கு பாராட்டுகள். "ஒரே கூரையின்கீழ் பல சேவைகள்" என்னும் ஜெய்ஸ்ரீயின் கட்டுரை சுவாரஸ்யமாக இருந்தது. 2024-25 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்களின் மனதை தொட்ட ரூ.4.5 கோடி மதிப்பிலான 320-க்கும் மேலான திட்டங்களைச் செயல்படுத்திய பாம்பே பே வியூ (RID 3141) ரோட்டரி சங்கத்துக்கு சபாஷ்.

டேனியல் சிட்டிலப்பள்ளி
RC கலூர் — D 3205

தானத்தில் தோன்றும் கிருபை என்ற ஆசிரியரின் பதிவு இன்றைய காலத்திற்கு தேவையான உண்மையான கருத்து. குடும்பத்தின் ஆணிவேர் பெண். ஒரு பெண் முறையான கல்வி பெற்று விட்டால் அவரின் குடும்பமே உயர்ந்து விடும். இதை மனதில் கொண்டு, கடந்த 8 ஆண்டுகளாக ஆண்டிற்கு ஒரு ஏழை மாணவிக்கு கல்லூரி கல்வி கட்டணம் கட்டி வருகிறேன். மூன்று மாணவிகள் படிப்பை முடித்து நல்ல வேலையில் உள்ளார்கள். தற்போது இரண்டு மாணவிகள் பொறியியல் கல்வி படித்துக் கொண்டிருக்கிறார்கள். IKYAM Feeding Hope என்ற அமைப்பின் மூலம் வாரம் ஒரு வேளை உணவினை ஆதரவற்ற மக்களுக்காக வழங்கி வருகிறோம். இவை அனைத்தையும் முறையாக செய்து வரும் ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்ததை பெருமையாக கருதுகிறேன்.

சிவபெருமாள் சுப்பிரமணியன்
RC வாலாஜாபேட்டை — D 3231



### சேவைத் திட்ட விடியோக்களை வரவேற்கிறோம்

*ரோட்டரி சங்கங்கள் தங்களது சேவைத்திட்டங்கள் குறித்த சுருக்கமான விடியோக்களை* rotarynewsmagazine@gmail.com *மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். எங்கள் வலைத்தளமான* rotarynewsonline.org*-ல் நாங்கள் அதை பதிவேற்றுவோம்.*

*உங்கள் விடியோ தெளிவாகவும், பாரபட்சம் இல்லாமலும் இருக்கவேண்டும். உங்கள் சேவைத் திட்டம் மற்றவர்களின் வாழ்வை எப்படி மாற்றியமைத்தது, பயனாளிகள் யார் என்பதை தெளிவாக குறிப்பிடவும். அந்த விடியோ இரண்டு நிமிடங்களுக்கு மிகாமலும், சரியான விளக்கங் களுடன் தரமானதாகவும் இருக்க வேண்டும்.*

அட்டையில்: மகாராஷ்டிராவின் சிந்துதுர்க்கில் ஒரு பெண் விவசாயி தேங்காய் மரக்கன்றை பரிசாகப் பெறுகிறார்.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நலத்திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.

## RI தலைவரிடமிருந்து...



# கல்வியின் வழியாக அமைதி

நான் RI தலைவராகப் பொறுப்பேற்ற கணம் மிக விரைவாகவும் எதிர்பாராமலும் வந்தது. அப்போது, ஒரு நொடியில் உலகம் எப்படி மாறக்கூடும் என்றும், அந்த மாற்றத்தில் நன்மைக்கான நிலையான ஆற்றலாக இருக்கும் வலிமை ரோட்டரிக்கு உள்ளதையும் நான் சிந்தித்தேன். இது, ரோட்டரியின் அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு மாதம். இதற்கான நம் செயல் திட்டம் தெளிவானது: நாம் சேவை புரியும் ஒவ்வொரு சமூகத்திலும் கற்றல் அடித்தளத்தை வலுவாக்குதல்.

உலகெங்கும் லட்சக்கணக்கானோருக்குப் படிக்கத் தெரியாது. லட்சக்கணக்கான குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி கிடைப்பதில்லை. இதற்கான தீர்வை நாம் அறிவோம்: வளங்குன்றாத, உள்ளடக்கிய, நியாயமான கல்வி, குறிப்பாக, பெண்கள் மற்றும் ஏழை இளைஞர்களுக்கு. எழுத்தறிவு என்பது வெறுமனே படிக்க, எழுதத் தெரிந்துகொள்வது இல்லை. அது மனிதக் கண்ணியத்துக்கு, பொருளாதார நகர்வுக்கு, அமைதிக்கான திறவுகோல். திறக்கப்படும் ஒவ்வொரு புத்தகமும், ஆதரிக்கப்படும் ஒவ்வொரு வகுப்பறையும், பயிற்சி பெறும் ஒவ்வோர் ஆசிரியரும் அமைதிக்கு உதவும் செங்கற்கள்.

இந்த ஆண்டு நம் செய்தி, நன்மைக்காக ஒன்றுகூடுவோம். ஒன்றுகூடல் (ஒற்றுமை) என்ற சொல், நாம் ஒருவர் மற்றவரிடம் காணும் வலிமையிடம் பேசுகிறது. நம் சங்கங்களிடையில் மட்டுமின்றி, கூட்டாளர்கள், நிறுவனங்கள், சமூகங்கள் என எங்கும் நாம் நம் திறமைகள், வளங்களை ஒன்றாகச் சேர்த்தால், நம் எல்லைகளை விரிவாக்குவோம். நாம் அதைத் தொடர்ந்து செய்துவந்தால், நீடித்த மாற்றத்தை உருவாக்குவோம். ரோட்டரி சேவையை ஆண்டு இலக்குகளால் மட்டும் அளவிட இயலாது. நம் கல்விப் பணி பல ஆண்டுகளுக்குத் தொடரவேண்டும். எழுத்தறிவுத் திட்டங்கள் வேரூன்ற, வளர, பழம் தர நாளாகும்.

இப்போது நாம் துணிவாக, படைப்பூக்கத்துடன் சிந்திக்க வேண்டும். கல்வியாளர்கள், மாணவர்கள், குரல் கொடுப்போருடன் புதிய வழிகளில் ஊடாடுவதற்குப் புதிய வகைச் சங்கங்கள் நமக்கு உதவும். இந்த மாதத்தைப் பயன்படுத்தி, கல்வியில் பேரார்வம் கொண்ட புதிய உறுப்பினர்களை வரவேற்போம், பழைய உறுப்பினர்களுக்கு உள்ளூர்த் தேவைகளைப் பிரதிபலிக்கும் சேவைத் திட்டங்களை வழிநடத்த ஆற்றலளிப்போம். நீங்கள் நூலகங்களை அமைக்கலாம், பாடப் புத்தகங்களை வழங்கலாம், மாணவர்களுக்கு வழிகாட்டலாம்... உங்கள் செயல்கள் முதன்மையானவை.

கல்வி என்பது அமைதியையும் கட்டமைக்கிறது. நாம் வழங்கும் ஒவ்வொரு கல்வி உதவித் தொகையும், நாம் ஆதரிக்கும் ஒவ்வொரு குழந்தைப் பருவத்திட்டமும், நாம் நிதியளிக்கும் ஒவ்வொரு வயதுவந்தோர் வகுப்பும் ஓர் அமைதிச்செயல். ரோட்டரி ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இப்படி அமைதியைக் கட்டமைத்துவருகிறது.

எழுத்தறிவுக்கான போரில் அணுகல் மட்டு மில்லை, நியாயத்தன்மையும் முதன்மையானது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எல்லாப் பின்னணிகளைச் சேர்ந்த கற்போரும் தன் ஆற்றலை எட்டும் வாய்ப்பைப் பெறுவதை நாம் உறுதி செய்யவேண்டும். எல்லைகள், மொழிகள், தலைமுறைகளைக் கடந்து நாம் ஒன்றாக நிற்கவேண்டும், கல்வி என்பது சலுகை இல்லை, உரிமை என்று சொல்லவேண்டும்.

நாம் நீடித்த எழுத்தறிவுக்குப் பாடுபடுவதன்மூலம் நன்மைக்காக ஒன்றுகூடுவோம். ஒவ்வொரு குழந்தையும் படிக்கக் கற்றுக்கொள்ளும் ஓர் உலகைக் கனவு காணுவோம். அதன்பிறகு, செயல் வீரர்களான நாம் ஒன்றாகப் பணியாற்றி அந்தக் கனவை நனவாக்குவோம்.

நாம் ஒன்றாகச் சேர்ந்தால், வாழ்க்கைகளை மாற்றலாம், அதைக் கல்வி ஆற்றலில் தொடங்கலாம். நாம் நன்மைக்காக ஒன்றுகூடுகிறோம்.

**ஃப்ரான்ஸஸ்கோ அரேசோ**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்



# மனிதர்கள் மற்றும் பூமியின் பசியைப் போக்குவோம்!

இந்தியர்களாகிய நாம் உறுதியான மந்திரங்களைப் பின்பற்றி வளர்ந்துள்ளோம்: உணவை வீணாக்காதீர்கள், உங்களுக்குத் தேவையான உணவை மட்டும் தட்டில் எடுத்துக்கொள்ளுங்கள் அல்லது தட்டில் உள்ள உணவு அனைத்தையும் சாப்பிட்டுவிடுங்கள். சமீபத்தில் கோல்டு கோஸ்டில் நடைபெற்ற ஆசிய பசிபிக் பிராந்திய ரோட்டரி பத்திரிக்கை ஆசிரியர்கள் மாநாட்டில், ஆஸ்திரேலியாவிலும், உலகெங்கிலும் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு உணவு வீணடிக்கப்படுகிறது என்பதை அறிந்தபோது நான் அதிர்ச்சி அடைந்தேன். ஒவ்வொரு ஆண்டும் 7.6 மில்லியன் டன் உணவு, அதாவது 70 சதவீதம் முழுமையாக சாப்பிடக்கூடியது, பொருளாதாரப்படி கணக்கிட்டால் ஆண்டுக்கு 36.6 பில்லியன் டாலர் மதிப்புள்ள உணவு ஆஸ்திரேலியாவில் வீணடிக்கப்படுகிறது. இவற்றில் பெரும்பகுதி (2.5 மில்லியன் டன்) வீடுகளில் இருந்து வருகிறது.

இதைவிட அதிர்ச்சி தரும் தகவல் என்னவென்றால் உலகில் அனைவருக்கும் தேவையான அளவு உணவு உற்பத்தி செய்யப்படுவதுதான். ஆனால், சோகமான தகவல் என்னவென்றால் மொத்த உணவு உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு, அதாவது ஏறக்குறைய 1.3 பில்லியன் டன்கள் வீணாக்கப்படுகிறது. இதன் மதிப்பு ஆண்டுக்கு 940 பில்லியன் டாலர். இந்த இதழின் அட்டைப்பட கட்டுரை உலகைப் பசுமையாக்குவது மற்றும் பல்வேறு காரணிகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பிலிருந்து பூமியை காப்பாற்றுவது பற்றியது என்பதால் இதை கவனத்தில் கொள்ளுங்கள்: உலகளாவிய பசுமை இல்ல வாயுக்களில் 10 சதவீதம் உற்பத்தி செய்யப்படும் உணவிலிருந்து கிடைக்கிறது. ஆனால், அவை உண்ணப்படுவதில்லை.

இந்த புள்ளி விவரங்களை ஆஸ்திரேலிய சேவை நிறுவனமான ஆஸிஹார்வெஸ்ட் (OzHarvest) வெளியிட்டுள்ளது. இந்த நிறுவனம் பல்பொருள் அங்காடிகள், மளிகைக் கடைகள், உள்ளூர் பேக்கரிகள் உள்ளிட்ட இடங்களிலிருந்து தூக்கியெறியப்படும் உணவுப் பொருள்களை, (அவை உணவுதானியங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளாக இருக்கலாம்.) சமூக சேவை நிறுவனங்கள் மூலம் ஏழைகளுக்கு அப்படியே அல்லது சமைத்த உணவாக வழங்குகிறது. 2024-ல், வலையமைப்புடன்கூடிய 2,400 நன்கொடையாளர் மூலம் 14,000 டன் உணவுகள் மீட்கப் பட்டுள்ளன. ஆஸ்திரேலியன் ரோட்டேரியன்கள் பலர் இந்த அறக்கட்டளையுடன் சில நிகழ்வுகளில் கூட்டுச் சேர்ந்துள்ளனர். OzHarvest சேவை நிறுவனம் 1,500 இதர சேவை நிறுவனத்துடன் இணைந்து (மேலும் 1,000 சேவை நிறுவனங்கள் காத்திருக்கின்றன) தேவையானவர்களுக்கு உணவு வழங்கி வருகிறது. (மேலும் தெரிந்துகொள்ள இந்த இதழில் 24-ம் பக்கத்தை பார்க்கவும்.)


உலகில் வளர்ந்த நாடுகளில்கூட பசிப்பிணியைப் போக்க இதுபோன்ற அறக்கட்டளைகள் செயல்பட்டு வரும் இந்த நேரத்தில், பூமியை பேரழிவிலிருந்து நேரம் பார்க்காமல் சிலர் உழைத்து வருகின்றனர். பூமியை காக்கும் இந்த போராட்டம் மிகச் சிறியதாக இருந்தாலும் அதில் உள்வரும் DG (RID 3192) ரவிசங்கர் டாகோஜு மற்றும் அவரது சக சுற்றுச்சூழல் பாதுகாப்பு போராளிகளான நீல் ஜோசப் (பெங்களூரு ஆர்ச்சார்ட்ஸ் ரோட்டரி சங்கம்), கஜானன் கண்டேல்கோன்கர் (குடல் ரோட்டரி சங்கம்), போன்றவர்கள் இடைவிடாமல் பணியாற்றி மாற்றத்தை உருவாக்கி வருகின்றனர். கர்நாடகம் மற்றும் அவர்களின் சொந்த மாவட்டத்திலிருந்து (3192) தொடங்கி ஒரு கோடி மரங்களை நடுவதற்கான “டகோஜு தன்யாவாத்” திட்டத்தை இயக்கமாக செயல்படுத்த ஆரம்பித்துள்ளனர். இந்த இயக்கம் இப்போது மகாராஷ்டிரம் மற்றும் கோவாவுக்கும் விரிவடைந்துள்ளது. (இதுபற்றி மேலும் தெரிந்துகொள்ள 12-ம் பக்கத்தை பார்க்கவும்.)

அவர்கள் கூறுவதுபோல் ஒவ்வொரு துளியும் முக்கியமானது. மேற்கு வங்க மாநிலம், மால்டாவிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள பாபுக் கிராமப் பஞ்சாயத்துக்கு உட்பட்ட 12 பழங்குடியின கிராமங்களில் சத்தமில்லாமல் பசுமைப் புரட்சி நடந்து வருவதை ஜெய்ஸ்ரீயின் கட்டுரை (பக்: 22) காட்டுகிறது. அங்கு எந்த வீட்டிற்குள் நுழைந்தாலும் ஒரு சிறிய பலா மரம் காற்றில் அசைந்தாடுவதை நீங்கள் பார்க்கலாம். பலா மரங்களை நடுவதற்கான திட்டத்தை மால்டா ரோட்டரி சங்கம் செயல்படுத்தி வருகிறது. சில ஆண்டுகளில் இந்த மரம் பழங்கள் மூலம் பயனாளிகளுக்கு வருமானத்தை கொடுக்கும்.

உலகில் தீமைகள் நீங்கி நன்மைகள் ஏற்பட வேண்டுமானால் அதற்கு நல்ல இதயமும், உதவும் கரங்களும் தேவை.

ரஷீதா பகத்

ADVT.




IDHAYAM | www.idhayam.com | threevee@idhayam.com | Whatsapp : 99447 66661

# RI இயக்குனர் செய்தி



## 1:2:3–க்கு ஆம் என்று சொல்வோம்!

ரோட்டரி என்பது அதன் இதயத்தில் உறுப்பினர்களைக் குடும்பமாக கொண்டுள்ளது. நமது உறுப்பினர்கள் எண்ணிக்கை வலுவாக இருந்தால், நமது திட்டங்கள், பங்களிப்புகள் மற்றும் சமூகத்திற்கு நாம் செய்யும் சேவைகள் வலுவானதாகவும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். ரோட்டரியை ஒரு ரதமாக பார்க்கிறேன். அதன் சக்கரங்கள்தான் நமது உறுப்பினர்கள். சக்கரங்கள் வலுவாக இருந்தால் ரதம் தொய்வில்லாமல் ஓடும். ஆனால், சக்கரங்கள் பலவீனமாக இருந்தால், பயணத்தில் தொய்வு ஏற்படும். எனவேதான் உறுப்பினர் சேர்க்கை என்பது நமது முதல் முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

இந்த ரோட்டரி ஆண்டின் மூன்றாவது மாதத்தில், ஒரு எளிமையான ஆனால், சக்திவாய்ந்த யோசனையை ஏற்றுக்கொள்வோம். 1:2:3-க்கு ஆம் என்று சொல்வோம். ஒவ்வொரு ரோட்டேரியனும் 2 ரோட்ராக்டர்கள் மற்றும் 3 இன்டராக்டர்களை நமது சங்கத்தில் ஈடுபடுத்துவோம். இன்று நாம் இளைஞர்களை ஊக்கப்படுத்தினால், அவர்கள் நாளை இயல்பாகவே ரோட்டரியில் காலடி எடுத்து வைப்பார்கள். இப்படித்தான் நாம் நிலைத்தன்மையை உறுதி செய்கிறோம், தொடர்ச்சியை உருவாக்குகிறோம் மற்றும் நமது இயக்கத்தை வாழ்நாள் முழுவதும் செயல்பட வைக்கிறோம்.

இன்றைய அளவில் உலகில் இந்தியாதான் இரண்டாவது பெரிய ரோட்டரி நாடாகும். இது நாம் மிகவும் பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால், நாம் இங்கேயே நின்றுவிட முடியாது. முன்னோக்கி நகர வேண்டும். தற்போதுள்ள 4,800-க்கும் மேலான சங்கங்கள் ஒவ்வொன்றும் இரண்டு மாதங்களில் ஒருவர் என்ற கணக்கில், அதாவது வருடத்துக்கு 6 புதிய உறுப்பினரைச் சேர்த்தால் போதுமானது. அதை பெருக்கி, ஒருங்கிணைத்தால் இந்த ஆண்டு மட்டும் நாம் 28,800 புதிய ரோட்டேரியன்களை வரவேற்கலாம். இந்த வகையில் பார்த்தால், நமது நான்கு மண்டலங்களும் வரலாற்று மைல்கல்லை எட்ட முடியும். 2025–26-ல் 2 லட்சம் உறுப்பினர்களும், 2026–27-ல் 2.25 லட்சம் உறுப்பினர்களையும் சேர்க்க முடியும். இந்திய ரோட்டேரியன்களின் ஒற்றுமையையும் பலத்தையும் ரோட்டரி உலகத்திற்கு இந்த சக்திவாய்ந்த செய்தி மூலம் உணர்த்த முடியும்.

RAG (Red, Amber, Green) பகுப்பாய்வு, நாம் இன்று எங்கு நிற்கிறோம் என்பதை நமக்கு சொல்லிவிடும். மேலும் எதிர் காலத்தை திட்டமிடுவதற்கு தலைவர்களுக்கு உதவும். சிவப்பு மண்டலம்: 25-க்கும் குறைவான உறுப்பினர்கள் உள்ள சங்கங்கள்; ஆம்பர்: 25 முதல் 50 உறுப்பினர்கள் கொண்ட சங்கங்கள்; பச்சை: 50 மற்றும் அதற்கு மேலான உறுப்பினர்கள் கொண்ட சங்கங்கள்; சூப்பர் பச்சை மண்டலம்: 75 மற்றும் அதற்கு மேலான உறுப்பினர்கள் கொண்ட சங்கங்கள்.

ஒவ்வொரு சங்கத்தின் தலைவர், மாவட்ட ஆளுநர்கள், பிராந்திய மற்றும் மண்டலத் தலைவர்கள் குறைந்தபட்சம் ஒரு மண்டலத்தை உயர்த்திய பிறகு, அடுத்து வரும் தலைவருக்கு தலைமைப் பொறுப்பை ஒப்படைக்க உறுதி யேற்க வேண்டும். நீங்கள் உண்மையான வளர்ச்சியையும், அதிக உறுப்பினர்கள் எண்ணிக்கையைக் காட்டும்போது, அது நீங்கள் பெருமைப்படக்கூடியதாகவும் நீடித்த மரபை கட்டிக்காப்பதாகவும் இருக்கும்.

மேலும், புதிய உறுப்பினர்களை சேர்ப்பதில் கவனம் செலுத்தும்போது ஏற்கெனவே உள்ள உறுப்பினர்களை தக்கவைப்பதிலும் போதிய கவனம் செலுத்த வேண்டும். ரோட்டரியை அதன் உறுப்பினர்களுக்கு அர்த்தமுள்ளதாக மாற்றுவதில் ஒவ்வொரு சங்கம் மற்றும் மாவட்டத்துக்கு மிகுந்த பொறுப்பு உள்ளது. மக்கள் இணைந்திருப்பதை உணரும்போது, அவர்களின் பங்களிப்பில் மாற்றம் ஏற்படுவதை காணும்போது அவர்கள் விலகிச் செல்ல மாட்டார்கள். ரோட்ராக்ட் மற்றும் இன்டராக்ட் மூலம் இளைஞர்கள் சேவையின் மகிழ்ச்சியை அனுபவிக்கும் போது ரோட்டரி தான் தங்களின் எதிர்காலம் என்பதை அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

1:2:3-க்கு ஆம் என்று சொல்லுங்கள், வளர்ச்சிக்கும், ரோட்டரிக்கு ஆம் என்று சொல்லுங்கள்.

**M முருகானந்தம்**
RI இயக்குனர் 2025–27

TRF
தலைவரிடமிருந்து...



# எழுத்தறிவு ஒரு மனித உரிமை

கல்வியானது ஏழ்மைச் சுழலை உடைக்கிறது, வாய்ப்புக் கதவுகளைத் திறக்கிறது, தனி நபர்கள் தங்கள் சமூகங்களை மாற்ற ஆற்றலளிக்கிறது. ஆனால், கல்வி தனியாக அமைவதில்லை. நாம் கல்வி, நலம், தூய நீர், பொருளாதார வாய்ப்பு, தாய், சேய் நலம், சுற்றுச்சூழலையும் சரிசெய்யவேண்டும். அதனால்தான் ரோட்டரி இந்தக் கவனப் பகுதிகளைக் கொண்டுள்ளது. நீடித்த மாற்றத்துக்கு முழுமையான அணுகுமுறை வேண்டும். நாம் ரோட்டரி அறக்கட்டளை வழியாக இந்தப் பகுதிகளில் சேர்ந்து பணியாற்றும்போது, நாம் சமூகங்களை வளங்குன்றாமலும் கண்ணியத்துடனும் உயர்த்துகிறோம்.

இன்று நான் RC ரெட் டீர், அல்பெர்ட்டா-வைச் சேர்ந்த லின்னெ பரடிஸ் அவர்களை எழுத்தறிவுக்கான தன் பேரார்வத்தைப் பகிர்ந்துகொள்ள அழைக்கிறேன்: நான் பத்தாண்டுகளுக்கு முன்பாகச் சான் இக்னாசியோ, பெலிஜெ, ரோட்டரி சங்கத்துடன் இணைந்தபோது, நாங்கள் கற்றல் வழிகாட்டுதலை மேம்படுத்த முயன்றோம். ஆனால், இந்தப் பயணம் எவ்வளவு தொலைவுக்குச் செல்லும் என எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

2011 முதல் Literacy Alive! (உயிர்ப்புள்ள எழுத்தறிவு!)-க்கு 8 ரோட்டரி அறக்கட்டளை பன்னாட்டு நல்கைகள் ஆதரவளித்துள்ளன. நாங்கள் ஒலியியல், அறிவியல் அடிப்படையிலான ஒரு நேரடி அணுகுமுறையைப் பயன்படுத்தி, ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையை மாற்றினோம், மாணவர்கள் உண்மையில் எப்படிக் கற்கிறார்கள் என்பதில் கவனம் செலுத்தினோம். 6 மாதங்களுக்குக் கற்றல் திறன் மேம்பாட்டைப்பற்றிய தரவுகளை நாங்கள் திரட்டினோம்.

ஆசிரியர்கள் புதிய வழிமுறைகளை அன்றாடக் கற்றலில் ஒருங்கிணைத்தபிறகு, அந்தத் திட்டம் விரைவாக வளர்ந்தது. பெலிஜெ கல்வி அமைச்சகம் இதைக் கவனித்தது. இன்று, 1,300க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இதில் பயிற்சி பெற்றுள்ளார்கள், 20,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் இதன்மூலம் பலன் பெற்றுள்ளார்கள். நாங்கள் 90%க்கு மேற்பட்ட வெற்றி விகிதங்களை எட்டினோம். பல மாணவர்கள் ஐந்தே மாதங்களில் ஓராண்டுக்கும் மேற்பட்ட முன்னேற்றத்தைப் பெற்றார்கள்.

இப்போது, பெலிஜெ தொடக்கப் பள்ளிகளில் இந்தத் திட்டம் கட்டாயமாகிவிட்டது. மாணவர்களின் வாழ்க்கையைத் தங்களால் மாற்றமுடியும் என்று தங்களுக்குத் தன்னம்பிக்கை வந்துள்ளதாக ஆசிரியர்கள் சொல்லும்போது நான் மிகவும் நெகிழ்கிறேன்." லின்னெ-யின் கதை அறக்கட்டளை நல்கைகளின் ஆற்றலை எடுத்துக்காட்டுகிறது. Literacy Alive! திட்டம் 6 ரோட்டரி சங்கங்கள், 3 நாடுகளைச் சேர்ந்த கூட்டுப்பணிகளின்மூலம், ரோட்டரி எவ்வளவு நன்றாக அமைப்பு மாற்றத்தை உண்டாக்குகிறது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. இந்த மாதமும், ஒவ்வொரு மாதமும் அறக்கட்டளைக்கு உதவுவதன் மூலம் நீங்கள் உங்கள் பேரார்வத்தைச் செயல்படச் செய்யலாம்.

**ஹோல்கர் நாக்**
TRF அறங்காவலர் தலைவர்


**ஆளுநர் குழு**

| | |
|---|---|
| RID 2981 | லியோன் J |
| RID 2982 | சிவசுந்தரம் P |
| RID 3000 | கார்த்திக் J |
| RID 3011 | ரவீந்தர் குக்னானி |
| RID 3012 | அமிதா அனில் மொஹிந்த்ரு |
| RID 3020 | கல்யாண் சக்ரவர்த்தி Y |
| RID 3030 | தியானேஷ்வர் P ஷேவாலே |
| RID 3040 | சுஷில் மல்ஹோத்ரா |
| RID 3053 | நிஷா ஷெகாவத் |
| RID 3055 | நிகம்குமார் L சௌத்ரி |
| RID 3056 | பிரக்யா மேத்தா |
| RID 3060 | அமர்தீப் சிங் புனெட் |
| RID 3070 | ரோஹித் ஓபராய் |
| RID 3080 | ரவி பிரகாஷ் |
| RID 3090 | பூபேஷ் மேத்தா |
| RID 3100 | நிதின்குமார் அகர்வால் |
| RID 3110 | ராஜன் வித்யார்த்தி |
| RID 3120 | அசுதோஷ் அகர்வால் |
| RID 3131 | சந்தோஷ் மதுகர் மராத்தே |
| RID 3132 | சுதீர் V லத்தூர் |
| RID 3141 | மணீஷ் மோத்வானி |
| RID 3142 | ஹர்ஷ் வீரேந்திர மகோல் |
| RID 3150 | ராம் பிரசாத் S V |
| RID 3160 | ரவீந்திரா M K |
| RID 3170 | அருண் டேனியல் பண்டாரே |
| RID 3181 | ராமகிருஷ்ண P கண்ணன் |
| RID 3182 | பலாக்ஷா K |
| RID 3191 | ஸ்ரீதர் B R |
| RID 3192 | எலிசபெத் செரியன் பரமேஷ் |
| RID 3203 | தனசேகர் B |
| RID 3204 | பிஜோஷ் மானுவல் |
| RID 3205 | ரமேஷ் G N |
| RID 3206 | செல்லா K ராகவேந்திரன் |
| RID 3211 | டினா ஆண்டனி குன்னும்கல் |
| RID 3212 | தினேஷ் பாபு J |
| RID 3231 | சுரேஷ் V |
| RID 3233 | தேவேந்திரன் D |
| RID 3234 | வினோத்குமார் சரோகி |
| RID 3240 | காமேஸ்வர் சிங் எலங்பம் |
| RID 3250 | நம்ரதா |
| RID 3261 | அமித் ஜெயஸ்வால் |
| RID 3262 | மனோஜ்குமார் திரிபாதி |
| RID 3291 | ரமேந்து ஹோம்சௌதுரி |



அச்சு மற்றும் பதிப்பாளர் **PT பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**



கட்டுரைகளை திருத்தவோ/சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.



Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

M முருகானந்தம் RID 3000
RI Director &
Chairman, Rotary News Trust

KP நாகேஷ் RID 3191
RI Director

Dr பரத் பாண்ட்யா RID 3141
TRF Trustee

ராஜேந்திர K சாபூ RID 3080
கல்யாண் பானர்ஜி RID 3060
சேகர் மேத்தா RID 3291
அசோக் மகாஜன் RID 3141
P T பிரபாகர் RID 3234
Dr மனோஜ் D தேசாய் RID 3060
C பாஸ்கர் RID 3000
கமல் சங்வி RID 3250
Dr மகேஷ் கோட்பாகி RID 3131
A S வெங்கடேஷ் RID 3234
ராஜு சுப்ரமணியன் RID 3141
அனிருதா ராய்சௌத்ரி RID 3291
குலாம் A வானதி RID 3141

**செயற்குழு உறுப்பினர்கள்** (2025–26)

ரோஹித் ஓபராய் RID 3070
தலைவர், ஆளுநர் குழு

தியானேஷ்வர் ஷேவாலே RID 3030
துணைத்தலைவர், ஆளுநர் குழு

M K ரவீந்திரா RID 3160
செயலாளர், ஆளுநர் குழு

செல்லா K ராகவேந்திரன் RID 3206
பொருளாளர், ஆளுநர் குழு

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**TRF அறங்காவலர் செய்தி**



# தாராள மனப்பான்மையை நீடித்த மாற்றமாக மாற்றுவோம்

ரோட்டரி அறக்கட்டளை ஒவ்வொரு நாளும் வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. போலியோ ஒழிப்பின் இறுதிக்கட்டத்துக்கு உலகை கொண்டு வருவது முதல், சமூகத்துக்கு தூய்மையான குடிநீர், ஏழை குழந்தைகளுக்கு கல்வி மற்றும் மகளிர் மேம்பாடு வரை அதன் செயல்பாடுகள் சர்வதேச அளவில் விரிவடைந்து நீடித்த பலனை கொடுத்து வருகின்றன.

உலகளாவிய போலியோ ஒழிப்பு முயற்சியில் TRF முக்கிய கூட்டாளியாகச் செயல்பட்டு வருகிறது. 1985 ஆம் ஆண்டு முதல் ரோட்டரி, நோயை 99.9 சதவீதம் குறைத்துள்ளது. சுமார் 3 பில்லியன் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும் லட்சக்கணக்கானவர்களை போலியோ நோய் தாக்காமல் தடுத்துள்ளது. சர்வதேச அளவில் மோதல்களை தடுத்து மத்தியஸ்தம் செய்வதற்கும், சமூகத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தவும், அமைதி மற்றும் நல்லிணக்கத்தை வலியுறுத்தவும் அமைதிக்காவலர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் மோதல்களுக்கு தீர்வுகண்டு அமைதியை நிலைநாட்ட TRF உதவி வருகிறது.

TRF-ன் உயர் செயல்திறன் (90 சதவீத நிதிகள் நேரடியாக திட்டங்களுக்கு செலவிடப்படுகின்றன) நன்கொடையாளர்களிடம் அதிகபட்ச தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களிடம் பரஸ்பரம் நம்பிக்கையை வளர்ப்பதை உறுதி செய்கின்றன. அதன் உலகளாவிய வலையமைப்பு தொடர்பு அதன் எல்லையையும் செயல்திறனையும் அதிகரிக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் திட்டங்கள் மூலம் சமூகம் பெரும்பலன்களை அடைந்து வந்தாலும் அவற்றின் மீது அதிக கவனம் செலுத்துவதன் மூலம் அறக்கட்டளை மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

2024–25 ரோட்டரி ஆண்டில் இந்தியாவில் உள்ள மாவட்டங்கள் TRF-க்கு 38.2 மில்லியன் டாலருக்கு மேல் பங்களிப்புச் செய்துள்ளன. இது TRF-மீதான நமது நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகும். DG சேதன் தேசாய் தலைமையிலான RID 3141-தான் உலகில் முதலிடத்தை வகிக்கிறது. மூன்று இந்திய மாவட்டங்கள் உலகளவில் முதல் 10 இடங்களில் இடம்பெற்றுள்ளது. 13 மாவட்டங்கள் TRF பங்களிப்பில் 1 மில்லியன் டாலர் இலக்கை தாண்டியுள்ளன. இது உண்மையிலேயே குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த சாதனைக்காக, இந்திய ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்டேரிய குடும்பத்தினரின் அர்ப்பணிப்பு மற்றும் தாராள மனப்பான்மைக்காக நான் தலைவணங்குகிறேன். 2024–25 மாவட்ட ஆளுநர்கள் மற்றும் அவர்களின் TRF குழுவினருக்கும், மண்டல மண் தலைமைத்துவ குழுவினருக்கும் பாராட்டுகள். RRFCs, ARRFCs, E/MGAs மற்றும் EPNCs ஆகியோரின் இந்த சாதனைகளால்தான் உலகில் 2-வது பங்களிப்பாளராக இந்தியா உயர்ந்து நிற்கிறது. இதற்காக உங்கள் அனைவருக்கும் நன்றி.

ஆனால், நாம் உச்சத்தில் இருக்கும் போது அதை தக்கவைக்க கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். 2025–26 ஆம் ஆண்டுக்கான TRF குழுக்கள் தங்களது பெருமுயற்சிகள் மூலம் சிறந்த மற்றும் துணிச்சலான திட்டங்களுக்காக TRF-ஐ ஆதரிக்க வேண்டும். நாம் முன்னோக்கிச் செல்லும்போது நன்மைக்காக ஒன்றுபட்டு செயல்படுவோம்.

**பரத் பாண்ட்யா**
TRF அறங்காவலர்

Rotary PEOPLE OF ACTION

# பசுமையான மற்றும் அழகான கிரகத்திற்கான வேரூன்றல்

ரஷீதா பகத்



ரோட்டரி உலகில் உள்ள பலரிடமிருந்து RI மாவட்டம் 3192-ன் தேர்ந்தெடுக்கப்பட்ட DG ரவிசங்கர் டகோஜுவை அவரது நேர்மை மற்றும் எளிமையான பேச்சு ஆகியவை தனித்து காட்டுகின்றது. டகோஜு தன்யாவாத், ரோட்டரி கோட்டி நாட்டி, நரஹரி தன்யாவாத் போன்ற திட்டங்கள் பற்றி எனது மின்னஞ்சல் பெட்டியில் பல விழிப்பூட்டல்களைப் பெற்ற பிறகு, அவை அனைத்தும் வெவ்வேறு இடங்களிலும் வெவ்வேறு மாநிலங்களிலும் மரங்களை நடுவதோடு தொடர்புடையவை என்றும், மேலும் ஒரு பொதுவான காரணியுடன் – டகோஜுவின் ஈடுபாடு இருப்பதையும் அறிந்தேன். எனது குழப்பத்தை நீக்க நான் அவரை அணுகினேன்.

மறுமுனையில் இருந்து நான் ஒரு தாக்குதலைப் பெற்றேன் – நிச்சயமாக எதிர்பார்க்கப்பட்டது – நமது தலைமுறை, பேராசை மற்றும் சிந்தனையற்ற இன்பத்திற்காக எவ்வாறு ஒரு சுற்றுச்சூழல் பேரழிவை ஏற்படுத்தியது மற்றும் நமது கிரகத்தை சீரழித்தது என்பது பற்றியது. 2018-ல் ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு அவர் உறுதியளித்த ரூ.100 கோடி நன்கொடையின் ஒரு நல்ல பகுதி நமது கிரகத்தை பசுமையாக்க செல்கிறது.

கோட்டி நட்டி என்ற தலைப்பு ஒரு கோடி மரக்கன்று களை நடுவதைக் குறிக்கிறது; எனவே இந்த முயற்சி தனிநபர்களின் வாழ்க்கையில் என்ன மாதிரியான மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது என்று டகோஜுவிடம் கேட்டேன். “இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் இதுபோன்ற ஒரு திட்டத்தின் மூலம் நீங்கள் மாயா ஜாலத்தையோ அல்லது வாழ்க்கை மாற்றத்தையோ எதிர்பார்க்க முடியாது. நாங்கள் பல்வேறு வகையான மரங்களை நட்டுள்ளோம் பழ மரங்கள், மற்றும் அகர்பத்திகளை தயாரிக்க பயன்படுத்தப்படும் ஒரு சிறப்பு வகை மூங்கில், இது இப்போது சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. ஒரு டன் விலை சுமார் 8 லட்சம் ரூபாய். பெங்களூருவில் இருந்து சுமார் 195 கி.மீ தொலைவில் உள்ள சித்ரதுர்கா மாவட்டத்தில் உள்ள சல்லகெரேயில் நடந்து வரும் 1,501 ஏக்கர் காடுவளர்ப்பு திட்டத்தின் மூலம் பழங்குடிப் பெண்கள் பயனடைய

வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். சுயஉதவி குழுக்கள் அமைக்கப்பட்டு, தேனீ வளர்ப்பு போன்ற வாழ்வாதார நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும். ஆனால் இவை அனைத்தும் நடக்க மரங்கள் வளர வேண்டும்... சுமார் 100 மான்கள், மயில்கள், முயல்கள், காட்டுப்பன்றி போன்றவை ஏற்கனவே வந்துவிட்டன, ஆனால் மனித வாழ்க்கையால் ஏற்படும் தாக்கத்திற்கு இன்னும் சில ஆண்டுகள் ஆகும்.”

பெங்களூருக்கு அருகிலுள்ள கோலார் தங்க வயல்களின் சயனைடு குப்பைகளில், டகோஜு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் மற்றொரு ஆர்வமுள்ள ஆதரவாளரான நீல் ஜோசப்புடன் கடந்த சில ஆண்டுகளாக ஒரு பெரிய பசுமையாக்கும் திட்டத்தை ஏற்கனவே செயல்படுத்தியுள்ளார். இங்கு வசிப்பவர்களின் ஆரோக்கியத்தில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முன்னதாக, நகரம் முழுவதும் வீசப்பட்ட சயனைடு தூசு, சிறுநீரக செயலிழப்பு, நுரையீரல் மற்றும் பிற வகை புற்றுநோய்கள், கடுமையான ஆஸ்துமா போன்ற பாதகமான உடல்நல விளைவுகளைத் தூண்டி, பேரழிவை ஏற்படுத்தியது. ஆனால் டகோஜு (இவர் பின்னர் RC பெங்களூருக்கு மாறிவிட்டார்) மற்றும் ஜோசப் ஆகியோரால் தலைமை தாங்கப்பட்ட RC பெங்களூரு ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டேரியர்கள், 20 ஏக்கர் நிலப்பரப்பில், மரங்கள், புதர்கள் மற்றும் புற்களை நடுவதன் மூலம், அந்தப் பகுதி முழுவதும் ஈரப்பதம் தக்கவைக்கப்படுவதை உறுதி செய்தனர். இதனால், மிகவும் வறண்ட குப்பை களிலிருந்து தூசி நகரத்திற்குள் வீசவில்லை. “நுரையீரல் புற்றுநோயின் பாதிப்பு குறைந்துள்ளதாகவும், மக்களின் பொது ஆரோக்கியம் மேம்பட்டுள்ளதாகவும் இப்போது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது,” என்கிறார் KGF-ஐ சேர்ந்த ஜோசப்.

‘கோட்டி நாட்டி’ என்று பெயரிடப்பட்டு, இந்தியா முழுவதும் ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்படும் இந்தத் திட்டத்தின் கீழ், 48.2 லட்சம் மரக்கன்றுகள் ஏற்கனவே நடப்பட்டுள்ளன, மேலும் மூன்று லட்சம் விதை பந்துகளும் (இவற்றின் வெற்றி விகிதம் சுமார் 25 சதவீதம்) வீசப்பட்டுள்ளன என்றார். KGF-ல் மட்டும் 52,000 மரங்கள் நடப்பட்டுள்ளன.

இப்போது சல்லகெரேக்கு திரும்புவோம், அங்கு 1,501 ஏக்கர் வனப் பகுதியில் பல மாற்றங்கள் இப்போது காணப்படுகின்றன. இத்திட்டத்திற்கு சுமார் 8.5 கோடி ரூபாய் செலவாகும், இதில் 6.5 கோடி ரூபாய் பவோலா ரவிசங்கர் டாகோஜு ஃபௌண்டேஷனன் மூலம் TRF வழியாக வருகிறது. இது இப்போது இந்தியாவின் ரோட்டரியின் மிகப்பெரிய சுற்றுச்சூழல் தலையீடுகளில் ஒன்றாகப் பாராட்டப்படுகிறது. இங்கு சுமார் 1,00,000 மரங்கள் ஏற்கனவே 720 ஏக்கரில், அதாவது மொத்த திட்டப் பகுதியில் கிட்டத்தட்ட பாதியில் நடப்பட்டுள்ளன. முற்றிலும் தரிசு நிலமாகவும், மழை பற்றாக்குறை உள்ள பகுதியாகவும் இருந்த இந்த இடத்தில் பெரிய அளவில் மரங்கள் நடப்பட்டதன் காரணமாக, 40 ஆண்டுகளாக வறண்டு கிடந்த மூன்று ஏரிகள் இப்போது நிரம்பி வழிகின்றன. ஏற்கனவே உருவாக்கப்பட்ட பசுமை காரணமாக மான், காட்டுப்பன்றி, மயில்கள் மற்றும்



RID 3192 DGE *ரவிசங்கர் டகோஜு* RC *பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் உறுப்பினர் நீல் ஜோசப் உடன்.*



டகோஜு தன்யவாத் திட்டத்தின் கீழ் ரோட்டரி சங்கங்கள் வழங்கிய மரக்கன்றுகளை சுமந்து செல்லும் பெண்கள்.

முயல்கள் போன்ற காட்டு விலங்குகள் இந்த பகுதிக்கு திரும்பி வந்துள்ளன. “அது என்னைப் பொறுத்தவரை ஒரு மாயாஜாலம்… நீங்கள் உடன் படவில்லையா,” என்று டகோஜு கேட்கிறார்.

இந்தத் திட்டத்தைப் புரிந்து கொள்ள, அவர் நம்மை மைசூர் மகாராஜா சல்லகெரேயில் உள்ள உள்ளூர் பழங்குடியினருக்கு 18,000 ஏக்கர் நிலத்தை பரிசாக வழங்கிய காலத்திற்கு அழைத்துச் செல்கிறார். அந்த மகாராஜா பிரிட்டிஷாருக்கு எதிரான கொரில்லா வகை போரில் அவருக்கு உதவிய ஒரு குறிப்பிட்ட வகை உள்ளூர் பசுக்களைப் பாதுகாக்க மற்றும் வளர்க்க இந்த நிலத்தை வழங்கினார். “ஆனால் பழங்குடியினர் படிப்படியாக அனைத்து மரங்களையும் வெட்டி விறகாகப் பயன்படுத்தினர், எனவே நிலம் இறுதியில் முற்றிலும் தரிசாக மாறியது. பின்னர், அரசு இஸ்ரோ, இந்திய அறிவியல் கழகம் போன்றவற்றுக்கு அதிலிருந்து பெரிய நிலப்பரப்புகளை வழங்கியது. 1,501 ஏக்கர் நிலம் மட்டுமே எஞ்சியிருந்தபோது, கர்நாடகாவில் ஒரு சிறந்த நீதிபதியான சல்தானா, அரசிடம் கேட்டார்: ‘மகாராஜாவின் நிலத்தை இப்படி விநியோகிக்க உங்களுக்கு யார் உரிமை கொடுத்தார்கள்? இந்த விநியோகத்தை நிறுத்துங்கள்; நீங்கள் நிறுத்தவில்லை என்றால், நீங்கள் இவ்வளவு தாராளமாக வழங்கிய அனைத்து நிலங்களையும் திரும்பப் பெறும் தீர்ப்பை நான் வழங்குவேன் என்றார். அவர் சுற்றுச்சூழலின் உண்மையான பாதுகாவலர்” என்று டகோஜு கூறுகிறார்.

இந்த நிலம் பின்னர் கர்நாடக தோட்டக்கலைத் துறைக்கு வழங்கப்பட்டது, இது உள்ளூர் தீனா பகத் சேவா அறக்கட்டளைக்கு மரங்களை நட்டு நிலத்தை பசுமையாக்கும் பொறுப்பை அளித்தது, இந்த அறக்கட்டளையை தீனா பகத் சுவாமிஜி நடத்தி வருகிறார். இந்த பகுதியில் வசிக்கும் பழங்குடியினருக்கு நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் வாழ்வாதாரத்தை உருவாக்குவதற்கும் இந்த பொறுப்பு வழங்கப்பட்டது. “பழைய பாலார் நதியை புதுப்பிக்கும் எங்கள் திட்டத்தைப் பற்றி சுவாமிஜி கேள்விப்பட்டு, தரிசு நிலத்தை ஒரு செழிப்பான சுற்றுச்சூழல் அமைப்பாக மாற்ற எங்களுடன் கூட்டாக பணியாற்ற எங்களை அணுகினார்.”

பின்னர் சேவா அறக்கட்டளை (இது ஒரு வித்யாஸ்ரமத்தை நடத்துகிறது, யோகா கற்பிக்கிறது மற்றும் உள்ளூர் பழங்குடியினருக்கு மூலிகை தாவரங்கள் மற்றும் மூலிகைகளிலிருந்து ஆயுர்வேத மருந்துகளை தயாரிக்கிறது), மற்றும் 2020-ல் டகோஜு, ஜோசப் (அவர் அதன் அறங்காவலர் மற்றும் செயலாளர்களில் ஒருவர்) மற்றும் RI இயக்குநர் K P நாகேஷ் ஆகியோரால் தொடங்கப்பட்ட ரோட்டரி சுற்றுச்சூழல் அறக்கட்டளை (REF) ஆகியவற்றுக்கு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம்

*பெல்காம் ரோட்டரியினர் வழங்கிய மரக்கன்றுகளுடன் பள்ளி மாணவிகள்.*






*RC கூடல் உறுப்பினர்களுடன் DGE டகோஜு மற்றும் ஜோசப். கஜானன் கண்டால்கோங்கர் (இடமிருந்து 4வது) மற்றும் சங்கத் தலைவர் ராஜீவ் பவார் (இடமிருந்து 5வது) ஆகியோரும் உள்ளனர்.*

கையெழுத்தானது. RC பெங்களூரு ஆர்ச்சர்ட்ஸ் மற்றும் ஜோசப்பின் சொந்த நிறுவனமான ஹேப்பினஸ் இன் டிரான்சிட் இந்த பசுமையாக்கும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

ஏற்கனவே 720 ஏக்கரில் நடப்பட்ட ஒரு லட்சம் மரங்கள் அனைத்தும் உள்ளூர் இனங்கள், கொய்யா, மாம்பழம், நெல்லிக்காய், சீதாப்பழம் மற்றும் பாரம்பரிய மருத்துவ தாவரங்கள் போன்ற பழ மரங்கள் என்று ஜோசப் கூறுகிறார். திட்டச் செலவின் ஒரு பகுதி, டகோஜுவின் TRF பங்களிப்புடன் RC ஆர்ச்சர்ட்ஸ் செய்த ரூ.1.41 கோடி GG-யிலிருந்து வந்தது, மேலும் ரூ.1.3 கோடி REF-லிருந்து வந்தது, இது டகோஜு மற்றும் ஜோசப்பின் நிறுவனத்தின் கூட்டுப் பங்களிப்பாகும், “இது சுற்றுச்சூழல் தொடர்பான காரணங்களுக்காக லாபத்தை மீண்டும் முதலீடு செய்ய அவர் தொடங்கினார்,” என்கிறார் டகோஜு.

இந்தத் திட்டத்தின் தன்யாவாத் (நன்றி) பகுதியை விளக்கி, நாம்




*ரயான் இன்டர்நேஷனல் பள்ளிகளின் மாணவர்கள் மரம் நடும் இயக்கத்தில் பங்கேற்கிறார்கள்.*



வாழும் பகுதிகளுக்கு பசுமை அளிப்பது மற்றும் நிலையான சுற்றுச்சூழல் அமைப்புகளை உருவாக்குவதில் எப்போதும் ஆர்வமாக இருக்கும் டகோஜு கூறுகிறார், "2024-ல், ஒரு எளிய ஆனால் நேர்மையான யோசனை என் மனதில் தோன்றத் தொடங்கியது... மரங்களை நடுவது என்பது ஒரு சுற்றுச்சூழல் செயல் மட்டுமல்ல, நமது பூமித்தாய்க்கு அவள் எண்ணற்ற பரிசுகளுக்காக ஒரு மனமார்ந்த நன்றியை வெளிப்படுத்துவதாகும். நாம் பிறந்த தருணத்திலிருந்து நம்மில் ஒவ்வொருவரையும் வளர்க்கும் சமூகத்திற்கும் நன்றி செலுத்துவதாகும்."

இந்த யோசனை டகோஜு தன்யாவாத்தாக மலர்ந்தது. இந்த பசுமையாக்கும் பணியில் அவருடன் ஒரு ஆர்வமுள்ள ரோட்டேரியர்களின் குழு இணைந்து பணியாற்றுகிறது. நச்சுத்தன்மை வாய்ந்த, சுரங்கத்தால் சீரழிக்கப்பட்ட நிலம் தொடர்ச்சியான காடு வளர்ப்பு மூலம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்ட KGF-ல் சயனைடு மேடுகளுக்கு புத்துயிர் அளித்ததன் மூலம் தொடங்கிய இந்த பயணம், ஒரு செழிப்பான கூட்டாண்மையாக வளர்ந்தது, இது ரோட்டரி கோட்டி நாட்டி என்ற லட்சிய முயற்சியாக மாறியது, இது பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடுவதற்கும் 8,000 கிராமப்புற வாழ்வாதாரங்களை மீட்டெடுப்பதற்கும் ஒரு பெரிய அளவிலான முயற்சியாகும்.

"இது வளர்ந்து கொண்டே இருக்கும் ஒரு இயக்கம்; கடந்த ஆண்டு காடு வளர்ப்பு இயக்கம் கோவா மற்றும் மகாராஷ்டிராவிற்கு பரவியது, மேலும் வழியில் டகோஜுவின்

## ஒரு பிரகிருதி புருஷர்



*DGE டகோஜு, மந்திராலயத்தின் சுபுதேந்திர சுவாமிஜி, நீல் ஜோசப், டகோஜுவின் வணிக கூட்டாளி நரஹரி மற்றும் செல்லகேரே (கர்நாடகா) தீனா பகத் சுவாமிஜி.*

*சல்லகெரே நிலத்திற்காக DGE ரவிசங்கர் டகோஜுவுடன் ஏன் சேர்ந்தார் என்று நான் சுவாமி தீனா பகத்திடம் கேட்டபோது, அவர் புன்னகைத்து, "நான் உண்மையில் அவரை பிரகிருதி புருஷ் (இயற்கையின் குழந்தை) என்று அழைக்கிறேன்; அவர் மேற்கொள்ளும் முன்முயற்சிகளை எல்லோராலும் செய்ய முடியாது... ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அத்தகைய தனிநபர்கள் ஒரு நீண்ட இடைவெளிக்கு ஒரு முறை மட்டுமே பிறக்கிறார்கள்."*

*யோகா கற்பித்தல், ஆயுர்வேத மருந்துகளை தயாரித்து விநியோகித்தல் போன்றவற்றில் நீண்ட காலமாக உள்ளூர் பழங்குடியினருடன் பணியாற்றி வரும் சுவாமிஜி கூறுகிறார், "இது தரிசு நிலமாக இருந்ததால் தங்கள் குழந்தைகளுடன் குடும்பங்கள் அருகிலுள்ள நகரங்களுக்கு தொழிலாளர்களாக வேலை செய்ய குடிபெயர்ந்தனர். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரோட்டேரியர்களால் நடப்பட்ட மரங்களுக்கு நன்றி, நல்ல மழை பெய்து வருகிறது; நேற்றிரவு கூட, நல்ல மழை பெய்தது, 40 ஆண்டுகளுக்கும் மேலாக வறண்டு கிடந்த மூன்று ஏரிகளும் இப்போது தண்ணீரால் நிரம்பி வழிகின்றன."*

*"சுவாமிஜியின் ஜீப் அந்த ஏரிகளில் ஒன்றின் அருகே ஈரப்பதம் நிறைந்த நிலத்தில் சிக்கி, நிறைய உதவியுடன் வெளியே இழுக்கப்பட்டது" என்று டகோஜு சிரிக்கிறார். இந்த திட்டத்தின் கீழ், விலங்குகள் உள்ளே வராமல் இருக்க 5–6 அடி ஆழத்தில் பள்ளங்கள் தோண்டி, கள்ளிச் செடிகளை நடுவது மூலம் 30 கி.மீ-க்கு சமமான ஒரு உயிரியல் வேலி உருவாக்கப்பட்டு வருகிறது," என்று அவர் மேலும் கூறுகிறார்.*



வணிக பங்குதாரர் நரஹரியும் இணைந்தார், எனவே இதன் ஒரு கூறு நரஹரி தன்யாவாத்தாக மாறியது, இது ஆந்திராவின் மந்திராலயா ஆன்மீக மையத்தை பசுமையாக்கும் பணியாகும்," என்று ஜோசப் மேலும் கூறுகிறார்.

உலகை முடிந்தவரை பசுமையாக்க வேண்டும் என்ற தனது தேடலில், டகோஜு மற்றொரு சுற்றுச்சூழல் ஆர்வலரான கஜானன் கண்டேல்கோன்கரைக் கண்டுபிடித்தார், அவர் RC கூடலின் கடந்தகால தலைவர், அவர் தனது சங்க உறுப்பினரான ராஜன் போபாட்டுடன் இணைந்து கோவா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் டகோஜு தன்யாவாத் இயக்கத்திற்கு வேர்களை அளித்துள்ளார். 2024-ல், மகாராஷ்டிராவில் உள்ள RC கூடல் மற்றும் சாவந்த்வாடி (இரண்டும் RID 3170-ல்) தொலைதூர பழங்குடிப் பகுதிகளில் 11,000 உள்நாட்டு மரக்கன்றுகளை நட்டன.

அதன் பிறகு, இந்த பசுமை இயக்கம் கோவாவை அடைந்தது, அங்கு RC பன்ஜிம் மற்றும் RC மார்கோ ரோட்டேரியர்கள் PDG கௌரிஷ் தோண்ட் தலைமையில் ரோட்டரி ரெயின் ரன் என்ற ஒரு பெரிய சமூக மாரத்தான் ஏற்பாடு செய்தனர், இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். இந்த நிகழ்வில், 10,000 மரக்கன்றுகள் ஓட்டப்பந்தய வீரர்களுக்கு விநியோகிக்கப்பட்டு, இந்த பசுமைப் பணியை முன்னெடுத்துச் செல்ல ஊக்குவிக்கபட்டனர்.

"கடந்த ஆண்டு நாங்கள் விநியோகித்த 11,000 மரக்கன்றுகள் அனைத்தும் விவசாய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களைக் கொண்ட தொலைதூர பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன. "ஒரு விவசாயியை விட ஒரு பழ மரத்தின் மதிப்பை வேறு யாரும் அறிந்திருக்க மாட்டார்கள், மேலும் விநியோகிக்கப்பட்ட மரக்கன்றுகள் தேங்காய், மாம்பழம், கொய்யா, முந்திரி மற்றும் மசாலாப் பொருட்களின் மரக்கன்றுகள். இந்த ஆண்டு, சிந்துதுர்க்கில் உள்ள சிறிய மற்றும் விளிம்புநிலை விவசாயிகளுக்கு நேரடியாக சுமார் 10,000 பழங்கள் மற்றும் மசாலாப் பொருட்களின் மரக்கன்றுகளை விநியோகிக்கிறோம். ஒவ்வொரு விவசாயிக்கும் 3 முதல் 5 மரக்கன்றுகள் கிடைத்தன."

பால் பண்ணை மற்றும் சுயஉதவி குழுக்களின் உதவியுடன் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு நேரடியாக சென்றடைகின்றன. பெண் விவசாயிகளும் பயனடைகிறார்களா



என்று கேட்டதற்கு, அவர் புன்னகைத்து, “இரண்டு நாட்களுக்கு முன்பு, நாங்கள் 600 விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை விநியோகித்தோம், அவர்களில் 300 பேர் பெண்கள்” என்று கூறுகிறார். ஒவ்வொன்றும் ரூ.100 முதல் ரூ.200 வரை செலவாகும் இந்த மரக்கன்றுகளை அவர்கள் தங்கள் பண்ணைகளில் ஒரு ஏக்கர் அல்லது அதற்கும் குறைவாக நடவு செய்கிறார்கள்.

இந்த இயக்கத்தில் அவர் எவ்வாறு ஈடுபட்டார் என்று கேட்டபோது, “சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் DGE டகோஜுவிடம் அறிமுகப்படுத்தப்பட்டேன், மேலும் சுற்றுச்சூழல் மீதான அவரது ஆர்வத்தால் நான் ஈர்க்கப்பட்டேன். அவர் தானே அடிக்கடி எங்கள் நிகழ்வுகளுக்கு வந்து, நடவு செய்வதில் பங்கேற்கிறார். விவசாயிகள்

மிகவும் மகிழ்ச்சியாக உள்ளனர், ஏனெனில் 4–5 ஆண்டுகளில் இந்த மரங்களிலிருந்து அவர்களுக்கு வருமானம் கிடைக்கும்.” என அவர் கூறுகிறார்.

கூடலில் உள்ள சந்த் ராவூல் மகாராஜ் கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவர்கள் குழு இந்த இயக்கத்தில் ஈடுபட்டுள்ளது. “சிந்துதுர்க்கின் ஈரநிலங்களில் ஒரு நடவு இயக்கத்தை நாங்கள் திட்டமிட்டுள்ளோம். ஈரநிலப் பகுதிகளில் நடவு செய்து, இந்த செடிகளின் வளர்ச்சியை கண்காணிக்கவும், அவற்றைக் குறிக்கவும் அவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்குவோம். பெரிய அளவிலான சுற்றுச்சூழல் சீரழிவிலிருந்து நமது கிரகத்தை காப்பாற்றுவதில் இளைய தலைமுறையினரை உணர்வுபூர்வமாக ஈடுபடுத்துவதே இந்த யோசனையாகும்,” என்று கண்டேல்கோன்கர் கூறுகிறார். இதே இளைஞர்கள் குழு கோவில்களைச் சுற்றி மரங்களை நடுவதில் ஈடுபட்டுள்ளது. “இந்த கோவில்களில் சிலவற்றிற்கு அருகில், கோவில்களுக்கு பணம் திரட்ட உள்ளூர் மக்கள் மரங்களை வெட்டி மரக்கட்டைகளை விற்றுள்ளனர். அத்தகைய இடங்களை நாங்கள் அடையாளம் கண்டு, அவற்றைச் சுற்றி மரங்களை நடுவோம்.” அதன் தலைவர் ராஜீவ் பவார், உதவி ஆளுநர் சச்சின் மதானே மற்றும் பிறரால் வழிநடத்தப்படும் RC கூடல் இந்த மர விநியோக திட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

கிராமப்புற கர்நாடகாவில், RID 3192 மாவட்ட விவசாயக் குழு இயக்குநர் அகைஷ மல்லப்பா மற்றும் RID 3191-ஐ சேர்ந்த சிவகுமார் ஆகிய இரண்டு சுற்றுச்சூழல் உணர்வுள்ள ரோட்டேரியர்கள் மூலம் தேவைப்படும் பெண்களுக்கு 13,000 தேங்காய் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அதே நேரத்தில், IPDG ஷரத் பாய் தலைமையில் பெல்காமில் (RID 3170) மாணவர்களுக்கு சுமார் 1,000 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. மகாராஷ்டிராவில், மொத்தம் 1,50,000 மரக்கன்றுகளில், மேலும் 6,000 மரக்கன்றுகள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளன.

*ரோட்டரி ரெயின் ரன் மராத்தான் பங்கேற்பாளர்கள் RCs பன்ஜிம் மற்றும் மார்காவ் (RID 3170) வழங்கிய மரக்கன்றுகளை எடுத்து வருகின்றனர்.*






*இன்னர் வீல் கூடல் உறுப்பினர்கள் கிராம பெண்களுக்கு மரக்கன்றுகளை விநியோகிக்கின்றனர்.*

ரயான் சர்வதேச பள்ளிகள் இந்த இயக்கத்தில் இணைந்தது, இந்த இயக்கத்தின் ஒரு முக்கிய மைல்கல்லை எட்ட உதவியது. "அவர்கள் 22 மாநிலங்களில் 165 பள்ளிகளைக் கொண்டு நடுத்தர பிரிவினருக்கு சேவை செய்கின்றனர்; ஆண்டு கட்டணம் ரூ.1 லட்சத்திற்கும் குறைவாக உள்ளது. இது சுற்றுச்சூழல் மீது கவனம் செலுத்தும் ஒரு பள்ளிகளின் சங்கிலி, மேலும் நான் பள்ளி குழந்தைகளை கொண்டு செல்லும் வணிகத்தில் இருப்பதால், அவர்களுடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டது."

இதன் விளைவாக, CEO ரயான் பிண்டோ மற்றும் வணிக மற்றும் செயல்பாடுகளின் துணைத் தலைவர் ஜான் அலெக்ஸ், மற்றும் RC பெங்களூரு ஆர்ச்சர்ட்ஸ், புனே லக்ஷ்மி ரோடு மற்றும் புனே ஃபார் ஈஸ்ட் ஆகியவற்றுக்கு இடையே ஒரு கூட்டாண்மை ஏற்பட்டது. ரயான் சர்வதேச பள்ளிகளில் மரங்கள் நடும் பணி பெங்களூரு மற்றும் புனேவில் உள்ள ஏழு பள்ளிகளில் தொடங்கியது, அங்கு 2,400 பழம்தரும் மரங்கள் ஏற்கனவே நடப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக, ஹைதராபாத், மும்பை மற்றும் பெங்களூருவில் இன்னும் சில வளாகங்களும் சேர்க்கப்படும்.

"ஒவ்வொரு குழந்தையும் சுற்றுச்சூழலைப் பற்றி கற்றுக்கொள்ளும் ஒரு உலகத்தை நான் எப்போதும் கனவு கண்டேன், அதனால்தான் ரயான் பள்ளிகளில் 'ஒவ்வொருவரும், ஒன்றை நடவு செய்யுங்கள்' என்ற முன்முயற்சியை நாங்கள் தொடங்கினோம். 2026-ல் எங்கள் 50வது ஆண்டு விழாவைக் கொண்டாட, ரயான் குழுமமும் ரோட்டரியும் இணைந்து இந்தியாவில் உள்ள எங்கள் அனைத்து பள்ளிகளிலும் 10 லட்சம் மரக்கன்றுகளை நடவு செய்யும். பொறுப்பான உலகளாவிய இளம் குடிமக்களை உருவாக்குவதே எங்கள் நோக்கம்." என ரயான் இன்டர்நேஷனல் தலைவர் A F பிண்டோ கூறுகிறார்.

ஜூலை 1, 2026 அன்று, டகோஜு DG-ஆக பதவியேற்பதைக் கொண்டாடவும், ரயான் பள்ளியின் பொன்விழாவைக் கொண்டாடவும், இந்தியாவின் 165 ரயான் பள்ளிகளிலும் ஒரே நாளில் 50,000 மரங்களை நடுவதன் மூலம் ஒரு கின்னஸ் உலக சாதனை முயற்சி செய்யப்படும். "இந்த நிகழ்வு நேரலையாக ஒளிபரப்பப்படும், இதில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் ரோட்டேரியர்கள் இந்த நினைவுச்சின்ன முயற்சியில் ஒன்றிணைவார்கள். அடுத்த இலக்கு இன்னும் லட்சியமானது: அடுத்த ஆண்டு 1 மில்லியன் மரக்கன்றுகள், ரயானின் 2.5 லட்சம் மாணவர்களில் ஒவ்வொருவரும் பங்கேற்பார்கள் என்ற கனவுடன். இது பூமித்தாய்க்கு நன்றி சொல்ல ஒரு அழகான வழி அல்லவா - வெறும் வார்த்தைகளால் மட்டுமல்ல, வேர்களால்" என்று டகோஜு கேட்கிறார்.

CSR கூட்டாண்மை பற்றி என்ன நினைக்கீறீர்கள்; இந்தியாவில் பல நிறுவனங்கள் சுற்றுச்சூழல் அமைப்பில் ஆர்வமாக உள்ளன என்று நான் அவரிடம் கேட்க, "நிச்சயமாக, CSR நிதிக்காக அத்தகைய கூட்டாண்மையை உருவாக்க REF ஆர்வமாக உள்ளது. ஆனால் முதலில் ஏற்கனவே செய்யப்பட்ட கணிசமான வேலையின் நம்பகமான பதிவை நாம் உருவாக்க வேண்டும். ஒரு அற்புதமான பின்னணி அல்லது பதிவு இல்லையெனில் அவர்கள் நம்மை சந்தேகத்துடன் பார்ப்பார்கள். எனவே நாங்கள் ஏற்கனவே செய்ததை அவர்களுக்குக் காட்ட விரும்புகிறோம், பின்னர் ஒரு கூட்டாண்மையை உருவாக்குவோம்." நிலத்தடி நீரை மாசுபடுத்துவதில் குற்றம் சாட்டப்பட்ட ஒரு MNC ஏற்கனவே எங்களை அணுகியுள்ளது, ஆனால் ஒரு கேள்விக்குரிய நிறுவனத்துடன் கூட்டு சேருவதில் நாங்கள் எச்சரிக்கையாக இருக்கிறோம்," என்றார்.■

Rotary PEOPLE OF ACTION

# மால்டா-வில் பலாக்கனவுகள்

ஜெய்ஸ்ரீ

மேற்கு வங்காளத்தின் மால்டாவிலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவிலுள்ள பாபுக் கிராமப் பஞ்சாயத்தைச் சேர்ந்த 12 பழங்குடியினக் கிராமங்களில் ஓர் அமைதியான பசுமைப் புரட்சி தொடங்கியுள்ளது. இங்கு நீங்கள் எந்த வீட்டுக்குள் நுழைந்தாலும் ஓர் இளம் பலா மரம் தென்றலில் அழகாக அசைந்தாடுவதைப் பார்க்கலாம்.

மால்டா ரோட்டரி சங்கம், RID 3240, தன்னுடைய பசுமைப் பூமித் திட்டத்தின்கீழ் 2018ம் ஆண்டில் தொடங்கி இந்த மரக் கன்றுகளை வீடுகள், பள்ளிகள், விவசாயிகளுக்கு வழங்கிவருகிறது. இந்த ரோட்டரியன்களின் பணி: இந்த மாவட்டத்தில் 10,000 பலாக் கன்றுகளை நடுவது. “நாங்கள் ஏற்கெனவே 8,000 கன்றுகளை வழங்கிவிட்டோம்” என்கிறார் இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர் பாஸ்கர் பால்.

ஏன் பலாக் கன்றை வழங்க வேண்டும்? பால் சட்டென்று பதிலளிக்கிறார், “அது எங்கள் உள்ளூர் மரம், எங்கள் கதகதப்பான, மிதமான காலநிலைக்கு மிகச் சிறந்தது. இதில் எதுவும் வீணாவதில்லை: மரத்தை வைத்து அறைக்கலன்கள் செய்யலாம், இலைகளைக் கால்நடைகளுக்குத் தீனியாக்கலாம், விதைகளை வைத்து ஊறுகாய் செய்யலாம், சுவையான, ஊட்டச்சத்து மிக்க பழத்தைச் சாப்பிடலாம். இதன் நலப் பலன்களைப் பற்றிய விழிப்புணர்வு கூடியிருப்பதால், இதன் சந்தை வளர்ந்து கொண்டிருக்கிறது. கிராம மக்கள் இதன் மூலம் தொடர்ந்த வருமானத்தையும் உணவுப் பாதுகாப்பையும் பெறுகிறார்கள்.”

பால், இந்தச் சங்கத்தின் IPP சுப்ரா குன்டு இருவரும் இந்தத் திட்டத்தோடு மிகவும் ஒன்றியுள்ளார்கள். இவர்கள் இருவரும் இந்தக் கிராமங்களில் ஒன்றில் பண்ணை நிலம் வைத்துள்ளார்கள், மழைக்காலத்தின் போது (மரம் நடுவதற்கு ஏற்ற பருவம்) அங்கு சென்று, ஒவ்வொரு




*RC மால்டாவின் முன்னாள் தலைவர் பாஸ்கர் பால் (இடது) கிராம மக்களுக்கு பலா மரக்கன்றுகளை விநியோகிக்கிறார்.*







*மரக்கன்றுகள் வழங்கப்பட்ட பழங்குடி குழந்தைகளுடன் சங்கத்தின் IPP சுப்ரா குமார் குண்டு (மையம்).*

முறையும் 100 மரக் கன்றுகளை வாங்கி விநியோகிக்கிறார்கள். "மற்ற சங்க உறுப்பினர்களும் இதில் இணைகிறார்கள். நாங்கள் கிராமத்து மக்களுக்கு மரக் கன்றுகளைக் கொடுத்து, அவற்றை வளர்க்க வழிகாட்டுகிறோம். விவசாயிகளான அவர்கள் மாட்டுச் சாணம் போன்ற இயற்கை உரங்களைப் பயன்படுத்துகிறார்கள்" என்கிறார் பால். முதல் இரண்டு ஆண்டுகளில் தொடர்ந்து நீர் ஊற்றவேண்டும். ஐந்தாம் ஆண்டிலிருந்து மரங்கள் பூக்கத் தொடங்கும். ஒரு மரக்கன்றின் விலை ரூ.30 தான்.

பாபுக் கிராமப் பஞ்சாயத்துடன் இந்தச் சங்கத்தின் பிணைப்பு ஆழமானது. கடந்த பல ஆண்டுகளாக இவர்கள் வயதுவந்தோர் எழுத்தறிவு வகுப்புகள், மருத்துவ முகாம்கள், நலம், தூய்மை, சுற்றுச்சூழல் பராமரிப்பு, நீர்ப்பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வுப் பயிலகங்களை நடத்தியுள்ளார்கள். "ஜர்புகுரியா கிராமத்தில் நாங்கள் ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துள்ளோம், அங்கு கால்பந்துப் போட்டிகளைத் தொடர்ந்து நடத்துகிறோம்." இந்தச் சங்கத்தின் நலச் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக இந்தக் கிராமத்தில் ஓர் RCC நிறுவப்பட்டுள்ளது.■




OzHarvest சமையலறையில் பிராந்திய ஆசிரியர்கள் மற்றும் ரோட்டரியினர்.




# ஆஸ்திரேலியாவில் உள்ள ஏழை மக்களுக்கு உணவு வழங்குதல்

ரஷீதா பகத்

ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்டில், சமீபத்தில் ரோட்டரி டவுன் அண்டர் குழுவால் நடத்தப்பட்ட ஆசியா பசிபிக் எடிட்டர்ஸ் கருத்தரங்கில், ஆஸிஹார்வெஸ்ட் (OzHarvest) என்ற ஒரு குறிப்பிடத்தக்க தொண்டு நிறுவனம் நடத்திய அமர்வு மிகவும் சுவாரஸ்யமான ஒரு சமையல் அனுபவமாக இருந்தது. இந்த நிறுவனம் ஆஸ்திரேலியாவில் உள்ள ஏழை மக்களுக்கு புதிய, ஆரோக்கியமான மற்றும் சத்தான உணவை வழங்குகிறது.

2004-ம் ஆண்டில், ரோனி கான் என்ற சமூக தொழில்முனைவோர், தான் ஏற்பாடு செய்த நிகழ்வுகளில் நிறைய உணவு வீணடிக்கப்படுவதை கவனித்த போது, இந்த தொண்டு நிறுவனம் ஒரு சிறிய அளவில் தொடங்கியது. "எனவே,உபரி உணவை 'மீட்பதற்காக மற்றும் தேவைப் படுபவர்களுக்கு அதை வழங்குவதற்காக அவர் Oz Harvest நிறுவினார். ஆரம்பத்தில் அவரே ஒரு வேனில் சென்று பெரிய நிகழ்வுகளிலிருந்து மீதமுள்ள உணவை சேகரித்து ஒரு தொண்டு நிறுவனத்திடம் வழங்குவார்" என்று ஆஸிஹார்வெஸ்ட்டின் குயின்ஸ்லாந்துக்கான ஒருங்கிணைப்பாளர் மரிகா மேமன் ரோட்டரி நியூஸ்-க்கு அளித்த நேர்காணலில் தெரிவித்தார்.

சிட்னியில் ஒரு வேனுடன் தொடங்கிய இந்த தொண்டு நிறுவனம், இன்று நாடு முழுவதும் 20 இடங்களில் இயங்கி வருகிறது. தற்போது, 120 வேன் ஓட்டுநர்கள் உட்பட 400 ஊழியர்கள், 4,000 தன்னார்வலர்கள் மற்றும் 70 வேன்கள் உள்ளன. இன்று, ஆஸிஹார்வெஸ்ட்டின் அடையாளமாக உள்ள மஞ்சள் நிற 'உணவு மீட்பு வேன்கள், ஒவ்வொரு வாரமும் 2,600-க்கும் மேற்பட்ட உணவு நன்கொடையாளர்களிடமிருந்து 250 டன்களுக்கு மேல் நல்ல உணவை சேமித்து, ஆஸ்திரேலியாவில் உள்ள ஏழை மக்களுக்கு உணவளிக்கும் 1,500-க்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு நேரடியாக விநியோகம் செய்கிறது.

ரோனியின் சிறிய முயற்சி வேகமாக வளர்ந்து, இப்போது ஆஸ்திரேலியாவின் முன்னணி உணவு மீட்பு நிறுவனமாக மாறியுள்ளது. ஆஸிஹார்வெஸ்ட் வளர்ந்ததால், ரோனி மற்றும்



*பிராந்திய இதழின் ஆசிரியர்கள் (இடமிருந்து) மேகன் மார்ட்டின் (ஆஸ்திரேலியா) கியோகோ நோஸாகி (ஜப்பான்) மற்றும் தாமஸ் ஃபூ-மிங் சூ (தைவான்).*

தன்னார்வ வழக்கறிஞர்களின் குழு, உபரி உணவை நன்கொடையாக வழங்கும் நிறுவனங்களுக்கு சட்டப் பொறுப்புக்கு பயமின்றி வழங்கு வதற்கு, சட்டத்தை திருத்துமாறு மாநில அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுத்தனர். 2005-ல் நியூ சவுத் வேல்ஸில் சிவில் லையபிலிட்டிஸ் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது, மற்ற மாநிலங்களும் அதைத் தொடர்ந்தன.

சுருக்கமாக, ஆஸிஹார்வெஸ்ட்டின் முக்கிய செயல்பாடு, பல்பொருள் அங்காடிகள், மளிகை கடைகள், நிகழ்வுகள், பேக்கரிகள் மற்றும் உணவகங்களில் இருந்து வீணாகப் போகும் உணவை "மீட்பது", மற்றும் அதை மூலப்பொருட்களாக (பழங்கள் மற்றும் காய்கறிகள், உணவு தானியங்கள் போன்றவை) அல்லது அதன் Cooking for a cause நிகழ்ச்சி மூலம் சமைத்த உணவாக மாற்றி, ஏழை சமூகங்கள் அல்லது தொண்டு நிறுவனங்களுக்கு வழங்குவது. இந்த மிகப்பெரிய உணவு விரயத்தை தடுக்கும் முயற்சியில் ஆஸிஹார்வெஸ்ட், பெரிய நிறுவனங்கள் மற்றும் பிற உணவு நன்கொடையாளர்களுடன் ஒரு ஏற்பாட்டை செய்துள்ளது.

"நாங்கள் மிக உயர்ந்த உணவு பாதுகாப்பு தரத்துடன் செயல் படுகிறோம். எங்கள் ஓட்டுநர்கள் கடைக்குச் செல்லும்போது, ஒவ்வொரு பொருளையும் காலாவதியாகவில்லை என்பதையும், அது உண்ணக்கூடியதா என்பதையும் சரிபார்க்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில், இது சில நிறுவனங்களிடம் உள்ள உபரி அல்லது கூடுதல் உணவு, இதில் உள்ளூர் பேக்கரிகள் எங்களுக்கு ரொட்டி மற்றும் கேக்குகளை கொடுக்கின்றன."

கெட்டுப் போகாத உணவு அதன் 'best before' தேதிக்குப் பிறகு மூன்று மாதங்கள் வரை பாதுகாப்பாக பயன்படுத்தலாம். ஆனால் பால் போன்ற கெட்டுப் போகும் பொருட்களை பயன்படுத்த முடியாது. உணவுப் பொருட்கள் "சேகரிக்கும் வரை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன" என்பதை உறுதி செய்யுமாறு ஆஸிஹார்வெஸ்ட் அனைத்து நன்கொடையாளர்களையும் கேட்டுக்கொள்கிறது. "சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு நாங்கள் உணவு வழங்குகிறோம் மற்றும் கடுமையான உணவு பாதுகாப்பு தரங்களை பின்பற்றுகிறோம். எங்கள் ஓட்டுநர்கள் ஆபத்துக்களை கண்டறிய பயிற்சி அளிக்கப்படுகிறார்கள் மற்றும் பாதுகாப்பற்றதாக கருதும் எந்தவொரு பொருளையும் மறுக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்," என்று இணையதளம் கூறுகிறது. "தரமான அதிகப்படியான உணவை சேமிப்பதன் மூலம், நீங்கள் உங்கள் சொந்த உணவு விரயம் மற்றும் அகற்றும் செலவுகளை குறைப்பது மட்டுமல்லாமல், உங்கள் சமூகத்தில் தேவைப்படுபவர்களுக்கு பெரிதும் உதவுகிறீர்கள்!"

ஆஸிஹார்வெஸ்ட் உடன் இணைந்துள்ள ஆஸ்திரேலியாவில் உள்ள சேவை சார்ந்த அமைப்புகளில் சில ரோட்டரி சங்கங்களும் அடங்கும். கடந்த மாதம் வரை, கோல்ட் கோஸ்டில் உள்ள RC பர்லீ ஹெட்ஸ் உறுப்பினர் டெர்ரி டெய்லர், ஒரு ஆர்வமுள்ள தன்னார்வலராக இருந்தார். அவர் ஒரு காலத்தில் சமையல் பள்ளி நடத்திய ஒரு தொழில்முறை சமையல்காரர்.

2025 மே மாதம், ஆசியா-பசிபிக் பிராந்தியத்திலிருந்து - ஜப்பான், தாய்லாந்து, தைவான், ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா - மற்றும் முதன்மை ரோட்டரி இதழின் பிராந்திய ரோட்டரி இதழ் ஆசிரியர்கள் மற்றும் ரோட்டரி டவுன் அண்டர் (RDU) இதழின் மூத்த தலைவர்கள், RDU தலைவர் PDG கல்மா மெக்லெல்லன், RDU-வின் தலையங்க தலைவர் PDG லிஸ் கோர்ட்னி மற்றும் அதன் பொது மேலாளர் கே கிட்டில் மற்றும் சில ஆர்வமுள்ள ரோட்டேரியர்கள், அதன் Cooking for a cause நிகழ்ச்சியின் கீழ் இயங்கும் ஆஸிஹார்வெஸ்ட் சமையலறைகளில் ஒன்றிற்கு உற்சாகமாக சென்றோம்.

டெர்ரி டெய்லர் எங்களை அங்கு வரவேற்று, அடுத்த இரண்டு மணிநேரத்திற்கு எங்களுக்கு வழிகாட்டினார். நாங்கள் மிகவும் கூர்மையான சமையல் கத்திகள், வெட்டும் பலகைகள் மற்றும் பிற சமையலறை கருவிகளை எடுத்தோம். ஆனால் அதற்கு முன்பு, எங்களை கை கழுவும் பகுதிக்கு அனுப்பி, சோப்பு போட்டு கைகளை நன்கு கழுவச் சொன்னார். சுகாதாரத்தில் எந்த சமரசமும் இல்லை என்று உறுதியாகக் கூறப்பட்டது.

நாங்கள் ஒரு ஆப்பிள் மற்றும் அரிசி புட்டிங், மஃபின்ஸ் மற்றும் பயறு, காய்கறிகள் மற்றும் சீஸ் போன்ற ஊட்டச்சத்துக்கள் நிறைந்த

ஒரு உணவை தயாரிப்போம் என்று அவர் எங்களிடம் கூறினார். நம்புவீர்களோ இல்லையோ, ஏழு வகையான சீஸ் அதில் சேர்க்கப்பட்டது! அடுத்த இரண்டு மணி நேரத்தில், முழு தயாரிப்பிலும் போடப்பட்ட அன்பு மற்றும் அக்கறைதான் தனித்துவமாக இருந்தது... ஆப்பிள், கீரைகள், கேரட் போன்றவற்றை ஒரு குறிப்பிட்ட வழியில் வெட்ட வேண்டும், இதனால் உணவு வீணாகாது. எந்த குறுக்குவழிகளும் அனுமதிக்கப்படவில்லை... ஒரு சரியான உணவை தயாரிப்பதற்கு தேவையான ஒவ்வொரு சிறிய விவரமும் பின்பற்றப்பட்டது. மாவு பிசைவது, வெட்டுவது, சுடுவது மற்றும் பேக்கிங் செய்வது வரை... ஆனால் மஃபின்ஸ் மற்றும் ஆப்பிள் புட்டிங் மீது தாராளமாக நட்ஸ் தூவப்பட்டது. ஒரு நல்ல உணவகத்தில் பரிந்துரைக்கப்படும் நெறிமுறை பின்பற்றப்பட்டது. இது கொடுப்பதில் மற்றும் பெறுவதில் உள்ள கண்ணியத்திற்கு ஒரு புதிய அர்த்தத்தை கொடுத்தது!



ஆஸ்திரேலியாவில் பசி அல்லது சத்தான உணவு பற்றாக்குறை ஒரு பெரிய பிரச்சனையாக இருக்காது என்று நினைத்த ஒருவர், பயனாளிகள் எப்படி அடையாளம் காணப்படுகிறார்கள் என்று கேட்டபோது, “நாங்கள் நேரடியாக தனிநபர்களுக்கு வழங்குவதில்லை, ஆனால் தேவைப்படுபவர்களுக்கு வழங்கும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் அல்லது சமூகங்களுக்கு வழங்குகிறோம்,” என மரிகா கூறினார். ஒரு சமூக மையம் உணவை ஹேம்பர்களாக பேக்கேஜ் செய்து, ஒவ்வொரு வாரமும் அந்த உணவு ஹேம்பர்களைப் பெற வரும் குடும்பங்களுக்கு கொடுக்கலாம்.

குகிங் ஃபார் அ காஸ் நிகழ்ச்சி மூலம் மட்டுமே வழங்கப்படும் சமைத்த உணவை விட, “எங்கள் முதன்மை பணி புதிய பழங்கள் மற்றும் காய்கறிகளை மீட்பதுதான்”




*RC பர்லீ ஹெட்ஸ் உறுப்பினரும் ஒரு தொழில்முறை சமையல்காரருமான டெர்ரி டெய்லர் ரோட்டரி குழுவிற்கு சமையல் அமர்வு மூலம் வழிகாட்டுகிறார்.*

என்று அவர் தெளிவுபடுத்துகிறார். "நாங்கள் புதிய பொருட்கள் மற்றும் சத்தான உணவுக்கு முன்னுரிமை அளிக்கிறோம், இது தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது, அவை அதை குடும்பங்களுக்கான உணவாகவோ அல்லது ஹேம்பர்களாகவோ மாற்றலாம்."

2005-ல் ரோனி, உணவு வணிகங்கள் சட்டப் பொறுப்புக்கு பயமின்றி உபரி உணவை நன்கொடையாக வழங்க அனுமதிக்கும் சட்டத்தை நிறைவேற்ற அரசாங்கத்துடன் போராட தன்னார்வ வழக்கறிஞர்களின் ஒரு குழுவை சேர்த்ததுதான், ஆஸிஹார்வெஸ்ட்டை ஒரு பெரிய ஆஸ்திரேலிய தொண்டு நிறுவனமாக மாற்றியது. இது ஆஸ்திரேலிய ரீடைல் செயின் நிறுவனமான வூல்வொர்த்ஸ் போன்ற நிறுவனங்கள் அதன் முக்கிய உணவு மீட்பு பங்காளராக மாற உதவியது.

2024-ல், 2,400 நன்கொடையாளர்களைக் கொண்ட ஆஸிஹார் வெஸ்ட், 14,000 டன்களுக்கு மேல் உணவை மீட்டது. இது ஏற்கனவே 1,500 தொண்டு நிறுவனங்களுக்கு சேவை செய்து வரும் நிலையில், மேலும் 1,000 நிறுவனங்கள் காத்திருப்பு பட்டியலில் உள்ளன. இத்தகைய மிகப்பெரிய செயல்பாடுகளுக்கு பெரிய நிதி தேவைப்படுகிறது, மேலும் அதன் நிறுவனரால் புதுமையான சிந்தனை இருந்துள்ளது என்பது தெளிவாகிறது. வழக்கமான நிதி திரட்டும் நிகழ்ச்சிகளில், ஒவ்வொரு அக்டோபரிலும் நடைபெறும் CEOக்களின் சமையல் போட்டி அடங்கும். அதில், நிறுவனங்களின் மூத்த தலைவர்கள் ஒரு பிரபல சமையல்காரருடன் சேர்ந்து குகிங் ஃபார் அ காஸ் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்கள். பின்னர் அவர்கள்

*OzHarvest நிறுவனர் ரோனி கான்*



அந்த உணவை சமூகத்திற்கு வழங்கி, அவர்களுடன் அமர்ந்து அந்த உணவை ரசிக்கிறார்கள். இது ஒரு பெரிய நிகழ்வு. ஒவ்வொரு ஜூன் மாதமும் ஒரு 'கொடுத்தல் தினமும்' உள்ளது.

மற்ற புதுமைகளில், நிகழ்வுகளுக்கு ஆர்டர் செய்யக்கூடிய ஒரு உணவு லாரியும் அடங்கும், இது தனிப்பட்ட விருந்துகள் அல்லது அலுவலக நிகழ்வுகளுக்கு பூஜ்ஜிய உணவு விரயம் என்ற வாக்குறுதியுடன் உணவு வழங்குகிறது. அதன் வாசகம் கவர்ச்சியாக உள்ளது: "ஒவ்வொரு ஆர்டரும் தேவைப்படும் சமூகங்களுக்கு உணவு வழங்க எங்களுக்கு உதவுகிறது."

டெர்ரி டெய்லர் மற்றும் அவரது சங்கத்தைத் தவிர, நாடு முழுவதும் உள்ள மற்ற ரோட்டேரியர்கள் நிகழ்வுகளில் பங்கேற்பது அல்லது நன்கொடைகள் மூலம் ஆஸிஹார்வெஸ்ட் உடன் ஒரு தொடர்ச்சியான உறவை கொண்டுள்ளனர். "அவர்கள் வெறும் நன்கொடை அளிப்பதை விட, ஒரு அனுபவத்தை பெற விரும்புகிறார்கள் என்று நாங்கள் கண்டறிந்ததால், மேலும் பல ரோட்டரி உறுப்பினர்களை இணைக்க நாங்கள் விரும்புவோம்" என்று மரிகா கூறுகிறார்.

ஆஸிஹார்வெஸ்ட் அடுத்த தலைமுறையிலும் முதலீடு செய்கிறது, உணவு விரயம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவது மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு முழுமையான, ஆரோக்கியமான உணவைப் பெறுவதற்கு உதவுவது ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்துகிறது. "எங்கள் திட்டங்களில் ஒன்று, சமூக மையங்களுக்குச் சென்று பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான உணவு மற்றும் குறைந்த செலவில் சமையல் திறன்களை கற்பிப்பது. ஏனெனில் நாம் உணவை நன்கொடையாக வழங்கலாம், ஆனால் வெவ்வேறு பின்னணியில் இருந்து வரும் மக்களுக்கு அந்த உணவை என்ன செய்வது என்று தெரியாமல் போகலாம் என்பதை நாங்கள் உணர்கிறோம்"

"ஒரு சர்க்கரைவள்ளிக்கிழங்கு அல்லது ஒரு பட்டர்நட் ஸ்குவாஷ்" கொடுக்கும் உதாரணத்தை அவர் கூறுகிறார்; "ஒருவர் அதை இதற்கு

## உலகில் உணவு விரயம்

- உலகில் அனைவருக்கும் உணவு வழங்க போதுமான உணவு உற்பத்தி செய்யப்படுகிறது.
- உற்பத்தி செய்யப்படும் அனைத்து உணவிலும் மூன்றில் ஒரு பங்கு - சுமார் 1.3 பில்லியன் டன்கள் வீணாகிறது, இது உலக பொருளாதாரத்தில் ஆண்டுக்கு $940 பில்லியன் விரயமாகிறது.
- உற்பத்தி செய்யப்படும், ஆனால் உண்ணப்படாத உணவிலிருந்து உலகளாவிய க்ரீன்ஹவுஸ் வாயுக்களில் 10% வரை வருகிறது.
- உணவு விரயம் ஒரு நாடாக இருந்தால், அது அமெரிக்கா மற்றும் சீனாவிற்குப் பிறகு க்ரீன்ஹவுஸ் வாயுக்களை வெளியிடும் மூன்றாவது பெரிய நாடாக இருக்கும்.
- உலகளாவிய உணவு விரயத்தை நீக்குவது ஆண்டுக்கு 4.4 மில்லியன் டன் C02-ஐ சேமிக்கும், இது நான்கு கார்களில் ஒன்றை சாலையில் இருந்து அகற்றுவதற்கு சமம்.
- 9 பேரில் ஒருவருக்கு சாப்பிட போதுமான உணவு இல்லை, அதாவது 793 மில்லியன் ஊட்டச்சத்து குறைபாடுள்ள மக்கள்.
- தற்போது இழக்கப்படும் அல்லது வீணடிக்கப்படும் உணவில் கால் பகுதி 870 மில்லியன் பசியுள்ள மக்களுக்கு உணவளிக்க முடியும்.
- உற்பத்தி செய்யப்படும் அனைத்து பழங்கள் மற்றும் காய்கறிகளில் கிட்டத்தட்ட பாதி வீணாகிறது (3.7 டிரில்லியன் ஆப்பிள்கள்).
- ஒரு பர்கரை தூக்கி எறிவது, 90 நிமிட குளியலுக்கு சமமான தண்ணீரை வீணாக்குகிறது!
- ஒரு லெட்டஸ் தலை குப்பை மேட்டில் சிதைவதற்கு 25 ஆண்டுகள் ஆகும்.



## ஆஸ்திரேலியாவில் உணவு விரயம்

- ஒவ்வொரு ஆண்டும் 7.6 மில்லியன் டன் உணவு, அதில் 70 சதவீதம் முழுமையாக உண்ணக்கூடியது, ஆஸ்திரேலியாவில் வீணாகிறது, இது பொருளாதாரத்தில் ஆண்டுக்கு 36.6 பில்லியன் ஆஸ்திரேலியா டாலர் ஆகும்.
- ஆஸ்திரேலியாவில் உணவு விரயத்தில் பெரும்பகுதி வீடுகளிலிருந்து வருகிறது (2.5 மில்லியன் டன்), இது ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டுக்கு $2,000-$2,500 ஆகும்.
- உண்ணப்படாத உணவை வளர்க்க 25 மில்லியன் ஹெக்டேருக்கு மேல் நிலம் வீணாகிறது.
- ஆஸ்திரேலியாவில் அதிகம் வீணாகும் முதல் ஐந்து உணவுகள் காய்கறிகள், ரொட்டி, பழம், பேக் செய்யப்பட்ட சாலட் மற்றும் மீதமுள்ள உணவுகள்.
- நாட்டில் 3.4 மில்லியன் குடும்பங்கள் உணவுக்காக போராடுகின்றன; 2 மில்லியன் குடும்பங்கள் உணவு பாதுகாப் பின்மையின் மிக தீவிரமான வடிவத்தை அனுபவிக்கின்றன, தொடர்ந்து உணவைத் தவிர்த்து அல்லது முழு நாட்கள் சாப்பிடாமல் இருக்கின்றன.
- உணவுக்கான தேவை அதிகரித்து வருகிறது; ஸிஹா வேஸ்ட்டால் ஆதரிக்கப்படும் தொண்டு நிறுவனங்கள் கடந்த ஆறு மாதங்களில் தேவையில் 75 சதவீதம் அதிகரிப்பு கண்டன; 30 சதவீதம் பேர் முதல் முறையாக உணவு நிவாரணம் தேடினர்.

முன்பு பார்த்ததில்லை மற்றும் அதைப் பெற்றால், என்ன செய்வது என்று அவருக்கு தெரியாது. எனவே, மக்களின் உணவு அறிவை அதிகரிப்பது, பல்பொருள் அங்காடியில் உள்ள பொருட்களின் பின்புறத்தில் உள்ள லேபிள்களை எப்படி படிக்க வேண்டும், எந்த விருப்பம் ஆரோக்கியமானதாகவும், மலிவானதாகவும் இருக்கும் என்பதை எப்படி முடிவு செய்வது என்று கற்பிப்பதுதான் இதன் நோக்கம்.”

FEAST (உணவு கல்வி மற்றும் நிலைத்தன்மை பயிற்சி) என்பது



தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கான ஒரு கல்வித் திட்டமாகும், இது உணவு விரயத்தின் பிரச்சனை மற்றும் அதன் சுற்றுச்சூழல் தாக்கத்தை ஆராய்கிறது, நேர்மறையான உணவு பழக்கங்களை உருவாக்குகிறது மற்றும் எளிதான சமையலை கற்றுக்கொடுக்கிறது.

அதன் பெயர் குறிப்பிடுவது போல, இது வேடிக்கையாகவும், ஈர்க்கக்கூடியதாகவும் மற்றும் நல்ல உணவால் நிரம்பியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது! இது ஆஸிஹார்வெஸ்ட்டில் ஒரு ஆன்சைட் பயிற்சி நாள் மூலம், அல்லது ஒரு ஆன்லைன் பயிற்சி தொகுதி மூலம் ஆசிரியர்களுக்கான




**OzHarvest நிறுவனர் ரோனி தனது குழுவுடன்.**

தொழில்முறை கற்றலையும் வழங்குகிறது. “இங்கு நாங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உணவு, ஆரோக்கியமான சமையல், பூஜ்ஜிய விரய நுட்பங்களுடன் எப்படி சமைப்பது மற்றும் வீட்டில் உணவு விரயத்தை எப்படி குறைப்பது என்று கற்றுக்கொடுக்கிறோம். நரிஷ் என்ற ஒரு திட்டமும் எங்களிடம் உள்ளது, அதில் நாங்கள் இளம் பருவத்தினருக்கு தொழில்முறை விருந் தோம்பல் மற்றும் சமையல் பயிற்சி அளிக்கிறோம், இதனால் அவர்கள் வேலை பெற முடியும்.”

ஆஸ்திரேலியாவில் உணவு பாதுகாப்பின்மையை






## *இந்தியாவில் இது போல் ஒரு திட்டம்*

*ஆஸிஹார்வெஸ்ட்டின் உணவு மீட்பு திட்டங்களை இந்திய ரோட்டரி சிறிய அளவில் நகல் எடுப்பதைப் பற்றி நான் உரக்க சிந்தித்தபோது, இந்த திட்டம் இங்கிலாந்தில் நகல் எடுக்கப்பட்டுள்ளது என அதன் பிரதிநிதி மரிகா மேமன் கூறுகிறார், அங்கு யுகேஹாவெஸ்ட் உள்ளது, நியூசிலாந்தில் கிவிஹாவெஸ்ட் உள்ளது, வியட்நாமில் வியட்ஹார்வெஸ்ட் உள்ளது, மற்றும் தென்னாப்பிரிக்காவில் எஸ்ஏஹாவெஸ்ட் உள்ளது. அவை அனைத்தும் ஒரு ஒத்த உணவு மீட்பு மாதிரியைப் பின்பற்றுகின்றன, ஆனால் உள்ளூர் நிலைமைகள் மற்றும் தேவைக்கு ஏற்ப மாற்றப்பட்டுள்ளன.*

*இந்தியாவில் ஏற்கனவே பல ரோட்டரி சங்கங்கள் உணவுப் பொருட்கள் நிறைந்த குளிர்சாதன பெட்டிகளை வைக்கின்றன, அதை யார் வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் எடுத்துச் செல்லலாம்.*

*சிந்திக்க வேண்டிய விஷயம், இல்லையா?*

எதிர்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று அவர் மேலும் கூறுகிறார். “ஒரு வீடு உள்ள ஒரு குடும்பம் எப்படி உணவு பாதுகாப்பின்மையை எதிர்கொள்ள முடியும் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அதுதான் இன்றைய யதார்த்தம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் சாப்பிட வேண்டும் என்பதற்காக உணவைத் தவிர்ப்பது அல்லது மதிய உணவு இல்லாததால் குழந்தைகள் பள்ளியைத் தவிர்த்த கதைகளை நாங்கள் கேள்விப்பட்டுள்ளோம்.




இத்தகைய சந்தர்ப்பங்களில் உணவு அத்தியாவசியமான ஒன்றாக இல்லாமல் ஒரு ஆடம்பரமாகிறது.”

“நீங்கள் உணவை குப்பைத் தொட்டியில் போடும்போது, அந்த உணவை மட்டும் வீணாக்கவில்லை. அந்த உணவை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்பட்ட அனைத்து வளங்களையும் நீங்கள் வீணடிக்கிறீர்கள்... உணவு வளர்க்கப்பட்ட நிலம், அதை வளர்க்க பயன்படுத்தப்பட்ட நீர், அந்த உணவை கொண்டு செல்ல, பேக்கேஜ் செய்ய மற்றும் சந்தைப்படுத்த பயன்படுத்தப்பட்ட வளங்கள். எனவே அதன் தாக்கம் மக்கள் உணர்வதை விட மிகவும் அதிகமானது.” என்று மக்களுக்கு கற்பிக்க வேண்டிய அவசியம் உள்ளது என்ற ஒரு சிந்தனையை அவர் என் மனதில் விட்டுச்செல்கிறார்.


நாங்கள் கலந்துகொண்ட குகிங் ஃபார் அ காஸ் அமர்வில் உணவு தயாரிக்கப்பட்ட அன்பு மற்றும் அக்கறை பற்றி அவர் கூறுகிறார்: “எங்கள் திட்டங்களில் நாங்கள் எப்போதும் கூறுவது: உணவைப் பெறும் நபரைப் பற்றி சிந்தியுங்கள் மற்றும் உங்கள் அன்பையும் அக்கறையையும் அதில் போடுங்கள், ஏனெனில் அது அன்றைய தினம் அவர்களுக்கு கிடைக்கும் ஒரே உணவாக இருக்கலாம்.” ■

# 2027–28 RI தலைவராக லாரி லன்ஸ்ஃபோர்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார்

பரிந்துரைத்தல் குழுவினர் RC கன்சாஸ் சிட்டி-பிளாசா, மிசௌரி, USA, உறுப்பினரான லாரி A லன்ஸ்ஃபோர்ட் அவர்களை 2027–28க்கான RI தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். வேறு வேட்பாளர்கள் யாரும் இல்லாவிட்டால், அவர் தலைவர் பொறுப்புக்குப் பரிந்துரைக்கப்படுவது செப்டம்பர் 15 அன்று அதிகாரப்பூர்வமாகும்.

ஆஸ்திரேலியாவிலுள்ள நியூகாசில் பல்கலைக்கழகத்தில், 1981–82 கல்வி ஆண்டில் செலவழிப்பதற்கான ரோட்டரி அறக்கட்டளைத் தூதுவர் கல்வி உதவித் தொகையைப் பெற்ற போது தான் லன்ஸ்ஃபோர்ட் முதன்முதலாக ரோட்டரிக்கு அறிமுகமானார்.

சான்று பெற்ற பொதுக்கணக்காளரான இவர் ஏழு ஆண்டுகள் எர்ன்ஸ்ட் & யங் நிறுவனத்தில் பணியாற்றிய பிறகு, 1990-ல் குடும்பத்தினருக்குச் சொந்தமான பெர்ன்ஸ்டெய்ன்-ரெய்ன் அட்வர்டைசிங் நிறுவனத்தில் இணைந்தார். இவர் இப்போது பெர்ன்ஸ்டெய்ன் குழும நிறுவனங்களின் நிர்வாகத் துணைத்தலைவராகவும் தலைமை நிதி அலுவலராகவும் பணியாற்றிவருகிறார்.



RIPN
*லாரி லன்ஸ்ஃபோர்ட்*

1991-ல் கன்சாஸ் சிட்டி-பிளாசா ரோட்டரி சங்கத்தில் இணைந்த லன்ஸ்ஃபோர்ட் RI இயக்குநராகவும் (2013–15), ரோட்டரி அறக் கட்டளையின் அறங்காவலராகவும் (2021–25, துணைத்தலைவர் 2024–25) சேவையாற்றியுள்ளார், RIன் நிர்வாகக் குழு (2014–15), உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சிக்குழு (2016–18), RI தலைவருக்கான பரிந்துரைக் குழு (2023–24), TRFன் நிர்வாகக்குழு (2023–24), நிதிக்குழு (2023–24, 2024–25), பங்கேற்பாளர் அனுபவக்குழு (2023–24) ஆகியவற்றின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார், TRF-ன் மிகச் சிறந்த சேவை விருது, பாராட்டுக்குரிய சேவைக்கான மேற்கோள், RI தனக்கு மேல் சேவை விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

இவருக்கும் இவருடைய மனைவி ஜில் லன்ஸ்ஃபோர்டுக்கும் இரண்டு குழந்தைகள், ஒரு பேரக் குழந்தை உள்ளார்கள். இவர்கள் மிகப் பெரிய கொடை யாளர்கள், உயில் சொத்துச் சமூக உறுப்பினர்கள், பல பால் ஹாரிஸ் தோழர்கள், ரோட்டரி அறக்கட்டளையின் கொடை யாளர்கள், தொடர்ந்த உறுப்பினர்கள்.

*© Rotary.org*

# RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த சங்கூ யுன் விலகல்



RIPE *சங்கூ யுன்*

சென்ற ஏப்ரலில், RI-ன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த சங்கூ யுன் தனக்குக் கணையப் புற்றுநோய் இருப்பது கண்டறியப் பட்டுள்ளதாகத் தெரிவித் திருந்தார், தன் சிகிச்சையில் கவனம் செலுத்துவதற்காக ரோட்டரிப் பொறுப்புகளில் இருந்து பின்வாங்கும் தீர்மானத்தை அறிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 11 அன்று RI தலைவர் ஃபிரான்செஸ்கோ அரேசோ-வுக்கு அவர் எழுதிய கடிதத்தில், தன் மருத்துவர்களுடன் பேசிய பிறகு, தான் RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையிலிருந்து விலகத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

அவருடைய கடிதத்தின் ஒரு பகுதியைத் தலைவர் அரேசோ Rotary.orgல் பகிர்ந்துகொண்டுள்ளார்: “நம் தலைவருக்கான தொடர்ச்சியான பயணங்கள், நிகழ்வுகளின் தேவைகளை என்னால் நிறைவேற்ற இயலாது என என் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். நான் இந்தப் பொறுப்பில் தொடர விரும்பினாலும், அந்த அறிவுறுத்தலை நான் மதிக்கவேண்டும். நம் அமைப்புக்குத் தலைமை தாங்கும் வாய்ப்பைப் பெற்றது எனக்குப் பெரிய பெருமை, மகிழ்ச்சி. நான் என்னால் இயன்ற வகையில் தொடர்ந்து சேவையாற்றுவேன். ரோட்டரிக்கான என் நேசமும், நம் பணிக்கான என் உறுதிப்பாடும் எப்போதும் தொடரும்.”

தலைவர் அரேசோ இணையத் தளத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்: “நம் அமைப்புக்கான சங்கூ அவர்களின் சிறந்த சேவை, தலைமை, பங்களிப்புகளுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். அவர் விரைவில் நலம் பெறவேண்டும், நலமாக வாழவேண்டும் என்று நாம் அனைவரும் வாழ்த்துவோம்.”

ஆகஸ்ட் 2024-ல் தலைவருக்கான பரிந்துரைக் குழுவினர் 2026–27 RI தலைவராக யுன் அவர்களைத் தேர்ந்தெடுத்திருந்தது. ஆகஸ்ட் முடிவில் RI இயக்குநர்கள் வாரியம் கூடிப் பேசி ஒரு புதிய 2026–27 ரோட்டரி தலைவரைத் தேர்ந்தெடுக்கும்.

© Rotary.org

# உலகை மாற்றும் நட்பு

கிரண் ஜெஹரா

மே 6 முதல் 18, 2025 வரை, RID 3040-லிருந்து ஒரு ரோட்டேரியர்கள் குழு RFE திட்டத்தின் ஒரு பகுதியாக தெற்கு கலிபோர்னியாவிற்குச் சென்றது. இது புதிய இடங்களைப் பார்ப்பதற்காக மட்டுமல்லாமல், புதிய நண்பர்களை உருவாக்கவும், ரோட்டரியை நன்கு புரிந்துகொள்ளவும். இது ரோட்டேரியர்கள் வேறு நாட்டிற்குச் சென்று, சக ரோட்டேரியர்களுடன் தங்கி, அவர்களின் கலாச்சாரம் மற்றும் சேவைப் பணிகளை நேரடியாக அனுபவிக்க அனுமதிக்கும் ஒரு சிறப்பு முன்முயற்சி. "ரோட்டரியை உண்மையிலேயே சிறப்பானதாக்குவது அதன் சர்வதேசத்தன்மை மற்றும் மொழி மற்றும் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட நட்பு பிணைப்புகள் என்பதை நாங்கள் அனுபவித்தோம்," என்று பரிமாற்றத் திட்டத்தின் குழுத்தலைவர் PDG சஞ்சீவ் குப்தா கூறுகிறார்.

அமெரிக்காவின் RID 5330ல் இந்தியக்குழு, "குடும்பத்தைப் போல வரவேற்கப்பட்டது. நாங்கள் ரோட்டேரியர்களின் வீடுகளில் தங்கினோம், சங்க கூட்டங்களில் கலந்து கொண்டோம், உள்ளூர் பள்ளிகள், அருங்காட்சியகங்களைப் பார்வையிட்டோம், மேலும் இயற்கை நடைகள், ஒரு பலூன் சவாரி மற்றும் ஒரு கிராண்ட் கேன்யன் சாலைப் பயணம் ஆகியவற்றிலும் ஈடுபட்டோம். வழிநெடுக, இந்தியப் பாடல்கள், பாரம்பரிய நடனம் மற்றும் சில சமையல் குறிப்புகளையும் பகிர்ந்து கொண்டோம்," என்று PDG குப்தாவின் மனைவி அர்ச்சனா கூறுகிறார்.

"பால்ம் ஸ்பிரிங்ஸ் முதல் டெமிகுலா வரை, ஒவ்வொரு நிறுத்தத்திலும், "அன்பான விருந்தோம்பல், அர்த்தமுள்ள உரையாடல்கள் மற்றும் ஒரு வலுவான பகிரப்பட்ட நோக்கத்துடன் நாங்கள் வரவேற்கப்பட்டோம்." பத்துக்கும் மேற்பட்ட சங்கங்கள் குழுவை வரவேற்றன, மேலும் இந்த பரிமாற்றம் காரணமாக மூன்று புதிய சகோதர-சங்க



*ரோட்டரி ஃப்ரெண்ட்ஷிப் எக்ஸ்சேஞ்ச் குழு*



கூட்டாண்மைகள் நிறுவப்பட்டன. RID 3040-ல் இருந்து வந்த குழு, ஹண்டிங்டன் நோய் என்ற அரிய வகை மூளைக் கோளாறுக்கான ஒரு உலகளாவிய மானியத் திட்டத்திற்கு $10,000 வழங்க உறுதியளித்தது. கலிபோர்னியாவில் உள்ள புரவலர் மாவட்டம், மாவட்ட ஒதுக்கப்பட்ட நிதிகளை (DDF) சேர்ப்பதன் மூலம் திட்டத்தை ஆதரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சான் பெர்னார்டினோ கவுண்டியில் உள்ள ரிம் ஆஃப் த வேர்ல்ட் உயர்நிலைப் பள்ளிக்கு இந்திய குழுவினர் பயணித்த போது, தொழில்நுட்ப பயிற்சியை நேரில் கண்டனர். அவசர மருத்துவ சேவை, CPR, வெல்டிங், மீடியா தயாரிப்பு மற்றும் வாகன தொழில்நுட்பம் போன்ற துறைகளில் நேரடி அணுகுமுறை மற்றும் நவீன வசதிகள் பார்வையிடப்பட்டன. இதனால் இந்தியாவில் இத்தகைய திறன்கள் வளர்க்கும் மாதிரிகளை உருவாக்க புதிய யோசனைகள் உருவானது.

RFE-ஐ கருத்தில் கொள்ளும் இந்திய ரோட்டேரியர்களுக்கு PDG குப்தா அவர் சில ஆலோசனைகளை வழங்குகிறார்: “நல்ல உடல் தகுதியுடன் இருங்கள், ஏனெனில் பல நாட்களில் நடைப்பயணங்கள் மற்றும் வெளிப்புற நடவடிக்கைகள் இருக்கும். புரவலர்களுக்கு இடையே நகர்வதை எளிதாக்க குறைந்த உடமைகளுடன் பயணம் செய்யுங்கள். இந்திய உணவு பெரும்பாலும் ஏற்பாடு செய்யப்பட்டாலும், உள்ளூர் உணவை முயற்சிக்கத் தயாராக இருப்பது அனுபவத்தை மேம்படுத்துகிறது. குழு ஒருங்கிணைப்புகளின் போது ஆங்கிலத்தில் பேசுவதன் மூலமும், அடிப்படை நடத்தை விதிகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் உங்கள் புரவலர்களை மதிப்பது அவசியம். முழுமையாகப் பங்கேற்று ஒவ்வொரு தருணத்தையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில் எந்த அனுபவம் ஒரு நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்று உங்களுக்குத் தெரியாது. மிக முக்கியமாக, திறந்த மனதுடன் செல்லுங்கள்; நீங்கள் எவ்வளவு அதிகமாகக் கொடுக்கிறீர்களோ, அந்த அளவுக்குப் பயணம் அர்த்தமுள்ளதாக மாறும்.”

குப்தா, இந்தியா முழுவதும் உள்ள அதிகமான ரோட்டரி சங்கங்கள் நட்பு பரிமாற்றங்களை நடத்த அல்லது பங்கேற்க வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் என்று நம்புகிறார். “சாதாரண கூட்டங்கள் மற்றும் சேவைத் திட்டங்களுக்கு அப்பால் ரோட்டரியை அனுபவிப்பதற்கான மிகவும் அர்த்தமுள்ள வழிகளில் இதுவும் ஒன்றாகும். இது மகிழ்ச்சி, கலாச்சார வெளிப்பாடு மற்றும் நமது வேலைக்கு ஒரு ஆழமான தொடர்பைச் சேர்க்கிறது. உலகம் எப்போதும் இல்லாத அளவுக்குப் பிளவுபட்டதாக உணரும் இக்காலத்தில், அமைதியை உருவாக்க நம்மிடம் உள்ள வலிமையான கருவிகளில் நட்பு ஒன்று என்பதை RFE நினைவூட்டுகிறது.” ■

---

Rotary PEOPLE OF ACTION

## நவி மும்பை மருத்துவமனையில் சூரிய சக்தி மின்சாரப் பயன்பாடு

**ரோட்டரி செய்திக்குழு**



*இடமிருந்து: IPDG தினேஷ் மேத்தா, சங்கத்தின் IPP சுனில் ஷா மற்றும் சங்கத்தின் தலைவர் தனஞ்சாய் சர்க்கார் ஆகியோர் மாத்தடி மருத்துவமனையில் மருத்துவமனை அதிகாரிகள் மற்றும் ரோட்டேரியன்களுடன் உள்ளனர்.*

நியூ பாம்பே சீசைடு ரோட்டரி சங்கம் (RID 3142), ATOS குளோபல் IT சொல்யூஷனஸ் மற்றும் சர்வீசஸ் நிறுவனத்தின் CSR நிதி உதவியுடன் நவி மும்பையில் உள்ள மாத்தாடி மருத்துவமனையில் 71 கிலோவாட் திறன்கொண்ட சூரியசக்தி மின்னுற்பத்தி பிரிவை நிறுவியுள்ளது. இந்த புதிய வசதி மூலம் ஆண்டுக்கு 95,000 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இதன் மூலம் மருத்துவமனைக்கு ஆண்டுக்கு ரூ.12 லட்சம் மிச்சமாகும் என்று சங்கத்தின் தலைவர் சுனில் ஷா கூறினார். இந்த முயற்சி மூலம் சேமிக்கப்படும் கணிசமான தொகை மருத்துவமனையை நவீன வசதிகளுடன் மேம்படுத்துவதற்கு முதலீடு செய்யப்படும்.

முன்னதாக, சங்கம் $31,000 மதிப்புள்ள இரண்டு உலகளாவிய மானியங்கள் மூலம் மருத்துவமனைக்கு பல்வேறு முக்கிய மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளது. அமெரிக்காவில், டெக்ஸாஸில் உள்ள கிராஸ் டிம்பர்ஸ் ரோட்டரி (RID 5790) மற்றும் ஓக்லஹாமாவில் உள்ள ரோட்டரி மாவட்டம் 5750 இரண்டும் சர்வதேச கூட்டாளிகளாக இருந்தன.

இந்த திட்டங்களுக்கான மொத்த செலவு ரூ.1.1 கோடி. ■

# RC தானே ஏசஸின் திரைப்பட விழா

ரஷீதா பகத்

ரோட்டரி ஆண்டு முடிவடைந்த நிலையில், அதன் தலைவர் சுனிதா ஜெயின் தலைமையில், RC தானே ஏசஸ் சற்று வித்தியாசமாக யோசித்து ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்தது. போதுமான பார்வையாளர்களைப் பெற முடியாமல் போராடிக்கொண்டிருந்த, திறமையான, இளம் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட குறும்படங்களைக் கொண்ட ஒரு திரைப்பட விழாதான் அது.

“கலை, கலாச்சாரம் மற்றும் சேவை ஆகியவற்றின் தனித்துவமான கலவையாக ஒரு திட்டத்தைச் செய்ய விரும்பினோம். அதனால், சிறப்பாக எடுக்கப்பட்ட சில படங்களுக்கு ஒரு தளத்தை வழங்கும் நோக்கில், பிரபாத் சித்ரா மண்டல் மற்றும் Y B சவான் மையத்துடன் இணைந்து சித்ரபாரதி குறும்பட விழா 2025-ஐ நடத்தினோம்” என்று சங்கத் தலைவர் சுனிதா கூறினார்.

இந்த முயற்சிக்கு சங்கம் ரூ.1.4 லட்சத்திற்கும் மேல் செலவிட்டது. இதன் மூலம் 27 இளம் திரைப்பட படைப்பாளர்கள் தங்கள் படங்களை சிறந்த பார்வையாளிடம் திரையிட ஒரு வாய்ப்பு கிடைத்தது. மே 29 முதல் ஜூன் 1, 2025 வரை நான்கு நாட்கள் நடைபெற்ற “இந்த திரைப்பட விழா, சுவாரஸ்யமான கருப்பொருள்களைக் கொண்ட 27 சிறந்த குறும்படங்களை காட்சிபடுத்தியது. எங்கள் சங்கத்தின் தலைவர், திரைப்படங்களில் அதிக ஆர்வமும் அறிவும் கொண்ட சங்க உறுப்பினர் சுஷ்மா பட்டா மற்றும் பிரபல திரைப்பட விமர்சகர், இயக்குனர் மற்றும் பிரபாத் சித்ரா மண்டலின் செயலாளர் சந்தோஷ் பதாரே ஆகியோர் அடங்கிய குழு இந்தப் படங்களைத் தேர்வு செய்தது. இளம் மற்றும் பிரபலமற்ற திரைப்படப் படைப்பாளர்களுக்கு ஒரு தளத்தை வழங்குவதோடு, பெரும்பாலும் ஒரு இடத்தைப் பிடிக்க போராடிக் கொண்டிருந்த கலைஞர்கள் மற்றும் இளம் தொழில்நுட்பக் குழுவினரால் உருவாக்கப்பட்ட திரைப் படங்கள் அவர்களின் வேலையை ஊக்குவிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டன” என்று சங்கத்தின் செயலாளர் டேவிட் பெசர்கர் கூறினார். சிறந்த படங்கள் மற்றும் நடிகர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன, மேலும் திரைப்படத் படைப்பாளர்களுக்கு ஒரு சிறிய தொகையும் வழங்கப்பட்டது.

படங்களின் கால அளவு 20 முதல் 30 நிமிடங்கள் வரை இருந்தது, மேலும் இதன் நோக்கம் நிதி திரட்டுவது அல்ல. மும்பையில் மூன்று வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற திரையிடலுக்கு சங்க உறுப்பினர்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அழைக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட படங்களின் கருப்பொருள்கள் பன்முகத்தன்மை கொண்டவையாக இருந்தன. மேலும் அவை பெண்களுக்கான சமூகத் தடைகள், தனிப்பட்ட உறவுகள், வயதானவர்கள் மத்தியில் உள்ள



*விருது பெற்ற திரைப்படங்களின் குழு உறுப்பினர்கள் பிரபாத் சித்ரா மண்டல் தலைவர் கிரண் சாந்தாராம் (வலதிலிருந்து 2-வதாக அமர்ந்துள்ளார்), அதன் செயலாளர் சந்தோஷ் பதாரே (வலதிலிருந்து 3-வதாக அமர்ந்துள்ளார்) மற்றும் சங்கத் தலைவர் சுனிதா ஜெயின் (இடதுபுறம் அமர்ந்துள்ளார்).*

தனிமை போன்ற பல்வேறு சமூகப் பிரச்சினைகளைக் கையாண்டன.

அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்ட ஒரு வயதான மனிதரின் மனதை உருக்கும் கதைக்களம் கொண்ட பிரதீக் ராஜேந்திர ஸ்ரீவஸ்தவாவின் குறும்படமான மை ஃபாதர் இஸ் அஃப்ரைட் ஆஃப் வாட்டர்' என்ற படத்திற்கு சிறந்த படத்திற்கான விருது வழங்கப்பட்டது. இத்திரைப்படம் அவரது வாழ்க்கையின் கடைசி இரண்டு ஆண்டுகளில் அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்ட அவரது தந்தையை கவனித்துக்கொண்ட இயக்குனரின் சொந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. தந்தைக்கு சிகிச்சை அளிப்பதில் உள்ள சவால்கள், மங்கிவரும் அவரது நினைவுகள், மகனுக்கும் தந்தைக்கும் இடையிலான பிணைப்பு, மற்றும் ஒரு படைப்பாளராக தனது சொந்த வேலையில் கலந்துகொள்ளும் போது சிகிச்சை அளிப்பதில் உள்ள சிக்கல்கள் ஆகியவற்றை ஆராய்கிறது. இந்தப் படம் பல்வேறு திரைப்பட விழாக்களில் அங்கீகாரம் பெற்றுள்ளது.

நினைவாற்றல் இழப்பின் சிக்கல்கள், மனித மனதின் பலவீனம், மற்றும் சிகிச்சை அளிப்பதன் உணர்ச்சிபூர்வமான சுமை ஆகிய வற்றில் ஆழமாகச் சித்தரித்ததற்காக இது பாராட்டப்பட்டது. "நிலையற்ற தருணங்களின் அழகையும், நினை வாற்றல் படிப்படியாக குறைவதையும் படமாக்கியதற்காக, இதன் ஒளிப்பதிவு பாராட்டப்படுகிறது" என்று நார்த்ஈஸ்ட் ஃபிலிம் ஜர்னலில் ஒரு கட்டுரை கூறுகிறது.



என் தந்தை தண்ணீரைப் பார்த்து பயப்படுகிறார் என்ற படத்தின் ஒரு காட்சி.



இந்த திரைப்பட விழாவில் இடம் பெற்ற மற்றொரு சுவாரஸ்யமான திரைப்படம், பல தசாப்தங்களுக்கு முன்பு, இந்திய கிராமம் ஒன்றில் பெண்கள் திரையரங்கிற்கு செல்ல அனுமதிக்கப்படாத ஒரு காலத்தைப் பற்றிய பிரச்சினையை கையாண்டது. அந்த கிராமத்தில் ஒரு புதிய திரைப் படம் வெளியாவதைப் பற்றியும், ஒரு சிறுவன் ஒரு பெண்ணை திரையரங்கிற்குள் நுழைய எப்படி உதவுகிறான் என்பதைப் பற்றியும் இந்தப் படம் சித்தரித்தது.

இந்தியா முழுவதிலும் இருந்து வளர்ந்து வரும் திரைப்படப் படைப் பாளர்களால் உருவாக்கப்பட்ட திரைப் படங்கள் பல்வேறு இடங்களில் திரை யிடப்பட்டன, இறுதி நிகழ்வு மற்றும் விருது வழங்கும் விழா ஜூன் 1 அன்று நடைபெற்றது. RID 3142-இன் வெளி செல்லும் DG தினேஷ் மேத்தா, பிரபாத் சித்ரா மண்டலின் தலைவர் கிரண் V சாந்தாராம் மற்றும் பிரபல நடிகர் விகாஸ் பாட்டீல் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். தேர்வு செய்யப் பட்ட ஆறு குறும்படங்கள் இறுதி நாளில் திரையிடப்பட்டன, மேலும் நடிப்பு, இயக்கம், ஒளிப்பதிவு, ஒலி வடிவமைப்பு மற்றும் திரைக்கதை ஆகியவற்றில் விருதுகள் வழங்கினர்.

இந்த இளம் மற்றும் வளர்ந்து வரும் இயக்குநர்கள் மற்றும் நடிகர்களுக்காக சில ஆர்வத்தை உருவாக்க முடிந்தது என்பதில் சங்க உறுப்பினர்கள் மகிழ்ச்சியாக இருந்தனர் என்று பெசர்கர் கூறினார். ஆனால் இந்த உயர்தர குறும்படங்களைப் பார்க்க அழைக்கப்பட்டவர்கள், சினிமா பற்றி நன்கு அறிந்தவர்கள் என்பதை அவர்கள் உணர்ந்தனர். "இது எங்கள் சங்கத்தின் முதல் முயற்சி, அடுத்த முறை ஒரு பெரிய பார்வையாளர் குழுவையும், பொதுமக்களையும் நல்ல படங்களைப் பார்க்க வைக்கும் ஒரு விரிவான நிகழ்வையும் நாங்கள் நடத்துவோம்" என்றார்.

இந்த முயற்சியை வெற்றிகரமாகவும் மறக்க முடியாததாகவும் மாற்ற கடினமாக உழைத்த சங்கத்தினரையும் மற்ற அனைவருக்கும் சங்கத் தலைவர் சுனிதா நன்றி தெரிவித்தார். "இளைஞர்களுக்கு அதிகாரமளித்து, அவர்களின் திறமையை உயர்த்தி, படைப்பாற்றலை வளர்க்கும் அதே வேளையில், ரோட்டரியின் கலை மற்றும் கலாச்சார வெளிப்பாட்டின் எல்லைகளை விரிவுபடுத்தி, வரும் ஆண்டுகளில் இதுபோன்ற மேலும் பல அர்த்தமுள்ள மற்றும் ஆக்கப்பூர்வமான அனுபவங்களை உருவாக்குவதில் சங்கம் தொடர்ந்து உறுதியுடன் இருக்கும்" என்று அவர் கூறினார்.■

Rotary PEOPLE OF ACTION

# வகுப்பறையிலிருந்து வயல்வெளி வரை

ஜெய்ஸ்ரீ

கற்றல் வகுப்பறைகளில் மட்டுமே நடக்கும் என்று யார் சொன்னது? கர்நாடக மாநிலம், பேலூர் மாவட்டத்தில் உள்ள கெண்டேஹள்ளி கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளி மாணவர்கள் குழு, ஆர்வத்துடன் வயல்களில் இறங்கி நெல் சாகுபடி நுணுக்கங்களைக் கற்றனர். இதற்கான முன்முயற்சியை RID 3182-க்கு உட்பட்ட சிக்கமகளூர் காஃபிலேண்ட் ரோட்டரி சங்கத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

“விவசாயம் செய்வதில் உள்ள மகிழ்ச்சி மற்றும் அதிலுள்ள சவால்கள் பற்றி குழந்தைகள் தெரிந்துகொள்ளவும், விவசாயிகளின் கடின உழைப்பை பாராட்டவும், இயற்கை மற்றும் உணவு தயாரிப்பில் அவர்களுக்கு உள்ள தொடர்பை விளக்கும் வகையிலும் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டது” என்று சங்கத்தின் தொழில் சேவை பிரிவு இயக்குநர் H D சுதா தெரிவித்தார். இந்த ஆழமான கற்றல் திட்டத்திற்காக சிக்கமகளூருவிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள பசுமையான அழகிய குக்கிராமமான அல்துர் புராவுக்கு 36 மாணவர்கள், 37 ரோட்டேரியன்கள் மற்றும் ஆன்கள் அடங்கிய குழுவை அவர் தலைமையேற்று அழைத்து வந்து வழிநடத்தினார்.

வேளாண் சாகுபடி தொழில் நுட்பங்களை கற்றுக்கொள்ள வந்திருந்த தங்கள் விருந்தினர்களுக்கு அவற்றை கற்றுக்கொடுப்பதில் விவசாயிகள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். குழந்தைகளும் பெரியவர்களும் ஆர்வத்துடன் வெறுங்கால்களுடன் சகதிகள் நிறைந்த வயலில் இறங்கி, திறந்த வானத்தின் கீழ் முதல் முறையாக நெல் பயிர்களை நடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

“நான் திரைப்படங்களில்தான் இதுபோன்ற காட்சிகளை பார்த்திருக் கிறேன். ஆனால், தகிக்கும் வெயிலில், வயலில் இறங்கி, கை, கால்களை சேறாக்கிக் கொண்டு வேலை செய்வது எவ்வளவு கடினம் என்பதை இப்போது நேரடி அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொண்டேன். உண்மையிலேயே கடினமாக உழைக்கும் விவசாயிகளைப் பாராட்டுகிறேன். இனிமேல் சாப்பிடும் உணவை ஒருபோதும் வீணாக்கக்கூடாது



*பள்ளி மாணவர்கள் நெல் கன்றுகளை நடவு செய்ய கற்றுக்கொள்கிறார்கள்.*



*RC காஃபிலேண்ட் சிக்கமகளூரு உறுப்பினர்கள் நெல் சாகுபடி செய்ய கற்றுக்கொள்கிறார்கள்.*



என்று நானும் எனது நண்பர்களும் தீர்மானித்துள்ளோம். நெல் மணியை உருவாக்குவது எவ்வளவு கடினம் என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம்" என்று ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவி வாணி கௌடா கூறினார்.

சங்கத்தின் செயலாளர் M ஆனந்த், ஆசியாவில் நெல் சாகுபடி தொடர்பான வரலாற்றையும், இந்தியாவில் உணவுப் பாதுகாப்பில் உள்ள முக்கியத்துவத்தையும் விளக்கினார். பருவநிலை மாற்றம் முதல் வன விலங்குகளின் ஊடுருவல் வரை விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் அவர் குறிப்பிட்டார். விவசாயம் ஒரு உன்னதமான மற்றும் முக்கியமான தொழில் என்பதையும், நம்மை தேடிவரும் உணவின் மதிப்பையும் இன்றைய இளைஞர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே எங்களது நோக்கமாகும் என்றும் அவர் கூறினார்.

விருந்தினர்களுக்கு மதியம், சுதா மற்றும் ஆன் ஸ்ரேயா நாகேஷ் ஆகியோரால் தயாரிக்கப்பட்ட மலநாடு உணவு வகைகள் பரிமாறப்பட்டன. கிராமத்தில் மரத்தடி நிழலில் இந்த விருந்துகள் வழங்கப்பட்டன. "இயற்கை சூழிலில் மரத்தடியில் வழங்கப்பட்ட உணவை நாங்கள் ரசித்து சாப்பிட்டோம். அது எங்களுக்கு புதுமையான அனுபவத்தை தந்தது" என்றார் வாணி.

இந்த முன்முயற்சிக்கு சங்கத்தின் தலைவர் நாகேஷ் கெஞ்சிகே மற்றும் முன்னாள் உதவி ஆளுநர் B K குருமூர்த்தி இருவரும் முழு ஆதரவை வழங்கினர்.

அரசுப் பள்ளி ஆசிரியரான சுதா, இந்த திட்டத்தை மேலும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளார். அடுத்த சில மாதங்களில் காஃபி மற்றும் மிளகு சாகுபடி பற்றி மாணவர்களுக்கு நேரடி அறிமுகம் செய்வது குறித்து சிந்தித்து வருகிறார். ஏனெனில் இவை இரண்டும் மாநிலத்தின் முக்கிய பயிர்களாகும். மேலும் சென்னபட்னா பொம்மைகள் தயாரிப்பு மற்றும் அச்சகத்தின் செயல்பாடுகள் குறித்தும் மாணவர்களுக்கு சொல்லிக்கொடுக்க திட்டமிட்டுள்ளார். "சில நேரங்களில் புத்தகங்களைப் படித்து தெரிந்துகொள்வதைவிட நேரடி அனுபவங்கள் மூலம் கற்றல் சிறந்த வழியாகும்" என்கிறார் சுதா மகிழ்ச்சிப் புன்னகையுடன்.■

Rotary PEOPLE OF ACTION

# மணிப்பாலில் ரோட்டரியின் டெங்கு ஒழிப்பு இயக்கம்

V முத்துகுமரன்

புதிதாக வரவிருக்கும் சங்கத்தின் தலைவர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்களுக்காக கடந்த 2024 ஜூன் மாதம், Rotary Leadership Institute-ல் நடைபெற்ற இரண்டு நாள் பயிற்சி முகாமில் பங்கேற்ற மணிப்பால் ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த சுபர்னா ஷெட்டி (RID 3182) பரஸ்பர நலன் அடிப்படையில் சங்கத்தின் சேவைத் திட்டங்கள் மற்றும் சமூக மேம்பாட்டு முயற்சிகளுக்கு ரோட்டரி செயல்நடவடிக்கை குழு (Rotary Action Group) நிதியுதவி அளிப்பதை தெரிந்துகொண்டார். அந்த நேரத்தில் மணிப்பாலில் டெங்கு பரவல் உச்சத்தில் இருந்தது (ஜூன்-ஜூலையில்).

2024-ம் ஆண்டு ஜூலை மாதம் அவர் சங்கத்தின் தலைவராகப் பதவியேற்ற பிறகு, மணிப்பால் முழுவதும் உள்ள சமூகத்தினரிடையே டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் சுபர்னாவை அணுகினர்.

“டெங்கு பரவல் குறித்து மருத்துவர்கள் கொடுத்த தகவல் என்னை சிந்திக்க வைத்தது. கூகுளில் நான் தேடிப்பார்த்தபோது, மலேரியாவுக்கு எதிராக சர்வதேச அளவில் ரோட்டரி போராடி வருவது எனக்கு தெரியவந்தது. நான் உடனே அமெரிக்காவில் வசித்து வரும் ரோட்டேரியன்கள் செயல் நடவடிக்கை குழுவின் (RAMG-Rotarians Against Malaria Global) செயலாளர் டாக்டர் ஜென் பரேர் என்பவரை மின்னஞ்சல் மூலம் தொடர்புகொண்டேன். டெங்குவுக்கு எதிரான நோய் ஒழிப்பு போராட்டத்தில் எங்கள் சங்கத்துடன் கூட்டுசேருவதற்கு அவர் ஆர்வமாக இருக்கிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினோம்” என்று நினைவுகூர்ந்தார் அவர்.

நாங்கள் அனுப்பிய மின்னஞ்சலுக்கு மூன்று மணி நேரத்தில் டாக்டர் பரேர் பதிலளித்தார். அதைத் தொடர்ந்து சங்கத்தின் தலைவர், அமெரிக்காவில் உள்ள RAMG குழுவினருடன் தொடர்பு கொண்டு கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர். இதைத் தொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலான ஐந்து மாத காலத்துக்கு டெங்குவுக்கு எதிரான பிரசாரத்திற்காக 2,500 டாலர் மானிய உதவிக்கு அனுமதி கிடைத்தது. இந்த பிரசாரம் மணிப்பாலில் 15,000-த்துக்கும் மேலானவர்களின் உயிர்களை காப்பாற்ற உதவியது.

“பள்ளிகள், கல்லூரிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட சுகாதார அதிகாரிகள், நகராட்சி நிர்வாகத்தினர் ஆகியோருடனான கூட்டணி வலைப்பின்னல் மூலம் நாங்கள் மணிப்பாலில் உள்ள மூலை முடுக்குகளைச் சென்றடைந்தோம். 150 NSS மானவர்கள், மணிப்பால் MIT-யில் படிக்கும் மாணவிகள், 300 ஆஷா பணியாளர்கள், அங்கன்வாடி ஆசிரியர்கள், மாஹே பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவ ஊழியர்கள், 32 சுகாதார அலுவலர்கள் மற்றும் எங்கள் சங்கத்தைச் சேர்ந்த 15 ரோட்டேரியன்கள் என ஒரு பெரிய



*RC மணிப்பால் ஹில்ஸ் IPP சுபர்ணா ஷெட்டி குழந்தைகளுடன் தூய்மை மற்றும் சுகாதாரம் குறித்து பேசுகிறார்.*




*மணிப்பால், ITI பிரகதி நகரில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களால் டெங்கு எதிர்ப்பு நடைப்பயணம்.*

குழுவினரே நகர்ப்புறங்களில் உள்ள 9 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் வீடு வீடாக பிராசரம் செய்து, நோய் தடுப்பு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்" என்று சுபர்னா விளக்கினார்.

"மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் தன்னார்வலத் தொண்டர்கள் தெருக்களில் உள்ள குப்பைகளை அகற்றியதுடன் சாக்கடைகளையும் சுத்தம் செய்தனர். டெங்கு நோய் வராமல் தடுக்க என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய குறிப்புகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். மேலும் டெங்கு பரவாமல் தடுக்க மணிப்பால் நகர ஏரிப்பகுதிகளில் 250 துளசிச் செடிகள், 50 வேப்பமரக் கன்றுகள் மற்றும் எலுமிச்சை மரக்கன்றுகளை நட்டோம்" என்றும் அவர் கூறினார்.

தொலைதூரப் பகுதிகளுக்குச் சென்று மக்கள் சமூகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஆஷா பணியாளர்கள், பொது சுகாதார ஊழியர்கள் மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு இரத்த அழுத்தத்தை அளவிடும் கருவி, இரத்தத்தில் சர்க்கரையின் அளவை காட்டும் கருவிகள், டார்ச்சுகள் வழங்கப்பட்டன. டெங்குவை சமாளிப்பது எப்படி என்பது குறித்து சுற்றுச்சூழல் பாதுகாப்புடனான விளம்பர பலகைகளும் ஆங்காங்கே வைக்கப்பட்டன. இந்த ஐந்து மாத பிரசாரத்தில் 10,000-த்துக்கும் மேலான துண்டுப் பிரசுரங்கள் ஆங்கிலம் மற்றும் கன்னட மொழிகளில் அச்சிடப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன. இரண்டு பிரசார பேரணிகளை உடுப்பி மாவட்ட ஆணையர் K வித்யாகுமாரி கொடியசைத்து தொடங்கிவைத்தார். டெங்குவின் அபாயம் குறித்தும் அதை தடுக்கும் வழிகள் குறித்த பதாகைகளை ஏந்தியவாறு 300 தன்னார்வ தொண்டர்கள் நடைபயணம் மேற்கொண்டனர் என்றார் சுபர்னா. சேரிப்பகுதிகளிலும் மலேரியா மற்றும் டெங்கு பரவல் உள்ள இடங்களிலும் வசிக்கும் மக்களுக்கு ரூ.50,000 மதிப்பிலான மருந்து, மாத்திரைகள் அடங்கிய தொகுப்பு பைகள் வழங்கப்பட்டன.

சுபர்னாவும் அவரது குழுவினரும் சமூக ஊடகங்களில் டிஜிட்டல் ரீதியிலான பிரசாரம் மேற்கொண்ட அதே நேரத்தில், வார இறுதியில் பள்ளி மாணவர்கள் 120 பேர், சேரிப் பகுதிகளிலும், நோய் தாக்க வாய்ப்புள்ள இடங்களிலும் குப்பைகளை அகற்றியும், சாக்கடைகளை சுத்தம் செய்யும் பணிகளிலும் ல் ஈடுபட்டனர். சுத்தமாக இருப்பது எப்படி? நோய் வராமல் தடுப்பது எப்படி. ஆரோக்கியமாக வாழ்வது எப்படி என்பது குறித்து சுவரோவியம், சித்திரங்கள் மூலம் வீடு வீடாகச் சென்று விளக்கினோம். மேலும் மணிப்பால் நகர தெருக்களிலும், சந்துகளிலும் RAMG சார்பில் தெருமுனையில் பேனர்கள், சுவரோவியங்கள் வைத்து டெங்கு தடுப்பு முறைகளை மக்களிடம் எடுத்துரைத்தோம்.

டெங்கு ஒழிப்பு பிரசாரத்திற்காக RAMG மானியத்தை பெற உதவியதற்காக ஆப்பிரிக்காவைச் சேர்ந்த உலகளாவிய மேம்பாட்டு நிபுணரான அகாமா ஒன்யேமெலுக்வே என்ற பெண்மணிக்கு சுபர்னா நன்றி தெரிவிக்க விரும்புகிறார். சங்கத்தின் புதிய தலைவர் சுரேஷ் ராய், "இந்த ஆண்டும் தன்னார்வலர்களின் உதவியுடன் ஞாயிற்றுக்கிழமைகளில் தூய்மைப் பணி தொடரும் என உறுதியளித்துள்ளார். ஏனெனில் இது பாதிக்கப்பட்ட குழுக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்புடையது.■





UNITE FOR GOOD


# ROTARY CLUB OF VIRUDHUNAGAR IDHAYAM
## DIST - 3212

**Project Report 2024-2025**

**No.of Projects - 8** | **Amount Spent - Rs.41,94,800**

### Dialysis Treatment

Since 2019, dialysis treatment has been provided to more than 200 beneficiaries. They have availed the service 5,718 times at Jana Clinic, Virudhunagar. We spent ₹. 8,10,000 for dialysis treatment to 200 beneficiaries, 1,722 times in the year 2024-25.

### Eye Donation

Since 2009, we have received 965 pairs of eyes as donation. In 2024-25, we spent ₹. 2,64,000 and received 97 pairs of eyes as donation and sent them to Agarwal Eye Hospital, Tirunelveli.

### Midday Meal Program

Since 2021, through this program, midday meals has been served to 70 to 80 poor elderly people in Virudhunagar . This noble work is carried out jointly by Rotary Club of Virudhunagar Idhayam and Mr. K.S. Thanarajan. In 2024-25, we spent ₹. 9,90,000 for midday meal Program.

### Cleaning of Public Toilet

Since 2020, everyday public toilets have been cleaned at 2 locations in Virudhunagar Main Bazaar. In 2024-25, we spent ₹. 2,37,082.


### Heart Care Program

In 2024-25, Heart surgery was done for a 3-year-old baby, success Rahim from Uganda at Amrita Institute of Medical Sciences & Research Centre through Dr. Balaji. We spent ₹. 2,75,000 for this.



**IDHAYAM**
PROMISE OF HEALTH AND HAPPINESS

ADVT.










## Rotary Karmaveerar Kamarajar Heart Care Bus

In 2024-25, we conducted 2 heart care camps with 285 beneficiaries. 146 ECG tests, 87 ECHO tests done and 19 people were referred to Tirunelveli Kauvery Hospital for further treatment. We spent ₹. 30,250 for this project.

## Appreciating Achievers in Sports

We have been recognising school and college students who have achieved in sports in Virudhunagar. So far, 1,415 students have been honoured. In 2024-25, 131 student winners got cash prizes ranging from a minimum of ₹. 400 to a maximum of ₹. 10,000 from us. We spent ₹. 4,32,908 for this.

## Providing Academic support funds

Provided financial assistance to students excelling in studies in schools and colleges. In 2024-25, we provided educational scholarships worth ₹. 11,56,370 to 285 students.

LEKHA ads/Sep 25/Inner

# சத்தாராவில் பச்சிளங்குழந்தைகளுக்கு புதிய விடியல்!

ரஷீதா பகத்

ரோட்டரி தலைமைக்கு அனுப்பிவைக்கப் படும் உலகளாவிய மானிய விண்ணப்பங்கள் ஆமை வேகத்தில் பரிசீலிக்கப்படுவது குறித்து இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்கள் மன வருத்தத்துடன் உள்ளன. ஆனால், அவர்கள் RID மாவட்டம் 3132-ன் PDG-யும், மாவட்டத்தில் 2025–28 ஆம் ஆண்டுக்கு DRFC-ஆக பதவி வகிக்கும் ஸ்வாதி ஹெர்கலிடம் சில வழிகாட்டுதல் பெற வேண்டும்.

கடந்த மார்ச் மாதம், மகாராஷ்டிரத்தில் அவர் வசிக்கும் சத்தாராவில் உள்ள சிவில் மருத்துவமனையில் மன உளைச்சலுடன் இருந்த பெண் டாக்டர் ஒருவரிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. “சிவில் மருத்துவமனையில் உள்ள பச்சிளங்குழந்தைகள் பாரமரிப்பு பிரிவு நிரம்பி வழிவதால், குறைப்பிரசவமாக பிறந்த பச்சிளங்குழந்தைகளை பெற்றோர் பராமரிப்புக்காக 2 மணிநேர பயணத்தில் உள்ள புனே மருத்துவமனைக்கோ அல்லது மும்பையில் உள்ள மருத்துவமனைக்கோ கொண்டு செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக அவர் மனவேதனையுடன் குறிப்பிட்டார்”.

அந்த பெண் மருத்துவரின் உரையாடல் மற்றும் அவர் விரக்தியுடன் பேசிய தொனியிலிருந்து, அந்த சிவில் மருத்துவமனையில் ஒரு நெருக்கடி ஏற்பட்டு வருவதை என்னால் உணர முடிந்தது. குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகள் அல்லது எடை குறைவான குழந்தைகளைப் பராமரிக்க வழியில்லாமல் அவர்களை வேறு மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்ல பரிந்துரைப்பதால் நேர இழப்பு ஏற்படுவதுடன் பெற்றோர்களுக்கும் மன உளைச்சல் ஏற்படுகிறது. என்கிறார் ஸ்வாதி. அவரது வை (Wai) ரோட்டரி சங்கம் இதுவரை 14-க்கும் மேற்பட்ட சர்வதேச நிதியுதவி திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

பச்சிளங்குழந்தைகளை அவர்களது சொந்த நகரத்திலேயே பராமரிக்கும் ஒரு திட்டத்தை உருவாக்கும் முயற்சியில் இறங்கினார் ஸ்வாதி. இந்த அரசு மருத்துவமனையில் பிறக்கும் குறைப்பிரசவ குழந்தைகளை பராமரிப் பதற்கான உபகரணங்களை நிறுவுவதற்கு வசதியாக, உலகளாவிய மானிய உதவி கிடைக்கும் வகையில், ஒரு சர்வதேச கூட்டாளியான பிரிட்டனில் உள்ள வெல்பீயிங் இன்டர்நேஷனல் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான டாக்டர் உஜ்வாலா சித்ரவார் என்பவரை ஸ்வாதி அணுகினார். அதற்கு அந்த பெண்மணி, “நாங்கள் உங்களுடன் கூட்டாக பணியாற்றுவதில் ஆர்வமாக இருக்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் சங்கத்தின் பெயரிலேயே Wellness என்ற வார்த்தை உள்ளது.ஆரோக்கியத்தை வலியுறுத்தும் எங்கள் சங்கம் உங்களுக்கு உதவ தயாராக இருக்கிறது” என்று கூறினார்.






புதியதாக நிறுவப்பட்ட NICU-வில் வெப்பமான நிலையில் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த பிரிட்டன் டாக்டரின் கணவர் Dr முகுந்த் சித்ரவார், ஸ்வாதி மாவட்ட ஆளுநராக இருந்த காலத்தில் அவரும் ஆளுநராக இருந்தவர். இதற்கு முன்னதாக வை ரோட்டரி சங்கம், அவரின் சங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து சர்வதேச நிதியுதவி மூலம் புற்றுநோய் பரிசோதனை நடத்தவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒரு நடமாடும் வாகனத்தை பெற்றிருந்தது. இப்போது உலகளாவிய மானிய விண்ணப்பங்கள்-முன்மொழிவுகளை எழுதுவதில் நிபுணராக இருக்கும் ஸ்வாதி, (எங்கள் சங்கத்தின் சார்பாக 14 உலகளாவிய மானியத் திட்டங்களுக்கான முன்மொழிவை எழுதியது நான்தான் என்று பெருமையுடன் கூறுகிறார் ஸ்வாதி.) சதாராவில் உள்ள அரசு மருத்துவமனையில் பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு பிரிவை வலுப்படுத்த RI மாவட்டங்கள் 3132, 1210, 1220, 1240, 1080 ஆகியவற்றுடன் இணைந்து ரோட்டரி அறக்கட்டளையின் ஆதரவுடன் உலகளாவிய மானியத் திட்டத்திற்கான முன்மொழிவை எழுதி அனுப்பினார்.

குறைந்த வருவாய் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு தேவையான, நவீன மற்றும் இலவச மருத்துவ உதவியை வழங்குவதன் மூலம் பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு பிரிவை செயற்கை சுவாசக் கருவிகள், வெப்பமூட்டிகள், குழந்தைகளின் உடல்நிலையைச் சீராக வைத்திருக்கும் கருவிகள், மருந்து மற்றும் ஊட்டச்சத்துகளை குழந்தையின் உடலுக்குள் செலுத்தும் கருவிகள், ஒளிக்கதிர் சிகிச்சை கருவிகள் என அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக மாற்றுவதே எங்கள் நோக்கமாக இருந்ததால், முன்மொழிவை எழுதுவதில் எங்களுக்கு கடினமாக இல்லை.

இனி குடும்பத்தினர் தங்கள் குழந்தைகளை காப்பாற்றுவதற்காக புனே அல்லது மும்பைக்கு பயணிக்க வேண்டியதில்லை. திட்டம் செயல் படுத்தப்பட்டவுடன் அவர்களுக்குத் தேவையான உதவிகள் சில நிமிடங்களில் கிடைத்துவிடும்.

இந்த திட்டத்தை கட்டம் கட்டமாகச் செயல்படுத்திய போது அரசு அதிகாரிகள், திட்டத் தலைவர் சுவாதியுடன் அடிக்கடி தொடர்பில் இருந்தனர்.

ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திலேயே சர்வதேச மானியத் திட்ட நடைமுறைகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது.

தொடக்க விழாவில், RID 3132ன் DG சுதீர் லட்டூர், PDG ஓம்பிராஷ் மோதிபவாலே, சிவில் சர்ஜன் மருத்துவர் யுவராஜ் கார்பே, ஸ்வாதி மற்றும் ரோட்டேரியன்கள், சுகாதார அலுவலர்கள் கலந்துகொண்டனர். ஜில்லா பரிஷத்தின் தலைமைச் செயல் அதிகாரி யஷஷ்னி நாகராஜன் கூறுகையில், “ரோட்டரி அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மட்டும் செய்துகொடுக்கவில்லை, வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது,” என்றார்.

இந்தியா முழுவதும் உள்ள பல அரசு மருத்துவமனைகளில் ஏழை பெற்றோர்களின் குறைப் பிரசவ குழந்தைகளை காப்பாற்ற போதிய வசதிகள் இல்லை. குழந்தைகள் இறப்பு காரணமாக பெற்றோர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். இதை தடுக்க முடியும். “இந்த மருத்துவ மனையில் 35 வெப்பமூட்டிகள் (Warmers) தேவைப்பட்ட நிலையில் உண்மையில் 10 கருவிகள் மட்டுமே இருந்தன. நெருக்கடியான நேரத்தில் ஊழியர்கள் குறைப் பிரசவ குழந்தைகளை காப்பாற்ற ஒரே வெப்பமூட்டியில் இரு குழந்தைகளை போடும் சூழ்நிலை இருந்தது. அப்படிச் செய்யக்கூடாது. ஆனால், பச்சிளங்குழந்தையை காப்பாற்ற வேண்டுமானால் அவர்களுக்கு இதைத் தவிர வேறு வழியில்லை. நாங்கள் கொடுத்த உபகரணங்களைக் கொண்டு மேலும் 14 குறைப்பிரசவ பச்சிளங்குழந்தைகளை பராமரிக்க முடியும்.

இந்த உலகளாவிய மானியம் 54,253 டாலர் நிதியுதவியில் முக்கிய உபகரணங்கள் இல்லாத மருத்துவமனைக்கு செயற்கை சுவாசக் கருவிகளுடன் மேலும் 10 வெப்பமூட்டிகளை ரோட்டரி வழங்கியுள்ளது. “இதில் மனதை நெகிழவைத்த அம்சம் என்னவென்றால், எங்கள் ரோட்டரி சங்கத்தின் ரோட்டேரியன்கள்

ஒன்றிணைந்து இந்த திட்டத்துக்காக ரூ.61,000 நன்கொடையாக வழங்கியது தான். இந்த தொகை சிறியதாக இருக்கலாம். ஆனால், அவர்கள் பச்சிளங்குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றுவதில் ஆர்வமாக இருந்தனர் என்று ஸ்வாதி மேலும் கூறினார்.

அனைத்து மருத்துவ உபகரணங்களும் இந்தியாவிலேயே வாங்கப்பட்டன. விற்பனையாளர்களே இவற்றை பயன்படுத்து குறித்து ஊழியர்களுக்கு முறையான பயிற்சி அளித்தனர். இந்த உபகரணங்களை மூன்றாண்டுகளுக்கு பழுதுபார்த்து பராமரிக்க ஏற்கெனவே இந்த நிறுவனங்களுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.



*NICU-வில் புதிதாகப் பிறந்த குழந்தைகளுடன் தாய்மார்கள்.*

### மனதை தொட்ட தருணம்

புதிய கருவிகள் நிறுவப்பட்டதை தொடங்கிவைக்கும் நிகழ்வு நடை பெறுவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக பச்சிளங் குழந்தை ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதை ஸ்வாதி நினைவுகூர்ந்தார். குழந்தைகள் மருத்துவக் குழுவைச் சேர்ந்த ஒருவர், தயக்கத்துடன் என்னிடம் இப்படிக் கேட்டார்: “புதிய செயற்கை சுவாசக் கருவியை பயன்படுத்த எங்களுக்கு அனுமதி உள்ளதா? ஏனெனில் அவசரமாக ஒரு பச்சிளங்குழந்தையின் உயிரைக் காப்பாற்ற எங்களுக்கு அது தேவைப்படுகிறது”. நான் உடனே அவரிடம், “இந்த கருவி மூலம் ஒரு குழந்தையின் உயிர் காப்பாற்றப்படும் என்றால் உடனடியாக அதைச் செய்யுங்கள் என்றேன்”.

அதுதான் நடந்தது. புதிய கருவியின் பயனாளியாக அந்த குழந்தை இருந்தது. ரிப்பன் வெட்டு வதற்கு முன்பே அடையாளமாக பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு பிரிவை குழந்தை திறந்துவைத்தது!

அடுத்த நாள், சங்கத்தின் உறுப்பினர்கள் பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு பிரிவுக்குச் சென்று பார்த்தபோது 10 வெப்பமூட்டி கருவிகளும் பயன்பாட்டில் இருந்தன. ஒவ்வொன்றிலும் ஒரு குழந்தை வைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்தவர்களின் கண்களில் கண்ணீர் பெருகியது.– “இரக்கம், கருணை, திருப்தி மற்றும் ரோட்டரியின் உயிரோட்ட மனப்பான்மை ஆகிய வற்றின் வெளிப்பாடுதான் அவை. ஒரு பச்சிளங் குழந்தை கைக்குள் அடங்கிவிடும் அளவுக்கு சிறியதாக இருந்தது. கால்கள், கைவிரல்களைவிட சற்றே தடிமனாக இருந்தன. செயற்கை சுவாசக் கருவிமூலம் சுவாசித்தபடி அக்குழந்தை அமைதியாக இருந்தது” என்றார் ஸ்வாதி.

சில நாட்களுக்கு முன்பு, 800 கிராம் எடையுள்ள புதிதாக பிறந்த பச்சிளங்குழந்தை பாரமரிப்பு பிரிவில் அனுமதிக்கப்பட்டது. இப்போது அந்த குழந்தையின் எடை 950 கிராமாக அதிகரித்துள்ளது. “குழந்தை மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோரின் இடைவிடாத அர்ப்பணிப்பு உணர்வுடன்கூடிய சேவையும், ரோட்டரி வழங்கிய உயிர்காக்கும் கருவிகளுமே இதற்கு காரணமாகும். அதனால்தான் நாங்கள் இந்த மருத்துவமனையைத் தேர்ந்தெடுத்தோம்” என்று அவர் குறிப்பிட்டார்.

PDG Dr மோதிபவாலே உணர்ச்சி வசப்பட்டு பேசுகையில், “நான் பார்த்த அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், இந்த அளவிலான தூய்மையையும் கடமை உணர்வையும் அரிதாகவே கண்டிருக்கிறேன். இந்த மருத்துவ மனையில் தலைமைச் செயல் அதிகாரிக்கும் சிவில் சர்ஜன்களுக்கும் இடையே அசாத்தியமான ஒத்துழைப்பு உள்ளது” என்று கூறினார்.

பெரும் ஆதரவை வழங்கிய சங்க உறுப்பினர்களான பிரமோத் ஷிண்டே, மருத்துவர் மனோகர் ததார், மதன்போரே, மருத்துவர் ஜிதேந்திர பதக், குணால் ஷா (சங்கத்தின் தலைவர்), அனுபம் காந்தி (செயலாளர்) ஆகியோருக்கு ஸ்வாதி நன்றி தெரிவித்தார். சர்வதேச கூட்டாளரான மருத்துவர் உஜ்வாலா சித்ரவார் மற்றும் அவரது கணவர், PDG Dr முகுந்த் இருவரும் “இதுபோன்று புதிதாக பிறக்கும் பச்சிளங்குழந்தைகளுக்கு வாழ்வளிக்கும் திட்டத்தை செயல்படுத்த முக்கிய பங்களிப்பதில் ஆர்வமாக இருக்கிறோம். வை ரோட்டரி சங்கத்துடன் தொடர்ந்து பணியாற்றுவது எங்களுக்கு பயனுள்ள அனுபவமாக இருந்து வருகிறது” என்றும் அவர்கள் கூறினர்.

ஜில்லா பரிஷத் தலைமை நிர்வாக அதிகாரி யாஷாஷ்னி நாகராஜனின் வேண்டுகோளின் பேரில், வை ரோட்டரி சங்கம், அமெரிக்காவில் உள்ள மில்ஃபோர்டு ரோட்டரி சங்கத்துடன் இணைந்து ஒரு தாய்ப்பால் வங்கியை அமைப்பதற்காக 37,000 டாலர்கள் மதிப்புள்ள மற்றொரு சர்வதேச மானிய உதவி திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.■




*ஒரு முகாமில் மகாராஷ்டிரா துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவுடன் (வலது) அசோக் மகாஜன் (இடது).*

Rotary PEOPLE OF ACTION

# கர்ப்பபை வாய் புற்றுநோயை எதிர்த்து போராடிவரும் முலுண்ட் ரோட்டரி சங்கம்

ரோட்டரி செய்திக்குழு



தானேயில் உள்ள கோரஸ் மருத்துவமனையில் நடத்தப்பட்ட பெரிய அளவிலான கர்ப்பபை வாய் புற்றுநோய் பரிசோதனை முகாம் மூலம் முலுண்ட் ரோட்டரி சங்கம் நூற்றுக்கணக்கான ஏழைப் பெண்களுக்கு குணப் படுத்துதல் மற்றும் புற்றுநோய் தடுப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இந்த முகாமில் இலவச பரிசோதனை, மகளிர் மருத்துவ ஆலோசனை மற்றும் புறஊதாக்கதிர் சேவைகள் வழங்கப்பட்டன. பொதுவாக இந்த பரிசோதனைகளுக்கு பெண்களால் அதிக பணம் செலவழிக்க முடியாது.

“ஆனால், மருத்துவச் சேவையை தவிர இந்த நாள் பெண்களுக்கு அவர்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு முக்கியம் என்பதை நினைவூட்டும் வகையில் அமைந்திருந்தது” என்று PRID அசோக் மகாஜன் கூறினார்.

இந்த முகாமை மகாராஷ்டிர மாநில துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தொடங்கிவைத்தார். மும்பை மற்றும் தானேயில் பின்தங்கிய பகுதிகளில் இதேபோன்ற முகாம்களை நடத்துவது, நோயை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் முறையான பராமரிப்பு மூலம் எந்த பெண்ணும் ஆரோக்கியக் குறைபாடு இல்லாமல் இருப்பதை உறுதிசெய்வது என முலுண்ட் ரோட்டரி சங்கம் இந்த நேரத்தில் முடிவு செய்தது.

இந்த முன்முயற்சியை முன்னோக்கி எடுத்துச் சென்று அடுத்த கட்டமாக நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மகாஜன் கூறினார். மேலும் 9 முதல் 14 வயது வரையிலான பெண் குழந்தைகளுக்கு கர்ப்பபை வாய் புற்றுநோய் வராமல் பாதுகாக்க அவர்களுக்கு இலவசமாக HPV தடுப்பூசி போடும் திட்டமும் சங்கத்தினால் செயல்படுத்தப்படும் என்றார். “அடுத்த தலைமுறையினரை பாதுகாப்பதன் மூலம் நோய் தாக்குதலுக்கு ஆளாகாமல் காப்பதே ரோட்டரியின் லட்சியமாகும். ஆதித்ய பிர்லா கேபிடல் நிறுவனம் இந்த நிகழ்விற்கு உதவியது. இனி வருங்காலங்களிலும் இது தொடரும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.■

Rotary PEOPLE OF ACTION

# ஹாப்பி பள்ளிகளை பெற்ற மராட்டிய கிராமங்கள்

ஜெய்ஸ்ரீ

மகாராஷ்டிராவின் ஷாஹாப்பூர் மற்றும் முர்பாத் தாலுகாக்களில் உள்ள பழங்குடியினர் பகுதிகளின் பதினைந்து ஜில்லா பரிஷத் பள்ளிகள் புதிய தோற்றத்தைப் பெற்றுள்ளன. பிரகாசமான வர்ணம் பூசப்பட்ட சுவர்கள், சரிசெய்யப்பட்ட அடிப்படை வசதிகளுடன் இந்த பள்ளிகள் கற்றலுக்கான சிறந்த சூழலை உருவாக்குகின்றன. இந்த மாற்றமானது, ரோட்டரி கிளப் ஆஃப் தானே நார்த், RID 3142-இன் ஒரு வருட திட்டத்தின் விளைவாகும். “கடந்த ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தில், மிலன் லேப்ஸ் என்ற மருந்து நிறுவனத்திடமிருந்து, கல்வித்துறையில் கவனம் செலுத்த ரூ.52 லட்சம் மற்றும் ரூ.44 லட்சம் என இரண்டு CSR நிதிகள் எங்களுக்குக் கிடைத்தன. இந்த நிதியை ஆதரவு தேவைப்படும் பழங்குடி பள்ளிகளுக்கு வழங்க முடிவு செய்தோம்,” என்கிறார் சங்கத்தின் முன்னாள் தலைவர் மேதா ஜோஷி.

அவரது குழுவுடன், அப்பகுதியின் பல பள்ளிகளை பார்வையிட்டு, மிகவும் தேவை இருக்கும் பள்ளிகளை அடையாளம் கண்டார். அவர்கள் கண்ட நிலைமைகள் வருத்தமளிப்பதாக இருந்தன. “சில பள்ளிகளில் உடைந்த சுற்றுச்சுவர்களுடன், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் இல்லாமல், சேதமடைந்த தரைகள் மற்றும் மின்சார சாதனங்களுடன், மற்றும் புதர் செடிகளால் சூழப்பட்டு இருந்தன. பாம்புகளும் மற்ற ஊர்வனவும் அடிக்கடி வகுப்பறைகளுக்குள் நுழைந்தன” என்று அவர் நினைவுகூர்ந்தார்.

இந்த ஆண்டில், அடையாளம் காணப்பட்ட அனைத்து பள்ளிகளும் புதுப்பிக்கப்பட்டன. கழிப்பறைகள் மற்றும் கை கழுவும் நிலையங்கள் கட்டப்பட்டன. தேவைப்பட்ட இடங்களில் புதிய தளவாடங்கள் வழங்கப் பட்டன, மற்றும் பழையவை சரி செய்யப் பட்டன. உறுப்பினர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட புத்தகங் களுடன் நூலகங்கள் அனைத்து பள்ளிகளிலும் அமைக்கப்பட்டன.



தொடக்க விழாக்களின் போது, சங்கம் மாணவர்களுக்கு சீருடைகள், காலணிகள், எழுதுபொருள்கள் மற்றும் உணவுப் பெட்டிகளை வழங்கியது. பள்ளிகளுக்கு குப்பைத்தொட்டிகள் மற்றும் நீர் சுத்திகரிப்பு கருவிகளும் வழங்கப் பட்டன. மூன்று மேல் நிலைப்பள்ளிகளில் 11 மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களுக்காக அறிவியல் ஆய்வகங்களையும் சங்கம் நிறுவியது. இந்த ஹாப்பி பள்ளி திட்டம் ஒவ்வொரு பள்ளியிலும் 50–60 மாணவர்கள் பயனடைய உதவியது.

“இந்த புதுப்பித்தல்கள் வெறும் வெளித்தோற்றத்திற்கானவை அல்ல. அவை கற்றல் சூழலுக்கு புத்துயிரளித்து, மாணவர்கள்





*ஜவஹர் தாலுகாவின் துங்கனிபாடா கிராமத்தில் சங்கத்தால் நிறுவப்பட்ட ஒரு தடுப்பணை மற்றும் சூரிய சக்தியில் இயங்கும் பம்ப் அமைப்பு.*






*இடது: ஒரு பாழடைந்த வகுப்பறை. வலது: புதுப்பிக்கப்பட்ட பள்ளியில் RYE மாணவர் மற்றும் ஆசிரியருடன் RC தானே நார்த்தின் IPP மேதா ஜோஷி.*

தாங்கள் மதிக்கப்படுவதாக உணர வைத்தன. இந்த குழந்தைகளில் பெரும்பாலானோர் பழங்குடி குடும்பங்களிலிருந்து வரும்முதல் தலைமுறை மாணவர்கள். இந்த பள்ளிகள் தான் அவர்களின் சிறந்த வாழ்க்கைக்கு ஒரே நம்பிக்கை" என்றார்.

இந்த பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை மேதா பாராட்டினார்.



"ஒவ்வொரு பள்ளியிலும் சுமார் 8–10 ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களில் பலர் டோம்பிவ்லி, கல்யாண் அல்லது அம்பர்நாத் போன்ற இடங்களிலிருந்து கற்பிக்க நீண்ட தூரம் பயணிக்கின்றனர். அடிக்கடி சம்பளம் தாமதமானாலும், அவர்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறார்கள், ஒரு நாள் கூட விடுமுறை எடுப்பதில்லை" என்று அவர் கூறினார்.

புதுப்பிக்கப்பட்ட ஹாப்பி பள்ளிகளில், இந்த கல்வியாண்டில் நல்ல மாணவர் சேர்க்கை இருந்தது. தற்போது அதன் 49வது ஆண்டில் இருக்கும் இந்த சங்கம், கடந்த 35 ஆண்டுகளாக கல்வியறிவு திட்டங்களில் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. குறிப்பாக கிராமப்புற, பழங்குடி மற்றும் சிறப்புத் தேவைகள் உள்ள பள்ளிகளில் கவனம் செலுத்துகிறது. "மாணவர்கள் ஈடுபாட்டுடன் இருக்கவும், பள்ளியில் தொடர்ந்து படிக்கவும் நாங்கள் உள்கட்டமைப்பு மற்றும் கல்விக்குத் தேவையான பொருட்களை வழங்குகிறோம். எங்கள் CSR பங்கு தாரரான மிலன் லேப்ஸ், எங்களை போலவே கல்வியில் ஆர்வமாக உள்ளது," என்று அவர் மேலும் கூறினார்.

இந்த ஆண்டு சங்கத் தலைவர் மம்தா வஞ்சானி, தொடர்ந்து CSR ஆதரவுடன் மேலும் ஹாப்பி பள்ளிகளை சேர்க்க இலக்கு வைத்துள்ளார்.


சங்கம் நீர் சேமிப்பிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. $77,000 உலகளாவிய நிதியுதவியுடன், ஜவஹர் தாலுகாவில் உள்ள துங்கனிபாடா கிராமத்தில் இரண்டு தடுப்பணைகள் கட்டடப்பட்டு, சூரிய சக்தியால் இயங்கும் பம்ப் நிறுவப்பட்டது. "நாங்கள் ஆரம்பத்தில் தடுப்பணைகளை மட்டுமே திட்டமிட்டோம். ஆனால் அமெரிக்காவில் உள்ள எங்கள் பங்குதாரர் தங்கள் பங்களிப்பை $62,000-லிருந்து $77,000-ஆக உயர்த்தினர். அது சூரிய தகடுகளை நிறுவ எங்களுக்கு உதவியது," என்கிறார் மேதா. இந்த வசதிகள் இப்போது முழு கிராமத்திற்கும் நீர்ப்பாசனம் மற்றும் வீட்டு உபயோகத்திற்கான நீர் வழங்கலுக்கு உதவுகின்றன.

இருப்பினும், இந்த திட்டத்திற்கு தடைகள் இல்லாமல் இல்லை. "ஆரம்பத்தில், சில கிராம மக்கள் இந்த யோசனையை வரவேற்றாலும், மற்றவர்கள் தங்கள் நிலத்தை இழக்க நேரிடும் என்று பயந்தனர்," என்று அவர் நினைவுகூர்ந்தார். "ஆனால் முதல் தடுப்பணை கட்டி முடிக்கப்பட்டு, அதன் நன்மைகளை – அதாவது ஏராளமான நீர் மற்றும் பசுமையான வயல்களைக் கண்டதும், மற்ற குழுவும் தங்கள் பக்கத்திற்கும் ஒரு அணை கோரினர். இன்று, இரண்டு தடுப்பணைகளும் 50 விவசாய குடும்பங்களை மகிழ்ச்சியாக வைத்துள்ளன." ■

Rotary PEOPLE OF ACTION

# ஒரு கனவு பயணம்

கிரண் ஜெஹரா



நாக்பூரைச் சேர்ந்த ஏழு மாணவர்கள் ஜன்னல்கள் வழியாகப் பார்த்தபோது, பேருந்து பெருமூச்சினால் நிரம்பயது, இருபுறமும் பரந்த பெருங்கடலுடன் வோர்லி கடல் இணைப்பு அவர்களுக்கு முன்னால் விரிந்து கிடப்பதைக் கண்டனர். மாணவர்களில் ஒருவரான ஷ்ரேயா கஜ்பியே, “இந்த பாலம் எப்படித் தண்ணீரின் நடுவில் நிற்கிறது?” என்று ஆச்சரியப்பட்டார்.

நாக்பூர் க்ரீன் சிட்டி, RID 3030 இன் ரோட்டரி சங்கத்தின் திட்டமான சப்னோ கி உடான் (கனவுகளின்

*சங்கத் தலைவர் சைத்ரா சலாங்கர், சங்க உறுப்பினர்களான பத்மா தேத்தே மற்றும் மனிஷா சவுத்ரி மற்றும் குழந்தைகளுடன் கேட்வே ஆஃப் இந்தியாவில்.*



*தாஜ்மஹால் பேலஸ் ஹோட்டல் கேக் கடையில் குழந்தைகள்.*

விமானம்) திட்டத்திற்கு நன்றி, ஷிரேயா, ராஜ் கௌதம், ஷிரியான்ஷ் வைத்யா, கல்யாணி மார்பேடே, ஷிவானி பாரத்வாஜ், மஹிர் ஷா மற்றும் வான்ஷ் நிகாரே ஆகியோருக்கு இது ஒரு மிகச் சிறப்பான நாள், ஏனெனில் அவர்கள் முதல்முறையாக ஒரு விமானத்தில் ஏறி, மும்பையில் ஒரு சூறாவளி சுற்றுப்பயணத்தில் நாளைக் கழித்தனர்.

18 மாதங்களுக்கு முன்பு, இந்தத் திட்டம் தொடங்கியது, அப்போது சங்கம் 10, 11 மற்றும் 12-ம் வகுப்புகளைச் சேர்ந்த இந்த ஏழு மாணவர்களைத் தத்தெடுத்து, ஆண்டு முழுவதும் அவர்களுக்கு புத்தகங்கள், தொழில் ஆலோசனை, மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆளுமை மேம்பாட்டு அமர்வுகள் மூலம் வழிகாட்டினர். அவர்கள் சங்க கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டனர், அவர்களுக்கு புதிய சூழல்கள், ஊக்கமளிக்கும் முன்மாதிரிகள் மற்றும் இலக்குகளை அடைய வல்லுநர்கள் எவ்வாறு ஒன்றிணைந்து செயல் படுகிறார்கள் என்பதைப் பற்றிய ஒரு பார்வை கிடைத்தது.

இந்த முயற்சிகளின் உச்சக்கட்டம் மும்பைக்கு ஒரு நாள் பயணமாக ஆனது, "குழந்தைகள் பறப்பதன் உற்சாகத்தை அனுபவிக்கவும், லட்சியம் மற்றும் வாய்ப்புகளைப் பிரதி நிதித்துவப்படுத்தும் ஒரு நகரத்தைப் பார்க்கவும் நாங்கள் விரும்பினோம்," என்று சங்கத்தலைவர் சைத்ரா சலங்கர் கூறுகிறார்.

பயணத்திற்கான ஏற்பாடுகள் சில வாரங்களுக்கு முன்பே தொடங்கின. சங்கம் விமான டிக்கெட்டுகள், உணவுகள் மற்றும் உள்ளூர் போக்குவரத்தை ஏற்பாடு செய்தது, அதே நேரத்தில் வரலாற்று அடையாளங்கள் முதல் கடற்கரை வரை கற்றல் மற்றும் ஓய்வு ஆகியவற்றின் கலவையை மாணவர்களுக்கு வழங்கும் ஒரு பயணத்திட்டத்தையும் திட்டமிட்டது.

"நான் போர்டிங் பாஸை என் கையில் பிடித்தபோது, என்னால் சிரிப்பதை நிறுத்த முடியவில்லை... என் கையில் பறக்க ஒரு டிக்கெட் இருந்தது" என்று மஹிர் ஷா கூறுகிறார்.

மும்பையில் தரையிறங்கியதும், குழந்தைகள் நகரத்தின் பிரம்மாண்டத்தால் ஆச்சரியப்பட்டனர். விமான நிலைய பேருந்தில் இருந்து "நாங்கள் உயரமான கண்ணாடி கட்டிடங்கள், எப்போதும் ஓடுவது போல் தோன்றிய மேம்பாலங்கள் மற்றும் வண்ணமயமான பதாகைகள் ஆகியவற்றை உற்சாகமாக சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தோம். சில பதாகைகளில் வீடியோ விளம்பரங்கள் இருந்தன. நான் இதற்கு முன்பு அதை பார்த்ததில்லை. போஸ்டர்கள் கூட அசையும் என்று எனக்குத் தெரியாது," என்று வான்ஷ் நிகாரே கூறுகிறார்.

"மும்பையில், நாங்கள் முதலில் அவர்களை பாந்த்ரா-வோர்லி கடல் இணைப்பு வழியாக அழைத்துச் சென்றோம், பின்னர் மெரின் டிரைவிற்கு அழைத்துச் சென்றோம்," என்று சலங்கர் கூறுகிறார். இந்தியாவின் நுழைவாயிலில், சாலைக்கு எதிரே உள்ள தாஜ் மஹால் பேலஸ் ஹோட்டலுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்ல அவருக்கு ஒரு தன்னிச்சையான யோசனை வந்தது. கேக் கவுண்டரில், ₹5,000 விலையுள்ள ஒரு மாம்பழ கேக் மற்றும் ₹100-க்கு சிறிய சாக்லேட்டுகளை அவர்கள் கவனித்தனர். அவைகளை வாங்குவது பட்ஜெட்டில் இல்லை, ஆனால் சலங்கர் அவர்களை உற்சாகப்படுத்தினார்,

“ஒரு நாள், நீங்கள் எங்களைப் போன்ற பார்வையாளர்களாக இல்லாமல் விருந்தினர்களாக இங்கே வர வேண்டும்!” என்று அவர்களிடம் கூறினார்.

இந்த திட்டத்தின் செலவு சுமார் ₹1.5 லட்சம், சங்கத்தால் நிதியுதவி செய்யப்பட்டது. இதில் விமான டிக்கெட்டுகள், உள்ளூர் போக்குவரத்து, உணவுகள் மற்றும் நுழைவு டிக்கெட்டுகள் ஆகியவை அடங்கும். சங்க உறுப்பினர்களான பத்மா தேதே மற்றும் மனிஷா சௌத்ரி ஆகியோர் சங்கத் தலைவருடன் இணைந்து குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் வசதியை உறுதி செய்ய அவர்களுடன் சென்றனர்.

பயணம் முடிவுக்கு வந்த போது, “குழந்தைகள் வெறும் புகைப்படங்களை மட்டுமல்லாமல், ஒரு புதிய உலகத்தைப் பார்த்த நினைவுகளையும் வீட்டிற்கு எடுத்துச் சென்றனர். இருப்பினும், அனைத்து உற்சாகத்திற்கும் பின்னர், அவர்களின் அன்றாட வாழ்க்கை அவர்களுக்காகக் காத்திருந்தது. பல பெற்றோர்கள் தங்கள் ஆட்டோரிக்ஷாவை உள்ளே கொண்டு வந்து தங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்வதற்கு விமான நிலைய நுழைவு டிக்கெட்டைக் கூட வாங்க முடியவில்லை,” என்று சலங்கர் கூறுகிறார். ■



*ஏர் இந்தியா கேபின் குழு உறுப்பினருடன் செல்ஃபி எடுக்கிறார் வன்ஷ் நிகாரே.*

---

2026 மாநாடு

# பரபரப்பு உண்மையாகிறது!



நீங்கள் இதற்குமுன் ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டுக்குச் சென்றதில்லை என்றால், எல்லாரும் சொல்வது போல் அது அந்த அளவு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்குமா என்று நீங்கள் சிந்திக்கலாம். ஜூன் 13 முதல் 17 வரை தாய்பெயில் நடைபெறும் இந்த மாநாடு பற்றிய பரபரப்பு அனைத்தும் உண்மை என்று உங்கள் சக உறுப்பினர்கள் உறுதிப்படுத்துவார்கள். நீங்கள் கற்கவும், பயணம் செய்யவும், வளரவும், இணைப்பை உணரவும் மிகச் சிறந்த வாய்ப்புகளை இது வழங்கும். ரோட்டரி மாநாடு வழக்கத்தை மீறிச் சிறந்து விளங்கும் ஐந்து வழிகள் இவை:

- முதன்மை மேடை மிகச் சிறப்பானது. குறிப்பாக, புகழ் பெற்ற இசைக் குழுக்கள் கச்சேரி நடத்தும் போது! நாள்தோறும் நடைபெறும் பெரிய குழு நிகழ்ச்சிகளில் கலைஞர்கள், ஊக்கமளிக்கும் கதைகளைக் கொண்ட உறுப்பினர்கள், புகழ் பெற்ற பேச்சாளர்கள் இடம்பெறுவார்கள்.
- கற்றல் பயிலகங்கள் மகிழ்ச்சியைப் பரப்பும். சலிப்பான பேச்சுகள் இங்கு இல்லை. இடை நிகழ்ச்சிகளை உங்கள் ரோட்டரி நண்பர்களும் RI பணிகளுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட வல்லுனர்களும் வழிநடத்துவார்கள். இதன் மூலம் உங்களுக்குள் ஆற்றல் நிரம்பும், உங்கள் சேவை ஊக்கம் பெறும்.
- புதிய உறுப்பினர்கள் பலன்களை உணர்வார்கள். சங்க அலுவலர்கள், நெடுநாள் உறுப்பினர்கள் மட்டுமின்றி, புதிய உறுப்பினர்களும் இந்த நிகழ்ச்சி மதிப்புமிக்கது, புதிய நட்புகளை வழங்கக்கூடியது என்கிறார்கள்.
- நீங்கள் அதிகம் செலவழிக்காமல் மகிழ்ச்சியாக அனுபவிக்கலாம். தைவானில் பல இடங்கள் அருகில் உள்ளதால், மாநாட்டு நேரங்களுக்குப்பின் சில சுற்றுலாக்களையும் எளிதாக அனுபவிக்கலாம். குறுகிய காலச் சேமிப்புகளுக்கு, விரைவில் பதிவு செய்யுங்கள்.

மேலும் தெரிந்துகொள்ள,
பதிவு செய்ய: convention.rotary.org

Rotary PEOPLE OF ACTION

# எலும்புப் புற்றுநோய் சிகிச்சைக்கு ஒரு ரோட்டரி முயற்சி

ஜெய்ஸ்ரீ

RC கோயம்புத்தூர் மெரிடியன், RID 3206, கோயம்புத்தூரில் உள்ள ராமகிருஷ்ணா மருத்துவமனையுடன் இணைந்து, ப்ராஜெக்ட் ப்ளாசம் என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது. எலும்பு சர்கோமா என்ற அரிய வகை புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இத்திட்டம் உதவுகிறது. இது பொதுவாக 10–30 வயதுடையவர்களைப் பாதிக்கிறது. “எலும்பு சர்கோமாக்கள் பொதுவாக கை, கால்களின் நீண்ட எலும்புகளில், குறிப்பாகத் தொடை எலும்பு, கால் எலும்பு மற்றும் மேல் கை எலும்புகளில் உருவாகின்றன,” என்று சங்கத்தின் பட்டயத் தலைவர் R தமிழ்செல்வன் விளக்கினார்.

1950களில், பாதிக்கப்பட்ட உறுப்பை அகற்றுவது மட்டுமே ஒரே சிகிச்சை முறையாக இருந்தது. ஆனால் இன்று, மருத்துவ முன்னேற்றங்கள் உறுப்பு பாதுகாப்பு அறுவை சிகிச்சையை வழங்குகின்றன. இதில், பாதிக்கப்பட்ட எலும்புப் பகுதி அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக ஒரு டைட்டானியம் உள்வைப்பு பொருத்தப்படுகிறது என்று ராமகிருஷ்ணா புற்றுநோய் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் P குகன் கூறினார். கீமோதெரபி மேலும் உறுப்பைப் பாதுகாக்க உதவுகிறது. வளரும் குழந்தைகளுக்கு, விரிவடையக்கூடிய செயற்கை உறுப்பு பொருத்தப்படுவதால், உறுப்பு தொடர்ந்து இயல்பாக வளர முடியும். இருப்பினும், இந்தச் சிகிச்சையின் செலவு ஒரு பெரிய தடையாக உள்ளது. செயற்கை உள்வைப்புக்கு சுமார் ரூ.2.5 லட்சம் செலவாகிறது, மேலும் கீமோதெரபி மற்றும் கதிர்வீச்சுக்கு கூடுதலாக ரூ.2 லட்சம் செலவாகிறது.

பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பல நோயாளிகள், நிதிப் பற்றாக்குறையால் அறுவை சிகிச்சைக்குப் பிறகு செயற்கை உள்வைப்பைப் பொருத்தாமல் நிரந்தர ஊனத்துடன் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். “இந்த இளம் வயதினருக்கு நிறைவான வாழ்க்கையை வாழ உதவ விரும்புகிறோம்” என்று தமிழ்செல்வன் கூறினார். இந்த ஆண்டு, 10 நோயாளிகளுக்கு உறுப்பு பாதுகாப்பு அறுவை சிகிச்சைக்கு நிதியளிக்கச் சங்கம் ரூ.25 லட்சத்தை ஒதுக்கியுள்ளது. மேலும், கூடுதல் ஆதரவு பெற உலகளாவிய மானியத்திற்கும் விண்ணப்பித்துள்ளது. தமிழ்செல்வன் ஒரு அறங்காவலராக உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனமான ஆட்டிட்யூட் டிரஸ்ட் மற்றும் கார்டன் ப்ளூ ப்ராப்பர்டீஸ் ஆகியவை இந்த முயற்சிக்கு ஆதரவு அளிக்கின்றன. டாக்டர் குகன், தனிப்பட்ட முறையில் 20 நோயாளிகளுக்குச் சிகிச்சைக்கான செலவை ஏற்றுள்ளார், மேலும் சங்கத்தின் மூலம் பரிந்துரைக்கப்படும் நோயாளிகளுக்கு மருத்துவமனை கட்டணங்களையும், மருத்துவர்களின் கட்டணங்களையும் தள்ளுபடி செய்ய ஒப்புக்கொண்டுள்ளார்.

இத்திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பே, சங்கம் இரண்டு இளம் நோயாளிகளுக்குச் சிகிச்சைக்காக நிதியளித்துள்ளது. ராமகிருஷ்ணா மருத்துவமனையுடனான சங்கத்தின் தொடர்பு 2021-ல் தொடங்கியது. அப்போது, நோயின் கடைசி கட்டத்தில் உள்ளவர்களுக்காக ஒரு தங்குமிடம் மற்றும் ஆதரவு சிகிச்சை மையத்தை நிறுவ சங்கம் உதவியது.■

*கோயம்புத்தூர் ராமகிருஷ்ணா மருத்துவமனையில் Project Blossom தொடங்கப்பட்டது. RC கோயம்புத்தூர் மெரிடியன் சாசனத் தலைவர் R தமிழ்செல்வன், தலைவர் ராதாகிருஷ்ணன், SNR Sons தொண்டு அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் R சுந்தர், ராமகிருஷ்ணா புற்றுநோயியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் Dr P குஹன் மற்றும் திட்டத்தின் பயனாளி பிந்து.*



# ஒரு தேர் நகர்கிறது

ரஷீதா பகத்


கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் பல்வேறு அரசாங்கங்கள் எவ்வளவு மெதுவாக திட்டங்களை செயல் படுத்துகின்றன என்பது பற்றிய பல தகவல்கள் காணப்படுகின்றன. எனவே, அப்போதைய முதல்வர் நவீன் பட்நாயக்கின் அழைப்பின் பேரில் சுப்ரதோ பாக்ச்சி 2016-ம் ஆண்டு ஒடிசாவில் இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கும் சவாலை எவ்வாறு மேற்கொண்டார் என்பது பற்றிய அவரது பதிவைப் படிப்பது, ஒரு புதிய அனுபவமாக உள்ளது.

எப்போதும் ஒரு நல்ல கதை சொல்லியான அவர், தனது சமீபத்திய புத்தகமான 'தி டே தி சாரியாட் மூவுட்' என்பதில், ஏற்கனவே இருந்த ஐ.டி.ஐ-கள் மற்றும் பிற அரசு மற்றும் தனியார் பயிற்சி மற்றும் தொழில் கல்வி நிறுவனங்களைப் பயன்படுத்தி ஒடிசாவின் இளைஞர்களுக்கு எவ்வாறு திறன் பயிற்சி அளித்தார் என்பது பற்றிய சுவாரஸ்யமான கதைகளை எழுதியுள்ளார்.

ஏப்ரல் 2016-ல், மைண்ட்ரீ நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர் பதவியிலிருந்து விலகிய பிறகு, ஓய்வுபெற்ற வாழ்க்கையை வாசிப்பு, கற்பித்தல், பயணம் மற்றும் குடும்பத்துடன் கழிப்பதாக அவர் திட்டமிட்டிருந்தபோது, அவருக்கு புவனேஷ்வரில் இருந்து ஒரு அழைப்பு வந்தது. முதல்வர் பட்நாயக் தொலைபேசியில் ஒரு எளிய கோரிக்கையுடன் பேசினார்: "எங்கள் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டில் உதவுங்கள்." ஒடிசா திறன் மேம்பாட்டு ஆணையத்தின் தலைவராக முழு சுதந்திரம் மற்றும் அமைச்சரின் பதவி வழங்கப்பட்டது.

இந்தியாவின் திறன் இடைவெளி பற்றிய விரிவான வாசிப்பும், திடுக்கிடும் புள்ளிவிவரங்களும், "என்னை ஐ.டி துறையின் உலகத்திலிருந்து வெளியே கொண்டு சென்று, பல காரணங்களால் பாரம்பரிய கல்வி அமைப்பிலிருந்து வெளியேறிய, எந்த ஒரு தொழிலும் திறன் பெறாத, ஆனால் வேலைவாய்ப்பு அவசரமாக தேவைப்பட்ட கோடிக்கணக்கான இளைஞர்களின் உலகத்திற்கு அழைத்துச் சென்றது. இவர்கள்தான் வெல்டர்கள், மெக்கானிக்குகள், பிளம்பர்கள், எலக்ட்ரீஷியன்கள், கால்டாக்சி ஓட்டுநர்கள், பாதுகாப்பு காவலர்கள், விற்பனை உதவியாளர்கள், விமான நிலைய துப்புரவு பணியாளர்கள் மற்றும் மருத்துவமனை உதவியாளர்களாக இருக்கின்றனர்." பயிற்சி பெற்ற நபர்களின் தேவைக்கும் பயன்பாட்டிற்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி இருப்பதை அவர் கண்டார்; இந்த திறன்மிக்க நபர்களை உருவாக்கி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு இது என்று அவர் உணர்ந்தார்.

அவரது மனைவி சுஸ்மிதா, பிறந்த இடத்திற்கு ஏதாவது செய்ய இது ஒரு வாய்ப்பு என்று கூறி பச்சைக்கொடி காட்டினார். பட்நாயக்கின் வாய்ப்பை பாக்ச்சி ஏற்றுக்கொண்டார், ஒரு அமைச்சருக்கான ஊதியமான ₹20 லட்சத்திற்கு பதிலாக, ஆண்டுக்கு ₹1 மட்டுமே சம்பளமாக கேட்டார்.




**The Day the Chariot Moved**
**Author : Subroto Bagchi**
**Publisher : Penguin Business**
**Price : `699**

நான்கு தசாப்த கால கார்ப்பரேட் வாழ்க்கையிலிருந்து அரசு பணிக்கு மாறிய அவரது பயணம், 30 நாட்களுக்கு, 30 மாவட்டங்களில், 3000 கிமீ பயணத்துடன் தொடங்கியது. ஒடிசாவில் சில நூறு ஐ.டி.ஐ மற்றும் பாலிடெக்னிக்குகள் உள்ளன, மேலும் அதே எண்ணிக்கையிலான அரசு மற்றும் தனியார் துறைகளில் குறுகிய கால திறன் மேம்பாட்டு மையங்களும் உள்ளன என்று அவர் நம்மிடம் கூறுகிறார்.

"திறன் மேம்பாட்டு கதையை மனிதாபிமானம் ஆக்குதல்" என்ற அவரது முயற்சி, பல தசாப்த கால தனியார் துறையிலிருந்து அரசு துறைக்கு மாறியபோது அவர் எதிர்கொண்ட ஆரம்பகால போராட்டங்கள், தனது பணியை உணர்ந்து கொள்வது, ஒடிசாவின் திறன் மேம்பாட்டு திட்டத்தில் ஏற்கனவே இருந்தவை மற்றும் அதை பன்மடங்கு பெருக்குவதற்கு அவர் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய பகுதிகள் நகைச்சுவையாகவும் நுண்ணறிவாகவும் உள்ளன. ஒடிசாவின் ஐ.டி.ஐ நிலப்பரப்பில் கோடை வெயிலில் அவர் மேற்கொண்ட முதல் விரிவான பயணத்தின் போது, முதல்வர்கள் தங்கள் ஐ.டி.ஐகள் அமைந்துள்ள நிலப்பரப்புகள், அவர்கள் வைத்திருக்கும் லேத் இயந்திரங்கள், மற்றும் அவர்கள் நிரப்ப வேண்டிய "கிளார்க் மற்றும் பியூன்" காலி பணியிடங்கள் பற்றி ஆர்வத்துடன் கூறினர். அப்போது அவர் தனது தேவைகளை தெளிவாகக் கூறினார். கடந்தகாலத்தில் வெற்றிபெற்ற 10 மாணவர்களின் பெயர்கள், அவர்களில் நான்கு பெண்கள், அவர்களின் சமூக பொருளாதார நிலை மற்றும் தற்போதைய நிலை ஆகியவற்றை கேட்டார். இந்த பத்து பேரில், ஒடிசாவுக்கு வெளியே முத்திரை பதித்த ஆறு பேரின் பெயர்களையும், சொந்தமாக தொழில் தொடங்கிய இரண்டு பேரின் பெயர்களையும் அவர் கேட்டார்.

"எண்களுக்கு ஒரு மந்திர சக்தி உண்டு. அவை விஷயங்களை சுருக்க மாகச் சொல்லி எளிதாக்குகின்றன. நீங்கள் என்னிடம் பல மணிநேரம் பொய் சொல்லலாம், ஆனால் எண்கள் அரிதாகவே பொய் சொல்லும்.

நான்கு பெண்களின் பெயர்கள் மிகமுக்கியம், பெண் குழந்தைகள் சேர்க்கையை மேம்படுத்தும் முயற்சியில் அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு அவர்களை ஒரு உதாரணமாகக் காட்டலாம். இரண்டு சிறு தொழில்முனைவோரின் எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தி அந்த எண்ணிக்கையை அதிகரிக்கலாம். நாம் "எல்லாவற்றின் மையத்திலும் மக்களை வைத்து... நாம் செய்யும் பணிக்கு ஒரு பெயரையும் முகத்தையும் கொடுக்கும்போது, திடீரென்று எல்லாம் லட்சியத்துடன், எழுச்சியூட்டும் மற்றும் மதிப்புமிக்கதாக மாறி, நமது பணியும் ஒரு நோக்கத்தைக் கண்டறியும்" என்று ஆசிரியர் கூறுகிறார்.

புத்தகத்தில் உள்ள ஒரு சுவாரஸ்யமான கதை, ஐ.டி.ஐ பர்காரில் பயிற்சி பெற்று இந்திய ரயில்வேயில் லோகோ பைலட்டாக வேலை செய்து வந்த முனி டிகா என்பவரைப் பற்றியது. அவரிடம் பேச விரும்பிய போது, அவர் "அரசின் அதிகாரத்தை உணர்ந்தார். அரசு விரும்பினால், 140 கோடி மக்கள் கொண்ட ஒரு நாட்டில் கூட, எந்த ஒரு தனிநபரையும் 10 நிமிடங்களுக்குள் கண்டறிய முடியும். மாவட்ட நிர்வாகம் மற்றும் உள்ளூர் காவல்துறைக்கு 4–5 தொலைபேசி அழைப்புகள் மட்டுமே தேவைப்பட்டது. முனி டிகா 10 நிமிடங்களுக்குள் என்னுடன் தொலைபேசியில் பேசினார்."

"நான் யார் என்று அவருக்குத் தெரியவில்லை, ஒரு பெரிய அதிகாரி அவர் படித்த ஐ.டி.ஐ-க்கு வந்துள்ளார் என்பது மட்டுமே அவருக்குத் தெரிந்தது. அவருடைய பழைய கல்வி நிறுவனம் அவரை திடீரென தொடர்பு கொண்டது அவருக்கு சற்று குழப்பத்தை ஏற்படுத்தியது." அவர் புவனேஷ்வர் பிரதான நிலையத்தில் பணிபுரிவதாகவும், கோர்டாவிலிருந்து பலசாவுக்கு இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸை ஓட்டுவது தனது பணி என்றும் கூறினார்.


முனி, பாக்ச்சி ஒரு நட்சத்திர மாகவும், மாநிலத்திற்கு ஒரு சின்னமாகவும் மாறினார். "அவர்தான் திறன் மேம்பாடு மற்றும் மனித மாற்றம் ஆகியவற்றுக்கு இடையேயான வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள நான் பயன்படுத்திய ஒரு சின்னம். ஆறு சகோதரிகள், ஒரு சகோதரன், ஒரு சிறிய நிலம், சில பசுக்கள் மற்றும் ஆடுகள் ஆகியவை அவரது உலகத்தின் ஒரு பகுதியாக இருந்தன. ஒரு பெண்ணாக அவருக்கு பள்ளிக்குச் செல்ல தடை இருந்தது. ஆனால் அவர் சென்றார். அவர் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்ல வேண்டியபோதெல்லாம், தனது புத்தகங்களை தன்னுடன் எடுத்துச் சென்றார். அவர் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல தயாராக இருந்தார்.

அவருடைய தாய் அவரை ஊக்குவித்தார், அவர் உயர்நிலைப் பள்ளியை முடித்தார்; பின்னர், ஒரு ஐ.டி.ஐ-யில் சேர்ந்தார், அங்கு ஒரு லோகோமோட்டிவ் பைலட்டாக மாற வேண்டும் என்று கனவு கண்டார். பயிற்சிக்குப் பிறகு, அவர் இந்திய ரயில்வேயின் போட்டி நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று அந்த வேலையைப் பெற்றார். "நல்ல மற்றும் மோசமான வானிலையில் தினமும் எட்டு மணிநேர ஷிப்ட்டில் ஒரு இன்ஜினைக் கையாண்டு, அதை ஓட்டுவதைப் பற்றி நீங்கள் கற்பனை செய்ய முடியாது. உதாரணத்திற்கு, நம் சமூகத்தில் வீரம் நிறைந்த உருவமாக நீடித்து வருவது, 20 முதல் 47 HP வரையிலான சக்தியை உருவாக்கும் புல்லட் மோட்டார் சைக்கிள் எஞ்சின் ஆகும்." இதற்கு மாறாக முனி, 6,125 HP எஞ்சின் கொண்ட ஒரு லோகோமோட்டிவை கையாளுகிறார், அதன் அதிகபட்ச வேகம் மணிக்கு 140 கிமீ முதல் 160 கிமீ வரை இருக்கும். "ஐ.டி.ஐ-யில் இரண்டு வருடங்கள் அவருக்கு பணம் மற்றும் வேலைவாய்ப்பு திறன்களை மட்டும் கொடுக்கவில்லை, அவரிடமிருந்து யாராலும் பறிக்க முடியாத ஒரு அடையாளத்தையும் கொடுத்தது. ஒரு பெண் திறமைசாலி என்பது, இந்த உலகத்திற்கு வழங்கப்பட்ட சக்தி."

பாக்ச்சியின் புத்தகம், பல சுவாரஸ்யமான கதைகளால் நிறைந்துள்ளது. ஹரியானா முதல் திருப்பூர் வரை தையல் இயந்திரம் இயக்குபவர்களின் தேவை பற்றி அறிய அவர் களத்தில் இறங்கினார்; ஒடிசாவில் தோல் தைக்கும் பயிற்சி பெற்ற பெண்கள் ஹரியானாவில் உள்ள காலணி தொழிற்சாலைகளில் பணிபுரிவதாக அவரிடம் கூறப்பட்டது. ஆனால், அவர் ஒரு தொழிற்சாலைக்குச் சென்று பார்த்தபோது, அவர்கள் ரப்பர் செருப்பு தயாரிப்பாளர்களாக வேலை செய்து, குடிநீர் கூட இல்லாமல் மோசமான நிலையில் வாழ்ந்ததைக் கண்டார்.

திருப்பூரில் உள்ள ஜவுளித் தொழில் பெரும்பாலும் ஒடியா தொழிலாளர்களால் இயக்கப்படுகிறது என்பதையும் கண்டார். அவர்கள் ஒரு நோயாளி பெற்றோருக்கு சிகிச்சை அளிக்க, ஒடிசாவில் தங்கள் வீடுகளை நடத்த, மற்றும் தங்கள் திருமணத்திற்காக சேமிக்க இங்கு வேலை செய்கிறார்கள். ஒரு கடுமையான உண்மை: "மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள ஒரு பெண் நீண்ட காலம் திருமணமாகாமல் இருக்க முடியாது. அது ஏற்றுக்கொள்ளத்தக்கதும் அல்ல பாதுகாப்பானதும் அல்ல." திருப்பூரில் சில வருடங்கள் வேலை செய்து, தனது திருமணத்திற்காக ₹1 லட்சம் வரை சேமிக்க முடியும்... "ஆனால் அந்தப் பணம் அவரது தந்தையின் குடிப்பழக்கம், தாயின் நோய், சகோதரனின் புதிய மொபைல் போன் அல்லது இரு சக்கர வாகனத்திற்கான தேவை, அல்லது தனது பணத்தை இரட்டிப்பாக்குவதாக உறுதியளிக்கும் மோசடி சிட் ஃபண்டில் முதலீடு போன்றவற்றிலிருந்து தப்பித்தால் மட்டுமே முடியும்."

பாக்ச்சி, ஏழு மகள்களைக் கொண்ட ஒரு குடும்பத்தில் மூன்றாவது மகளாகப் பிறந்த, ஒரு கிராமத்து பெண் மற்றும் ஆடு மேய்ப்பவரின் மகள் பசந்தி பிரதான் என்பவரையும் சந்தித்தார். ஆரம்பநிலை தையல் இயந்திரம் இயக்குபவராக இருந்து, அவர் ஒரு லைன் சூப்பர்வைசராக



*சுப்ரோதோ பாக்ச்சி*

மாறியவர். அவர் பாக்ச்சி எப்படி வெற்றிப் பாதையில் முன்னேறுவது என்பது குறித்து விரிவுரை அளித்தார்.

மற்றொரு ஊக்கமளிக்கும் கதை பெங்களூருவில் உள்ள வெஸ்ட்சைடு கடையில் அவர் சந்தித்த சுமதி நாயக்கின் கதை. அந்தக் கடையின் பொது மேலாளர், ஒரு நாள் சுமதி தனது வேலையை எடுத்துக் கொள்வார் என்றார். இவருக்கும் அதே கதைதான், ஒரு சிறிய கிராமம், 10-ம் வகுப்பு தோல்வி, ட்ரெண்ட் நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு திறன் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றார். ஆரம்பத்தில் அவருக்கு ஒடியா மற்றும் கொஞ்சம் இந்தி மட்டுமே பேசத் தெரியும், ஆனால் இப்போது ஆங்கிலம் மற்றும் கன்னடம் இரண்டிலும் சரளமாகப் பேசுகிறார். இறுதியில் அவர் கோயம்புத்தூரில் உள்ள ஒரு புதிய கடைக்கு துறை மேலாளராக உள்ளார்.

அவரது பதவி அரசியல் சாராததாகவும், எந்தக் கட்சியையும் சாராததாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பிய அவர், தனது முதல் விரிவான சுற்றுப்பயணம் மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்து விளக்கினார். சந்தேகமடைந்த அந்த மனிதர், இது "மிகவும் தாமதமானது. கல்வி அமைப்பே சிதைந்து இருக்கும்போது உங்களால் என்ன செய்ய முடியும்? ஒரு 5-ம் வகுப்பு குழந்தையால் எழுதத் தெரியாதபோது மற்றும் 9-ம் வகுப்பு மாணவரால் 5-ம் வகுப்புக்கான எளிய கணக்கைப் போட முடியாதபோது என்ன திறன்மேம்பாடு செய்ய முடியும்? என்று கேட்டார். இந்த விரிவுரையை அமைதியாகக் கேட்ட பிறகு, அந்த குழந்தைக்கு படிக்க மற்றும் எழுதத் தெரியாவிட்டாலும், "அந்த குழந்தை தான் யதார்த்தம். யாருடைய தவறு என்பது முக்கியமல்ல. இனிமேல், அந்தக் குழந்தை என்னுடைய குழந்தை" என்று பாக்ச்சி கூறினார்.

இந்த புத்தகத்தில் பல கசப்பான உண்மைகள் உள்ளன, அவை உங்கள் மனதைத் தொடும். பள்ளிகளில் சிறந்து விளங்காத பல ஏழைக் குழந்தைகளை "புத்திசாலிகள் அல்லது திறமையானவர்கள் அல்ல" என்று ஒதுக்குவதற்கான காரணங்களை விளக்குகையில், பாக்ச்சி ஒரு முக்கியமான காரணம், குழந்தை பருவத்தில் ஊட்டச்சத்து குறைபாட்டால் மூளை வளர்ச்சி சரியாக இல்லாதது என்கிறார். ஒரு இளைஞராக, ஒரு சூழ்நிலையை மதிப்பிடவும், எது நல்லது அல்லது தீங்கு விளைவிக்கும் என்பதைப் பற்றி சரியான முடிவுகளை எடுக்கவும் முடியாது."

இத்தகைய குழந்தைகள் பள்ளியில் சரியாக படிக்க மாட்டார்கள், பாதியிலேயே வெளியேறிவிடுவார்கள், மீண்டும் பள்ளிக்கு செல்வதில்லை. 2024 உலக பட்டினி குறியீட்டின் படி, 35.5% இந்திய குழந்தைகள் வளர்ச்சி குன்றியவர்களாகவும், 18.7% பேர் மெலிந்தவர்களாகவும் உள்ளனர். இந்த குறியீட்டில் உள்ள 127 நாடுகளில், நாம் 105வது இடத்தில் இருக்கிறோம். இந்த குழந்தைகள் எங்கு படிக்கிறார்கள்? நிச்சயமாக அரசுப்பள்ளிகளில் தான்!

யூனிகார்ன் - $1 பில்லியன் மற்றும் அதற்கு மேல் மதிப்புள்ள நிறுவனங்கள் - மற்றும் நானோ யூனிகார்ன் பற்றி புரிந்துகொள்ள புத்தகத்தைப் படியுங்கள்; முதல் வகை வேலைவாய்ப்புகளைக் குறைக்கும் போது, இரண்டாவது வகை அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றன.

மே 2024 தேர்தலுக்குப் பிறகு அரசு மாறியபோது பாக்ச்சி வெளியேறினார், அப்போது, புதிய அரசு "நாங்கள் இணைந்து உருவாக்கிய பல விஷயங்களை முன்னெடுத்துச் சென்றுள்ளது" என்று அவர் மகிழ்ச்சி யடைகிறார். உலகத்திறன் மையம் போன்ற விஷயங்கள் அதற்கு உதாரணம்; அதன் நானோ யூனிகார்ன் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு விரிவு படுத்தப்பட்டது. மேலும், ஐ.டி.ஐ ஒரு நிறுவனமாக தொடர்ந்து செழித்து வருகிறது, இந்தியாவின் சிறந்த 100 ஐ.டி.ஐ-களில் 10 ஒடிசாவில் உள்ளன.■

# போக்குவரத்து மற்றும் வாழ்வாதார உதவி வழங்கிய RC சாணக்யா

ரோட்டரி செய்திக்குழு



RI *இயக்குநர்* M *முருகானந்தம் மற்றும்* DG *நம்ரதா பள்ளி மாணவர்களுடன்.*

21 பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டிகளையும், ஒரு மாற்றுத்திறனாளி உட்பட நான்கு பெண்களுக்கு தள்ளுவண்டிகளையும் வருமானம் ஈட்ட உதவும் வகையில் RI இயக்குநர் M முருகானந்தம் வழங்கினார். இந்த உதவிகளை RC சாணக்யா, RID 3250, வழங்கியது.

"பள்ளிக்கு நீண்ட தூரம் பயணிக்கும் மாணவர்களை நாங்கள் அடையாளம் கண்டு அவர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினோம். அதேபோல, பெண்கள் கடைகள் அமைத்து வாழ்வாதாரம் ஈட்ட தள்ளு வண்டிகள் வழங்கப்பட்டன" என்று சங்கத் தலைவர் அபிஷேக் அபூர்வ் கூறினார்.■

# பாவ்நகரில் 26 ஆண்டுச் சிறுவர் நலப் பயணம்

ரோட்டரி செய்திக்குழு

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 9:30க்கு, குஜராத் பாவ்நகர் ரோட்டரி சேவை மையம் பொது நல மையமாக மாறிவிடுகிறது. அங்கு 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் பாதுகாப்பான, சூழலில் தடுப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றன.

26 ஆண்டுகளுக்குமுன், RC பாவ்நகர் அதன் அப்போதைய தலைவர் மனீஷ் கோத்தாரி தலைமையில் இந்த மையத்தை அமைத்தது. “நாங்கள் இந்தச் சமூகத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்பான தடுப்பு மருந்து வழங்க விரும்பினோம்” என்று நினைவுகூர்கிறார் கோத்தாரி. இப்போது, இது பாவ்நகர், சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளுக்குச் சேவை புரியும் சிறுவர் நலப் பராமரிப்பு மருந்தகமாக மாறிவிட்டது.



ரோட்டரி சேவை மையத்தில் ஒரு குழந்தைக்கு தடுப்பூசி செலுத்தப்படுகிறது.

நகராட்சிக் கழகத்தின் நலத்துறையிடமிருந்து பெறப்பட்ட மருத்துவப் பொருட்களைக் கொண்டு பொதுத் தடுப்பு மருந்துத் திட்டத்தின்கீழ் கட்டாயத் தடுப்பு மருந்துகளை இலவசமாக வழங்குவதுடன், “நாங்கள் நிமொகொக்கல், டைஃபாய்ட், இன்ஃப்ளுயன்சா, HPV போன்றவற்றுக் கான கூடுதல் தடுப்பு மருந்துகளைக் குறைந்த விலையில் வழங்குகிறோம்” என்று விளக்குகிறார் இவர்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இந்த ரோட்டரி மையம் தொலைதூரக் கிராமங்கள், அருகிலுள்ள நகரங்களிலிருந்து பெற்றோருடன் வருகிற 250க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து வழங்குகிறது. “கட்டாயத் தடுப்பு மருந்துகளை இலவசமாக வழங்குவதுடன், கூடுதல் சேவைகளுக்காகப் பெற்றோரிடமிருந்து வாரந்தோறும் சுமார் ரூ.2 லட்சத்தை நாங்கள் விலைக்குக் கட்டணம் அடிப்படையில் பெறுகிறோம்” என்கிறார் பாவ்நகர் ரோட்டரி சங்கச் சமூகத்தின் செயலாளர் ஜிதேன் ஷா.

தடுப்பு மருந்துகள் குழந்தைகளை நோய், ஊனம், இறப்பிலிருந்து காக்கின்றன. “எங்கள் ரோட்டரி மையம் குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து வழங்குவதுடன், பெற்றோருக்குத் தடுப்புப் பராமரிப்பைப்பற்றிக் கற்றுத்தருகிறது, அதன் மூலம் எங்கள் சமூகங்களின் நோயெதிர்ப்பாற்றலை வலுவாக்கு கிறது” என்கிறார் கோத்தாரி.■

---

நீங்கள் **ரோட்டரி நியூஸ் பிளஸ்** படித்திருக்கிறீர்களா? அல்லது அது உங்கள் ஸ்பேம் கோப்புறையில் செல்கிறதா?




ஒவ்வொரு மாதமும் உங்கள் திட்டங்களை உள்ளடக்கிய **ரோட்டரி நியூஸ் பிளஸ்** ஆன்லைனில் வெளியிடுகிறோம். இது மாதத்தின் நடுப்பகுதியில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது.

**ரோட்டரி நியூஸ் பிளஸை** எங்கள் வலைத்தளமான www.rotarynewsonline.org-ல் படிக்கவும்.

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

கிரண் ஜெஹரா

## சிறிய சங்கங்களை பெரிய குடும்பங்களாக மாற்றுதல்

தமது கணவரின் அத்தை மூலம் 2000-ம் ஆண்டில் ரோட்டரியில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரக்யா மேத்தா, 2009-ம் ஆண்டு ரோட்டேரியன் ஆனார். 2018-ல் அவர் சங்கத்தின் தலைவராக சேவையாற்றினார்.

"உறுப்பினர்கள் சேர்க்கை என்னும் குறிக்கோள் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டதல்ல, 10 உறுப்பினர்கள் கொண்ட சிறிய சங்கங்களை வலுப்படுத்தி உறுப்பினர்கள் எண்ணிக்கையை 25 ஆக உயர்த்துவதுதான் எனது நோக்கம்" என்கிறார். ஒரு குறிப்பிட்ட உறுப்பினரின் பங்களிப்பு, பொழுதுபோக்கு அல்லது தனிப்பட்ட சாதனைகளை சங்கத்தின் கூட்டங்களின்போது நேரம் ஒதுக்கி பாராட்டுவதை விரும்புகிறார். மேலும் கூட்டத்துக்கு வராதவர்களிடம், " நீங்கள் ஒரு நல்ல வாய்ப்பை தவறவிட்டு விட்டீர்கள்" என்று நட்பு அடிப்படையில் பரிந்துரைக்கிறார். உறுப்பினர்கள் சேர்க்கை தொடர்பான கருத்தரங்கின் போது உறுப்பினர்களின் தேவைகளை புரிந்து கொள்ளவும், அவர்களின் குறைகளை கேட்கவும் வெளிப்படையாக கலந்துரையாடல் நடத்த நேரம் ஒதுக்கவும் திட்டமிட்டுள்ளார்.

ரோட்டரியில் பெண்களுக்கு ஆதரவாக பிரக்யா செயல்பட்டு வருகிறார். உங்கள் சங்கத்தில் பெண்களைச் சேர்க்காதவரை நீங்கள் இருக்கும் ஆற்றலில் 50 சதவீதத்தை பயன்படுத்தவில்லை என்று அர்த்தமாகும். ரோட்ராக்ட் மற்றும் இன்டராக்ட் சங்கங்களுக்கு மூத்த சங்கங்கள் வழிகாட்டுவதை அவர் ஊக்குவிக்கிறார்.

100 சதவீத பங்களிப்பு செய்த சங்கங்கள் என்னும் சாதனையை எட்ட வேண்டும் என்பதே அவரது TRF குறிக்கோளாகும். இதுவரை 150 உறுப்பினர்கள் தலா ரூ.1,100 வீதம் TRF-க்கு பங்களிப்பு செய்துள்ளனர்.



**பிரக்யா மேத்தா**
மென் திறன் பயிற்சியாளர்
கோட்டா ரோட்டரி சங்கம்
RID 3056

## சேலத்தில் நீரிழிவுநோய் மையம்



**சிவசுந்தரம் P**
ஜவுளி தயாரிப்பாளர்
குமாரபாளையம் ரோட்டரி சங்கம்
RID 2982

PDG A K நடேசன் அறிமுகத்தில் 2002–03-ல் ரோட்டரியில் சேர்ந்தார். 2012–13-ல் சங்கத்தின் தலைவராக இருந்த போது திட்டங்களின் மதிப்பை உணர்ந்தார். பொது கழிப்பறைகள் கட்டப்பட்டு இன்றளவும் அவை பயன் பாட்டில் இருப்பதை நினைவு கூர்கிறார்.

இந்த ஆண்டு மாவட்டத்தின் 23 உதவி ஆளுநர்கள் தலா ஒரு புதிய சங்கம் நிறுவப்படும். இவற்றின் மூலம் 500-க்கும் மேலான உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள். ஒரு புதிய உறுப்பினர்களை கொண்டுவருபவர்களுக்கு அங்கீகார சான்றிதழும், 25 மற்றும் அதற்கு மேலான உறுப்பினர்களை கொண்டு வருபவர்களுக்கு PHF கௌரவமும் வழங்கப்படும்.

மாவட்டத்தில் பெண்கள் மட்டுமே கொண்ட சங்கங்கள் நான்கு உள்ளன. இவற்றில் 200-க்கும் மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் உள்ளனர்.

மாவட்ட அறக்கட்டளைத் தலைவராக (2017–20) நிதி திரட்டுவதில் அனுபவம் கொண்ட அவர், ரூ.70 லட்சம் CSR நிதியுதவியுடன், ராசி ஸ்வீட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து சேலத்தில் நீரிழிவு நோய் சிகிச்சை மையம் அமைக்கும் திட்டத்தை தொடங்கவுள்ளார். சங்ககிரியில் இலவச உணவு, தொழில் பயிற்சி மற்றும் டயாலிசிஸ் சிகிச்சை பிரிவு என பல்முனை பயன்பாட்டு மையம், மருத்துவ முகாம்கள் நடத்தவும், சலுகை கட்டணத்தில் சிகிச்சை அளிக்கவும் 6 மருத்துவமனைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை இதர முயற்சிகளாகும். வரும் அக்டோபர்–நவம்பர் மாதங்களில் செயற்கைக் கால்கள் வழங்கும் முகாம் நடத்தவும் திட்டமிட்டுள்ளார்.

இந்த ஆண்டு மாவட்டத்தில் 6 புதிய ரோட்ராக்ட் சங்கங்கள் மற்றும் 6 புதிய இன்டராக்ட் சங்கங்களை நிறுவவும் உறுதிபூண்டுள்ளார்.

## வளர்ச்சிக்காக இன்னர்வீல் சங்கத்துடன் கூட்டு

முன்னாள் ரோட்ராக்டரான நிகம்குமார் சௌத்ரி தமது குடும்பத்தினர் மூலம் ரோட்டரிக்கு அறிமுகமானார். இந்த ஆண்டு 15 புதிய சங்கங்கள் நிறுவுவதையும், உறுப்பினர்கள் எண்ணிக்கையை 400 ஆக உயர்த்துவதையும் அவர் இலக்காக கொண்டுள்ளார். “உறுப்பினர்களைச் சேர்க்கும் முன் ரோட்டரி பற்றி என்ன தெரியும் என்று அவர்களிடம் கேளுங்கள். சேவைத் திட்டங்கள், கூட்டுறவு நிகழ்வுகள் மற்றும் சங்க கூட்டங்களில் பங்கேற்க அழைப்பு விடுங்கள். அப்போதுதான் அவர்களால் சங்கத்தின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள முடியும். இது உறுப்பினர்களை தக்கவைக்க பெரிதும் உதவும்”.

மாவட்டத்தில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 14 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக அதிகரிக்கும் நோக்கில் பாலின பன்முகத்தன்மையை மேம்படுத்துவதிலும் சௌத்ரி கவனம் செலுத்தி வருகிறார். இதை அடைய சங்கங்கள் இன்னர் வீல் சங்கங்களுடன் கூட்டுசேர்ந்து தங்கள் உறுப்பினர்களை ரோட்டரிக்கு அறிமுகப்படுத்தவும் இரட்டை உறுப்பினர் என்கிற கருத்தை ஊக்குவிக்கவும் உதவுகின்றன.

ஒவ்வொரு ரோட்டேரியனும் ஒரு நன்கொடையாளர் என்கிற முன்முயற்சியின் கீழ் TRF நிதிப் பங்களிப்பை 2.5 லட்சம் டாலரிலிருந்து 4 லட்சம் டாலராக அதிகரிப்பதே மாவட்டத்தின் இலக்காகும். கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி, தொழில் பயிற்சி மையம், செயற்கைக்கால்கள் வழங்கு முகாம் மற்றும் பார்வையற்றோருக்கு ஸ்மார்ட் கண்ணாடிகள் வழங்கும் திட்டங்களுக்காக நிதியளிக்க ONGC மற்றும் பாங்க் ஆஃப் இந்தியாவுடன் மாவட்டம் கூட்டுசேர்ந்துள்ளது.

ஒரேநாளில் ஒரு லட்சம் மாணவர்களைச் சென்றடையும் வகையில் பெரிய அளவிலான புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் போதைப் பொருள் எதிர்ப்பு பிரசாரங்கள் நடத்துவது இந்த ஆண்டின் முக்கிய திட்டங்களில் அடங்கும்.

ரோட்டரி சங்கங்கள் தலா மூன்று இன்டராக்ட் சங்கங்கள் மற்றும் இரண்டு ரோட்ராக்ட் சங்கங்கள் தொடங்குமாறு அவர் வலியுறுத்தி வருகிறார்.



**நிகம்குமார் சௌத்ரி**
கட்டிடக் கலைஞர்
விஸ்நகர் ரோட்டரி சங்கம்
**RID 3055**

## பெண்களை வரவேற்க வரிவிலக்கு அளித்தல்



**செல்லா K ராகவேந்திரன்**
பட்டய கணக்காளர்
கோயம்புத்தூர் ஸ்பெக்ட்ரம் ரோட்டரி சங்கம், **RID 3206**

DG செல்லா ராகவேந்திரன், மே 2002-ல் சென்னை டவர்ஸ் ரோட்டரி சங்கத்தில் சேர அவருக்கு மிகப்பெரிய உத்வேகம் அளித்தவர் அவரது சகோதரர் செல்லா K ஸ்ரீனிவாசன். அவர் 1986-ம் ஆண்டு முதல் ரோட்டேரியனாக இருக்கிறார். ஒருமுறைகூட சங்கத்தின் கூட்டத்தை தவறவிட்டதில்லை. அவரது மாமா PDG C N கங்காதரன், அனைவராலும் அறியப்பட்ட ரோட்டரி தலைவராக இருந்தார்.

சமீபத்தில் பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றை வழிநடத்தும் ராகவேந்திரன், இந்த ஆண்டு புதிதாக 20 சங்கங்களையும், சுமார் 650 கூடுதல் ரோட்டேரியன் களைச் சேர்ப்பதிலும் கவனம் செலுத்தி வருகிறார். “உறுப்பினர்களுக்கு தெளிவான பயிற்சி கொடுங்கள், அவர்களின் ரோட்டரி தருணத்தை கண்டறிய உதவுங்கள், நிகழ்வுகள், நட்புறவு மற்றும் செயல் குழுக்களில் அவர்களை ஈடுபடுத்துங்கள்” என்று சங்கத் தலைவர்களுக்கு அவர் அறிவுரை கூறுகிறார்.

RID 3206 தமிழகம் மற்றும் கேரளத்தை இணைக்கிறது. இதனால் அனைத்து தகவல் தொடர்புகளும் ஆங்கிலத்தில் உள்ளன. பாலின பன்முகத்தன்மையை அதிகரிக்க (தற்போது 8 சதவீதமாக உள்ளது) 2025–26 ஆம் ஆண்டில் ரோட்டரியில் சேரும் பெண்களுக்கு வரி தள்ளுபடி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டம் TRF-க்கு 1.5 மில்லியன் டாலரை இலக்காக நிர்ணயித்துள்ளது. தனிநபர் இலக்குகள் வருடாந்திர நிதிக்கு 100 டாலர், போலியோ பிளஸ் திட்டத்துக்கு 30 டாலர் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. “மனநிலை மாற்றம்தான் மிகப்பெரிய சவாலாகும். சமூகத்துக்கு திருப்பிச் செலுத்த TRF பங்களிப்புதான் சிறந்த வழியாகும்”.

அவரது பதவிக்கால சேவைத் திட்டங்களில் மகளிர் மேம்பாடு, முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளை பராமரித்தல் மற்றும் இளைஞர்களிடையே போதைப் பொருள் பயன்பாட்டை தடுப்பது ஆகியவை அடங்கும். பெரிய இலக்குகள் 50 டயாலிசிஸ் இயந்திரங்கள் நிறுவுதல், 50 ஸ்மார்ட் வகுப்புகளை நிறுவுதல், தேவையான பகுதியில் 500 கிலோவாட் சூரியசக்தி மின்உற்பத்தி கட்டமைப்பை ஏற்படுத்துதல் மற்றும் ஒரு மில்லியன் இலவச உணவு ஆகிய திட்டங்களும் அடங்கும்.■

# பரபரப்பாக செயல்பட்டு வரும் தில்லி ரோட்ராக்டர்கள்

ஜெய்ஸ்ரீ

புது தில்லியில் உள்ள மகளிர் கல்லூரியான மைத்ரேயி கல்லூரியுடன் இணைக்கப்பட்ட தில்லி மிட்டவுன் மைத்ரேயி ரோட்ராக்ட் சங்கம் 2023-ல் தில்லி மிட்டவுன் ரோட்டரி சங்கத்தால் (RID 3011) நிறுவப்பட்டது. ரோட்ராக்டர்கள் வீட்டு வன்முறை மற்றும் பாலின துஷ்பிரயோகத்திலிருந்து தப்பியவர்களை ஆதரிப்பதில் ஆர்வமாக உள்ளனர். அவர்களின் பெரும்பாலான சேவை நடவடிக்கைகள் மகளிர் மேம்பாடு, இளம் பெண்களின் வளர்ச்சியையே மையமாகக் கொண்டுள்ளது.

இவை அனைத்தும் கடந்த 2024 ஆகஸ்டு மாதம் ராஹா (RAHA) திட்டத்தில் தொடங்கியது. கொல்கத்தாவில் உள்ள R G கர் மருத்துவக் கல்லூரி கருத்தரங்க அறையில் கொடூரமாக பாலியல் வன்முறைக்கு ஆளாகி, கொலை செய்யப்பட்ட 31 வயது பயிற்சி மருத்துவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சங்கத்தின் உறுப்பினர்கள் அமைதிப் பயணம் ஒன்றை மேற்கொண்டனர். இதில் எங்கள் கல்லூரி மற்றும் இதர கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 750 மாணவர்கள் பங்கேற்றனர். பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான பெண்ணுக்கு நீதி கிடைக்க வேண்டும். பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்று வலியுறுத்தும் பதாகைகளுடன் மாணவர்கள் அமைதிப் பேரணி சென்றனர் என்கிறார் சங்கத்தின் பட்டயத்தலைவரும், IPP-யுமான மஹி ஆஸாத்.



RAHA திட்டத்தின் ஒரு பகுதியாக அமைதி நடைப்பயணத்தில் பங்கேற்கும் ரோட்டராக்டர்கள்.








ராஹா திட்டத்தின் அடுத்த கட்டமாக, இஸ்ரேலிய தற்காப்புக்கலை நிபுணர் நிக்கி துபே என்பவரால் தொடர்ச்சியாக தற்காப்புக்கலைக்கான பயிலரங்குகள் நடைபெற்றன. மூன்று வார காலம் நடைபெற்ற இந்த பயிலரங்கில் சுமார் 250 பேர் பங்கேற்று பல்வேறு வகையான தற்காப்புக்கலை நுணுக்கங்களையும் தாக்குதல் கலைகளையும் கற்றுக் கொண்டனர். நிஜவாழ்க்கையில் சவால்களை எதிர்கொள்ளவும் தங்களை தயார்படுத்திக் கொண்டனர்.

பல கட்டங்களாக நடைபெற்று வரும் இத்திட்டத்தின் இதர முயற்சிகளின் கீழ் சேரிகளில் வசிக்கும் குழந்தை களுக்கான கல்வியும் அடங்கும். அதாவது அவர்களுக்கு நல்ல நோக்கத்துடன் தொடுதல், கெட்ட நோக்கத்துடன் தொடுதல் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் முன்பின் தெரியாதவர்களின் அநாகரீகமான உரையாடல்களை எப்படி அடையாளம் காண்பது, அவர்களின் கெட்ட நோக்கத்தை எப்படி புரிந்துகொள்வது என்று சொல்லித்தரப்பட்டது. “நாங்கள் குழுக்களாக பல்வேறு பகுதிகளுக்குச் சென்று குழந்தைகள், வளர் இளம் பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். இந்த உரையாடல்களில் சிறுவர்களும் கலந்து கொண்டனர்” என்கிறார் மஹி.

மூன்றாவது கட்டத்தில் கதை சொல்லும் அமர்வும் அடங்கும். இதில் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் கதைகளை பிறருக்கு சொல்வார்கள். இது கூட்டு வலிமையை வளர்க்க உதவியது. இந்த அமர்வு நான்குபேர் கொண்ட குழுக்களிடம் தாங்கள் எதிர்கொண்ட கடினமான அனுபவங்களை பகிர்ந்து கொள்வதை ஊக்குவித்தது. பாதிப்பு, துணிச்சல் மற்றும் இணைப்புக்கான இடமாக மாறியது. ஆறுதல் கேட்பதிலிருந்து தொடங்குகிறது என்பதையும், வேதனையான தருணங்களில் நாம் தனித்துவிடப்படவில்லை என்பதையும் ராஹா நமக்கு நினைவுபடுத்தியது. எங்களது பேச்சாளர்கள்

காட்டிய வலிமை அறையிலிருந்த ஒவ்வொருவரின் மனதையும் தொடுவதுபோல் அமைந்திருந்தது. மேலும் நெருக்கத்தையும், பரிவையும், ஆதரவையும், பரஸ்பரம் புரிதலையும் ஏற்படுத்தும் வகையில் இருந்தது. இது ஒரு சாதாரண அமர்வுக்கு மேலாக இருந்தது. மனித குலத்தின் சக்தியை நினைவுபடுத்துவது போல் அமைந்திருந்தது.

இந்த திட்டத்தால் பலம் பெற்ற சங்கம், திறன் மேம்பாடு, விழிப்புணர்வு மற்றும் பொருளாதார அதிகாரமளித்தல் மூலம் ஆள்கடத்தல் பிரச்னைக்குத் தீர்வுகாணும்விதமாக மற்றொரு மூன்று கட்ட முயற்சியாக “பிரபால்” (Prabal) திட்டத்தை ஒருங்கிணைத்தது. முதல் கட்டமாக ரோட்ராக்டர்கள் ஒரு சட்ட அறிவு பயிலரங்கத்துக்கு ஏற்பாடு செய்தனர். இதில் சட்ட நிபுணர்கள் கலந்துகொண்டு சட்ட உரிமைகள், சட்டப் பாதுகாப்பு மற்றும் உதவி எண்கள் குறித்த தகவல்களை சலாம் பாலக் அறக்கட்டளையில் உள்ள பெண்கள், வளர் இளம்பெண்களிடம் பகிர்ந்துகொண்டனர். இந்த விவரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் பங்கேற்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. “சட்ட நுணுக்கங்கள் பற்றிய தகவல்கள் தான் அவர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான முதல் நடவடிக்கையாக இருந்தது” என்று புன்னகையுடன் அவர் கூறினார்.

அடுத்த கட்டமாக ஆள்கடத்தல், பாலியல் வன்முறை ஆகியவற்றிலிருந்து மீண்டு வந்தவர்களுக்கு கைத்தொழில் வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டது. விஹான் என்னும் சேவை நிறுவனத்தின் ஆதரவுடன் 25 பெண்களுக்கு வளையல்கள், அலங்காரப் பொருள்கள், மொபைல் சாதனத்துடன் இணைக்கும் சங்கிலிகள், பட்டைகள், காற்றில் அசைந்து ஒலியெழுப்பும் மணிகள் மற்றும் வீட்டு அலங்காரப்பொருள்கள் தயாரிப்பது எப்படி என்று கற்றுக்கொடுக்கப்பட்டது. கலைப் பொருள்கள் தயாரிக்கத் தேவையான மூலப்பொருள்களை நாங்கள் கொடுப்பதுடன், அவர்கள் தயாரித்த கலைப் பொருள்களை கல்லூரிகளிலும் வேறு சில இடங்களிலும் நடைபெறும் நிகழ்வுகளில் சந்தைப்படுத்தவும் உதவினோம். இதன் மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும் அவர்களிடம் வழங்கப்பட்டது. இதனால் அவர்கள் சுதந்திரமாக இருக்கவும், நிலையான வருமானம் பெறவும் முடிந்தது. “எங்களால் அறியப்பட்ட இடங்களில் அவர்களின் செயல்திறமையை ஊக்குவித்து வந்தோம். இதனால் அவர்கள் தொடர்ந்து வர்த்தகம் செய்ய முடிந்தது” என்றார் அவர்.

ஜனக்புரி மேற்கில் உள்ள ஒரு சேவை நிறுவனத்தைச் சேர்ந்த 30 குழந்தைகளிடம் படைப்புத் திறனை வளர்ப்பது திட்டத்தின் மூன்றாவது கட்டமாக இருந்தது. அங்கிருந்தவர்களின் ஆர்வத்தின் அடிப்படையில் வண்ணம் தீட்டுதல், ஓவியம் வரைதல் மற்றும் கதை எழுதுதல் எப்படி என்று சொல்லித்தரப்பட்டது. “இந்தக் குழந்தைகளிடம் சுயமதிப்பு மற்றும் நம்பிக்கையை வளர்ப்பதே எங்கள் நோக்கமாக இருந்தது. அவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியபோது அவர்களின் மகிழ்ச்சியில் பிரகாசிப்பதைக் கண்டு நாங்கள் வியப்படைந்தோம்”.


பாலியல் கடத்தல், குடும்ப வன்முறை, பாலின பாகுபாடு மற்றும் பணியிட பாகுபாடு போன்ற பெண்களின் பிரச்னைகளை மையமாக வைத்து ஃபெமோரா என்னும் 8 தொகுதிகள் கொண்ட விடியோவை சங்கம் தயாரித்து





வெளியிட்டுள்ளது. இந்த விடியோக்கள் யூடியூப்பிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆனால், மஹியின் இதயத்தை தொடும் திட்டம் “ஜாக்ருதி” என்பது அவர், அதைப் பற்றி பேசும்போதே தெரியவந்தது. சங்கத்தில் மொத்தம் 136 ரோட்ராக்டர்கள் உள்ளனர். அனைவருமே இத்திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளனர். தலைநகரில் உள்ள ஒரு சேரிப்பகுதியை சங்கம் தத்தெடுத்து, அங்கு நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறது. “அங்கு பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு தினமும் இரண்டு மணி நேரம் ஏதாவது ஒரு தலைப்பில் பாடம் எடுக்கிறோம்”. ஒவ்வொரு புதன்கிழமை மஹி அந்த இடத்திற்குச் சென்று ஆங்கிலப் பாடம் கற்பிக்கிறார். மற்ற உறுப்பினர்களும் வாரத்தின் ஏதாவது ஒரு நாளில் தங்களுக்கு தெரிந்த தலைப்புகளில் பாடம் நடத்துகின்றனர். இங்குள்ள பெற்றோர் பெரும்பாலும் கல்வி அறிவில்லாதவர்களாகவும், குறைந்த வருமானம்



*மனித கடத்தல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து தப்பியவர்களுக்கு கைவினைப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.*




உடையவர்களாக இருந்தாலும், எங்களது முயற்சியை வெகுவாக பாராட்டி வருகின்றனர் என்கிறார் மஹி.


“முன்னதாக குழந்தைகள் தனியாரிடம் டியூஷன் படித்து வந்தனர். இதற்காக அவர்கள் மாதம் ரூ.400 முதல் ரூ.500 வரை செலவிட வேண்டியிருந்தது. நாங்கள் குழந்தைகளுக்கு எந்த கட்டணமும் இல்லாமல் இலவசமாக பாடம் கற்பிக்கிறோம் என்று சொன்னவுடன் அவர்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர். குழந்தைகளும் எங்களிடம் கல்வி கற்பதில் ஆர்வமாகவும் மகிழ்ச்சியுடனும் இருக்கின்றனர். அவர்கள் பெறும் மதிப்பெண்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது” என்று கூறி புன்னகைக்கிறார் அந்த ரோட்ராக்டர்.

சங்கம், சஞ்சீவனி மற்றும் ஆயுஷ்மான் திட்டங்கள் மூலம் நகரில் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக சுகாதார மற்றும் மருத்துவ முகாம்களை நடத்தி வருகிறது. இதன் மூலம் 1,000 பேர் பயனடைந்துள்ளனர். குழந்தைகளுக்கு ஏற்படும் இரத்த சோகை நோய்க்கு (ஹீமோகுளோபின் குறைபாடு) சிகிச்சை அளிக்க வசதியாக சங்கம் அவ்வப்போது இரத்ததான முகாம்களையும் நடத்தி வருகிறது. இதன் மூலம் சேகரிக்கப்படும் இரத்தம், சேகரிப்பு மையங்களில் சேமித்து வைக்கப்படுகிறது.

பட்டப்படிப்பை முடித்த மஹி, இப்போது பட்டமேற்படிப்புக்காக ஸ்ரீராம் வணிகவியல் கல்லூரியில் சேர்ந்துள்ளார். அவரும், அவருடன் படிக்கும் 47 பேரும் தில்லி ஜெனிசிஸ் ரோட்ராக்ட் சங்கத்தில் சேர்ந்துள்ளனர். தில்லி ஜெனிசிஸ் ரோட்டரி சங்கத்தால் நிறுவப்பட்டது இந்த ரோட்ராக்ட் சங்கம். இந்த புதிய சங்கம் இப்போது பெண்கள் மற்றும் இளைஞர்களிடையே புற்றுநோய் விழிப்புணர்வு திட்டங்களுடன் நல்வாழ்வு முயற்சிகளைத் தொடங்கியுள்ளது. இந்த ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தில் சங்கம், பெண்களுக்காக மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் கண்டறியும் சிறப்பு முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தது. “மருத்துவ நிபுணர்களின் உதவியுடன், பார்வையாளர்களுக்கு முன்கூட்டியே புற்றுநோய்க்கான அறிகுறிகளை அறிந்துகொள்வதற்கான சுயபரிசோதனை செய்துகொள்ளும் முறைகளையும் கற்றுக்கொடுத்துள்ளோம். மேலும் இந்த நோயை முளையிலேயே கிள்ளி எறியும் வகையில் சரியான நேரத்தில் மருத்துவ ஆலோசனை பெறுவதன் அவசியத்தையும் வலியுறுத்தினோம்” என்றும் அவர் கூறினார்.■

# Membership & TRF contribution summary






## Rotary worldwide

| | | | |
|---|---|---|---|
| Rotary clubs : | 36,464 | Rotary members : | 1,150,586 |
| Rotaract clubs : | 9,592 | Rotaract members : | 133,870 |
| Interact clubs : | 17,520 | Interact members : | 403,098 |
| RCCs : | 14,122 | | As on August 22, 2025 |

*Membership figures as on August 1, 2025.
*TRF contribution figures as on July 31, 2025.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்



## RID 2981

**RC நெய்வேலி லிக்னைட் சிட்டி**

தலா ரூ.50,000 மதிப்புள்ள இரண்டு உலோகத் தள்ளுவண்டிகள் ஏழைகளுக்குக் கொடையளிக்கப்பட்டன. இவர்கள் பகலில் காய்கறிகளையும், மாலையில் வேர்க்கடலையையும் விற்பதற்கு இவை உதவும்.





## RID 3070

**RC கபுர்தலா டௌன்டவுன்**

ஆரிய சமாஜ ஆசிரமத்தில் குழந்தைகளுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. சங்கத் தலைவர் யோகேஷ் தல்வார், செயலாளர் ககன்தீப் மெஹ்ரா, முன்னாள் தலைவர் ஹர்மிந்தர் சிங், ஆசிரமத்தில் ஆசிரியர்களான சங்க உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றார்கள்.

## RID 3131

**RC புணே நான்டெட் சிட்டி**

புதிய சங்கத் தலைவரான குஷல் கரேவரை AG உஜ்வல் கெலெ நிறுவிய நிகழ்ச்சியில், மூத்த வழக்கறிஞரும் பத்மஸ்ரீ விருது பெற்றவருமான உஜ்வல் நிகம் ரோட்டரியன்களிடம் உரையாற்றினார்.






## RID 3142

**RC கல்யாண் சிட்டி**

கல்யாண்-முர்பாட் சாலையில், ரேவதி கிராமத்துக்கு அருகில், மாவட்டக் காட்டு அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் ஆதரவுடன் ரோட்டரியன்கள் 53 மரக் கன்றுகளை நட்டார்கள்.

## RID 2982

**RC மேட்டூர் டேம் சிட்டி**

நூற்றாண்டை நெருங்கும் மேட்டூர் அணையைச் சுற்றியுள்ள காட்டுப் பகுதிகளை வலுப்படுத்துவதற்காகப் படிப்படியாக 10,000 மரக் கன்றுகள் நடப்படுகின்றன. முதல் கட்டமாக, சம்பள்ளி கிராமத்தில் ரோட்டரியன்கள் மரங்களை நட்டார்கள்.




## RID 3170

**RC ஹொனாவர்**

ஹொனாவர் SDM கல்லூரியில் CSR நிதிகளின் வழியாக நிறுவப்பட்ட கழிவு நீர்த் தூய்மைப்படுத்தல் ஆலையை PDG கௌரீஷ் தொண்ட் தொடங்கிவைத்தார். இந்த ஆலை நாள்தோறும் 12,000 லிட்டர் கழிவு நீரை மறுசுழற்சி செய்யக்கூடியது. தூய்மைப்படுத்தப்பட்ட நீர் தோட்டத்துக்கு, கழிப்பறைக்கும், பயன்படுத்தப்படும்.



## RID 3182

**RC கடுர்**

கடுர் வட்டத்தில், 31 அரசுப் பள்ளிகளில் 500க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பள்ளிப் பை, குறிப்பேடுகள், எழுதுபொருட்கள், வண்ணம் தீட்டும் தொகுப்புகளைக் கொண்ட பள்ளிப் பொதிகள் வழங்கப்பட்டன.




# பயந்து ஓட வேண்டிய கட்டாயம்

*ஒரு சிறந்த விற்பனையாகும் நாவல்,*
*யாருடைய கதையை யார் சொல்வது என்ற சர்ச்சையில் சிக்கியது.*

இத்தாலிய எழுத்தாளரான உம்பெர்டோ எக்கோவின் பைவ் மாரல் பீசஸ் என்ற ஐந்து கட்டுரைகளின் தொகுப்பிலிருந்து ஒரு மேற்கோளுடன் தொடங்குவோம். இது முதலில் 1997-ல் 'சின்ங்கு ஸ்கிரிட்டி மொராலி' என்று வெளியிடப்பட்டு, பின்னர் 2001-ல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அதன் கடைசி கட்டுரையான 'குடியேற்றம், சகிப்புத்தன்மை மற்றும் சகிப்பின்மை' என்பதில், அவர் குடியேற்றம் மற்றும் புலம் பெயர்தல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை ஆராய்கிறார். அரசியல், கட்டுப்பாடு, ஊக்கமளிக்கும், திட்டமிடும் மற்றும் ஏற்றுக்கொள்ளும் தன்மைகள் குடியேற்றத்திற்கு இருப்பதாக அவர் கூறுகிறார். ஆனால் புலம் பெயர்தல் வேறு வகையான ஒன்று. அது ஒரு இயற்கையான நிகழ்வு, இதை கட்டுப்படுத்த முடியாது என்று அவர் கூறுகிறார்: "புலம் பெயர்தல் என்பது ஒரு முழு சமூகமும், கொஞ்சம் கொஞ்சமாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதாகும்... கிழக்கு திசையிலிருந்து மேற்கு திசைக்கு பெரிய அளவிலான புலம் பெயர்வுகள் நிகழ்ந்துள்ளன. அதன் மூலம் காக்கஸ் பகுதி மக்கள் அந்த இடங்களின் சொந்த மக்களின் கலாச்சாரத்தையும், உயிரியல் மரபியலையும் மாற்றியமைத்தனர்... ஐரோப்பியர்கள் அமெரிக்கக் கண்டத்தை நோக்கிப் புலம் பெயர்ந்தனர்... ஐரோப்பா இன்னும் குடியேற்றம் என்று கருதி கையாள முயல்வது உண்மையில் ஒரு புலம் பெயர்தல் ஆகும். மூன்றாம் உலக நாடுகள் நம் கதவுகளைத் தட்டுகின்றன, நாம் உடன்படவில்லை என்றாலும் அவை உள்ளே வரும்." 25 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப் பட்டிருந்தாலும், குடியேற்றம், சகிப்புத் தன்மை மற்றும் சகிப்பின்மை பற்றிய எக்கோவின் விளக்கம் இன்றும் நம் காலத்துக்குப் பொருந்தும்.



**சந்தியா ராவ்**

எனினும், இந்தக் கட்டுரையின் மையக் கருத்து, கவர்ச்சியற்ற தலைப்பு கொண்ட 'அமெரிக்கன் டர்ட்' என்ற புனைகதை ஆகும். பியூர்ட்டோ ரிக்கோவைச் சேர்ந்த பாட்டியை கொண்ட ஒரு அமெரிக்கரான ஜீனைன் கம்மின்ஸ் இதை எழுதியுள்ளார். இது தென் மற்றும் மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதைப் பற்றியது. இந்த நிகழ்வின் அரசியல் விளைவுகள் உலகிற்குத் தெரியும். அமெரிக்க அதிகாரிகள் 'சட்டவிரோத வெளிநாட்டவர்' என்று அழைக்கப்படுபவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கும், கண்டுபிடிப்பதற்கும் எடுக்கும் நடவடிக்கைகளும் நமக்குத் தெரியும். ஆனால், நூற்றுக்கணக்கான மைல்கள் கடந்து, பல நாட்கள் ஆபத்து, துயரம் மற்றும் விரக்தியுடன் மேற்கொள்ளப்படும் பயணங்களின் காரணங்கள், வழிமுறைகள் மற்றும் கால அளவு பற்றி நமக்கு எவ்வளவு தெரியும்? 'அமெரிக்கன் டர்ட்' அத்தகைய ஒரு கதையைச் சொல்ல முயற்சிக்கிறது.

மெக்சிகோவில் உள்ள அகபுல்கோ என்ற நகரத்தில் லிடியா பெரேஸ் ஒரு புத்தகக் கடையை நடத்துகிறார். அவளுடைய அண்ணன் மகள் யெனிஃபரின் 15-வது பிறந்தநாள் விழாவில், லிடியாவின் குடும்பத்தைச் சேர்ந்த 16 பேர் ஒரு சக்திவாய்ந்த போதைப்பொருள் கடத்தல் கும்பலால் சுட்டுக் கொல்லப்படுவதிலிருந்து புத்தகம் தொடங்குகிறது. இவர்களில் லிடியாவின் கணவரான பத்திரிக்கையாளர் செபாஸ்டியன் மற்றும் அவளுடைய தாயாரும் அடங்குவர். லாஸ் ஜார்டினெரோஸ் என்ற போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவரின் உத்தரவின் பேரில் இந்தக் கொலைகள் நடந்தன என்பது லிடியாவுக்குத் தெரியும். உண்மையில், அந்தக் கும்பலின் தலைவரான ஜேவியர் ஃபுயெண்டெஸ் அவளுடைய நண்பர், புத்தகங்களை நேசிக்கும் சக மனிதர் என்று அவள் நம்பும்படி ஏமாற்றப்பட்டிருந்தாள். ஆனால் இப்போது, அந்தக் கடத்தல் கும்பலை செபாஸ்டியன் வெளிப்படுத்தியதால், அவளும் அவளுடைய மகன் லூகாவும் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர்.

பயம் மற்றும் துக்கத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, லிடியாவும் லூகாவும் அகபுல்கோவையும், மெக்சிகோவையும் விட்டு வெளியேறி அமெரிக்காவை நோக்கிச் செல்ல முயற்சிக்கின்றனர். நகரும் ரயில்களில் ஏறி அதன் மேலே பயணிப்பது, பாலைவனத்தைக் கடப்பது, காட்டிக்கொடுக்கவோ அல்லது சுட்டு வீழ்த்தவோ கூடிய அந்நியர்களை நம்புவது, பணத்தை முழுவதுமாக இழப்பது, மற்றும் கொடிய பாம்புகள் மற்றும் பசியுடன் போராடுவது, எல்லா இடங்களிலும் இருக்கும் போதைப்பொருள் மற்றும் எல்லை ரோந்துப் படைகளிடமிருந்து தப்பிப்பது உட்பட பல நாட்கள் மற்றும் தடைகள் கொண்ட அவர்களுடைய இரகசிய பயணத்தின் கதையை, பல வருட ஆராய்ச்சியின் அடிப்படையில் எழுதப்பட்ட ஒரு புனைகதையாக இந்த நாவல் கூறுகிறது.


இது வேகமான நடையில் மற்றும் அதிக விவரங்களுடன் சொல்லப்பட்ட ஒரு அழுத்தமான கதை, சில நேரங்களில் இது மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றினாலும், நீங்கள் அதன் எழுத்து நடையைப் பழகிக் கொள்ளும் போது, அது உங்களை முழுவதுமாக ஈர்க்கிறது. மேலும், மெக்சிகோ-அமெரிக்க எல்லை வழியாக மக்கள் தொடர்ந்து

நகர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு தெரியும் என்பதால், இது இன்னும் அழுத்தமாகிறது. லிடியாவும் லூகாவும் தங்களுக்கு கீழே தெற்கிலிருந்து தப்பி வருபவர்களைச் சந்திக்கும் போது, அவர்களின் கதைகளையும், காரணங்களையும் நீங்கள் அறிந்துகொள்கிறீர்கள். அவர்கள் தங்கள் விருப்பத்தின் பேரில் வெளியேறவில்லை, அவர்களுக்கு வேறு வழியில்லை. அவர்கள் வாழ வேண்டுமானால் வெளியேற வேண்டும்.

எங்கள் கடைசி புத்தகக் குழு சந்திப்பில் இந்த புத்தகத்தைப் பற்றி நாங்கள் விவாதித்தோம், இதற்கு கலவையான விமர்சனங்களே கிடைத்தன. ஆனால் எங்களுக் கெல்லாம், விவரிக்கப்பட்ட விஷயங்கள் அறிமுகமில்லாதவையாக இருந்தன, ஏனெனில் நாம் 'வீட்டில்' பாதுகாப்பற்ற நிலையில் இல்லாத ஒரு சிறப்புரிமை பெற்ற நிலையில் இருக்கிறோம் - குறைந்தபட்சம், இப்போது வரை நம்மில் யாருக்கும் அந்த நிலை இல்லை. பொதுவாக, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நீங்கள் இல்லை என்றால், அது உண்மையாக இருக்காது என்ற எளிமையான பார்வை உள்ளது. அதாவது, எனக்கு அது நடக்கவில்லை என்றால், அது யாருக்கும் நடக்கவில்லை. இங்குதான் S T கோல்ரிட்ஜின் விருப்பத்துடன் நம் நம்ப முடியாத தன்மையை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற அறிவுரை நினைவுக்கு வருகிறது. அப்போது தான் நாம் அதை அனுபவிக்க வில்லை என்றாலும் நம்மால் புரிந்து கொள்ளவும், அனுதாபம் கொள்ளவும் முடியும்.

ஆனால் காலப்போக்கில், எவ்வளவு பயங்கரமானதாகவும், தீங்கு விளைவிப்பதாக இருந்தாலும் ஒரு விஷயத்திற்குப் பழக்கப்பட்டு விடுவது எளிது. ஹாண்டுராஸில் உள்ள தங்கள் மேகக் காட்டு கிராமத்தைத் தாக்கிய போதைப்பொருள் கடத்தல் கும்பல் களிடமிருந்து தப்பி வரும் சோலெடாட் மற்றும் ரெபெக்கா என்ற பதின்ம வயதினர், ரயில்களில் ஏறுவது மற்றும் இறங்குவது எப்படி என்று லிடியாவுக்கும் லூகாவுக்கும் கற்றுக்கொடுக்கின்றனர். இதை சில முறை செய்த பிறகு, "அவர்கள் அதிகம் யோசிக்காமல் அல்லது பேசாமல் எளிதாக ரயிலில் ஏறினர்". "நாம் நிபுணர்களாகிவிட்டோம்" என்று சோலெடாட் கூறுகிறாள். ஆனால் லிடியா கலக்கமடைகிறாள். அவர்களுடைய நிலையைப் பற்றி சிறிது நேரம் யோசித்த பிறகு அவள், "இனிமேல், நாம் ஒவ்வொரு முறையும் ரயிலில் ஏறும்போது, பயப்பட வேண்டும் என்று நான் உனக்கு நினைவூட்டுவேன்... நீயும் எனக்கு நினைவூட்டு: இது இயல்பு இல்லை" என்று சொல்கிறாள். அதற்கு சோலெடாட், "இது இயல்பு இல்லை" என்று பதிலளிக்கிறாள். அவர்கள், நம்மைப் போலவே தீய விஷயங்கள், அநீதியான விஷயங்கள், கெட்ட விஷயங்களை இயல்புநிலையாக்கப்பட அனுமதிக்கவில்லை. இல்லை யென்றால் அவர்களும் - நாமும் - விழிப்புடன் இருக்கவும், பதிலளிக்கவும் மறந்துவிடுவோம்.

ஒரு சிறந்த விற்பனையாகவும், ஆரம்பத்தில் நல்ல விமர்சனங்களைப் பெற்றிருந்தும், 'அமெரிக்கன் டர்ட்' ஏன் சர்ச்சையை ஏற்படுத்தியது? லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களை எரிச்சலடையச் செய்த ஒரு விஷயம், ஒரு 'வெள்ளை' பெண் 'தங்கள்' கதையைச் சொல்வது தான். ஒரு நேர்காணலின் போது, ஜீனைன் கம்மின்ஸ் தன்னை 'வெள்ளைக் காரர்' என்று அடையாளப்படுத்திக் கொண்டார், இது ஒரு சர்ச்சைக்குரிய விஷயமாக மாறியது. மே 2025-ல் கார்டியன் பத்திரிகையில் வெளியான ஒரு நேர் காணலில், லூசி நைட் எழுதி யுள்ளதாவது, "மோசமான விமர்சனங்களுக்கு ஜீனைன் கம்மின்ஸ் தயாராக இருக்க வில்லை. அவற்றில் ஒன்று அந்த புத்தகத்தை 'மன உளைச்சல் சார்ந்த ஆபாசம்' என்று அழைத்தது. மெக்சிகன் அல்லாத அல்லது புலம் பெயர்ந்தவர் அல்லாத கம்மின்ஸுக்கு மெக்சிகன் புலம்பெயர்ந்தோரின் கதையைச் சொல்ல உரிமை உள்ளதா என்ற கேள்வி எழுப்பப்பட்டது, மேலும் 141 எழுத்தாளர்கள் ஓப்ரா வின்ஃப்ரேவுக்கு ஒரு கடிதம் எழுதி, அதை அவரின் புத்தகக் குழுத்தேர்வில் இருந்து நீக்குமாறு கோரிக்கை விடுத்தனர்."




அந்தக் கடிதத்தில், மற்றவற்றுடன், பின்வரும் விஷயங்கள் குறிப்பிடப் பட்டிருந்தன: "பல, பல மெக்சிகன் அமெரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் தகவலறிந்த கருத்துக்களின்படி, 'அமெரிக்கன் டர்ட்' நன்றாகவோ, பொறுப்புடனோ கற்பனை செய்யப் படவில்லை, அல்லது திறம்பட ஆராய்ச்சி செய்யப்படவில்லை."

எல்லா தரப்பிலும் சொல்ல நிறைய இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ராஸ் செம்பேக் என்பவர் மார்ச் 2020-ல் 'இன்டலெக்சுவல் ஃப்ரீடம் ப்ளாக்'கில் இந்த நாவல் "உறுதியாக அரசியல் சார்பற்றது" என்று எழுதினார். அவர் மேலும் எழுதியதாவது, "கதைகள் அரசியலைத் தாண்டிச் செல்ல முடியும் என்று நான் நம்புகிறேன், இதுதான் கம்மின்ஸின் நோக்கம் என்று நான் நினைக்கிறேன். புலம் பெயர்ந்தோரின் காலமற்ற கதைக்கு ஏன் ஒரு தற்காலிக அரசியல் நிலைப் பாட்டை சேர்க்க வேண்டும்?" செம்பேக்கின் எளிய பதில் இதுதான்: "...பின்விளைவுகளுக்கு அஞ்சி யாரும் எதையும் எழுதத் தயங்கக்கூடாது. அர்த்தமுள்ள கதைகளைச் சொல்வது என்பது அபாயங்களை உள்ளடக்கியது." கம்மின்ஸின் ஆராய்ச்சியின் மேலோட்டமான தன்மையைக் காட்டுகிறது என்ற விமர் சனத்தைப் பற்றி அவர் கூறுகிறார், "...கம்மின்ஸின் ஆராய்ச்சியின் விவரங்கள் எனக்குத் தெரியாது, ஆனால் ஐந்து வருடங்கள் முதுகலை ஆய்வுக் கட்டுரைக்கு போதுமானது... இது எப்படி ஆழமில்லாததாக இருக்க முடியும்?"

எனது பரிந்துரை? புத்தகத்தைப் படியுங்கள். உங்களுடைய சொந்த முடிவுகளை எடுங்கள். ஆனால் படியுங்கள்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# கேட்டட் குடியிருப்புகளின் நிலையான பக்கம்

Go Green

ப்ரீதி மெஹரா

*குடியிருப்பு வாழ்க்கை ஒரு சூழல்-நட்பு அனுபவமாக அமையலாம்.*

நகர்ப்புற இந்தியாவில், கேட்டட் குடியிருப்புகள் ஒரு வழக்கமான வாழ்விடமாக மாறி வருகின்றன. உண்மையில், தங்கள் சொந்த வீடுகளை விட்டு வெளியேறி கேட்டட் குடியிருப்புகளுக்கு மாறும் மக்கள் பலர் உள்ளனர். பெரும்பாலானோருக்கு இது வாழ்க்கையை எளிதாக்குகிறது, ஏனெனில் வசிப்பிடங்களில் பல வசதிகள் உள்ளன, மேலும் மின்சாரம் தடைபட்டுவிட்டாலோ அல்லது தண்ணீர் கசிவு ஏற்பட்டாலோ நீங்கள் ஓடி அலையத் தேவையில்லை. நீங்கள் குடியிருப்பின் உதவி மையத்தைத் தொடர்பு கொண்டால், எலெக்ட்ரீசியன் அல்லது பிளம்பர் உங்கள் வீட்டு



வாசலில் இருப்பார். இத்தகைய வசதிகள் பொதுவான இடங்களான நடைபாதைகள், சாலைகள், வாகன நிறுத்துமிடங்கள், நடைபயிற்சிப் பாதைகள், தோட்டங்கள் மற்றும் மரங்கள் போன்றவற்றை நிலையான முறையில் பராமரிக்கும் கூட்டுப் பொறுப்பையும் கொண்டு வருகின்றன.

வழங்கப்படும் வசதிகள், குறிப்பாக வேலை செய்யும் தம்பதிகள் மற்றும் உதவி தேவைப்படும் வயதான குடிமக்களுக்கு வாழ்க்கையை எளிதாக்கும் சிறந்த வசதிகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதே கேட்டட் குடியிருப்பில் வசிக்கும் மற்றவர்களிடமும் ஒருவருக்குப் பொறுப்பு உள்ளது. மேலும், ஒப்புக்கொள்ளப்பட்ட விதிகளை மதிக்காதவர்கள் தங்கள் சக குடியிருப்பாளர்களை தொந்தரவு செய்வார்கள். உதாரணமாக, உங்கள் குடியிருப்பு நலச்சங்கம் உங்களைக் குப்பைகளைப் பிரிக்கச் சொன்னால் (அவர்கள் அதைச் சொல்ல வேண்டும்), நீங்கள் அதைச் செய்து, இந்த முயற்சியை ஒரு கூட்டு வெற்றியாக மாற்ற வேண்டும்.

நிலையாயான வாழ்க்கை முறையை உறுதிப்படுத்த, குப்பைகளைச் சேகரிப்பதோடு மட்டும் கேட்டட் குடியிருப்புகள் நிறுத்திவிடுவதில்லை என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அவை பல பசுமை நடவடிக்கைகளில் கூட்டாக ஈடுபட்டுள்ளன. குடியிருப்பின் ஈரக் கழிவுகளை உரமாக மாற்றுவது ஒரு கூட்டுச் செயல்பாடாகப் பிரபலமாகி வருகிறது. மேலும், பல சமூகங்களில் உள்ள குடியிருப்பாளர்கள் தங்கள் வளங்களைத் திரட்டி கூரை மேல் சூரிய மின்தகடுகளை அமைத்து வருகின்றனர். இது அவர்களுக்கு நீண்ட காலத்திற்கு மின்சாரக் கட்டணங்களைக் குறைப்பது மட்டு மல்லாமல், நாட்டின் புதைபடிவ எரிபொருட்களைச் சேமிப்பதிலும், வெளியேற்றங்களைக் கட்டுப் படுத்துவதிலும் பங்குதாரர்களாகவும் ஆக்குகிறது.

நீர் அறுவடை என்பது கவனம் பெற்று வரும் மற்றொரு பகுதியாகும். பல கேட்டட் குடியிருப்புகள் நீர் அறுவடை மற்றும் மறுசுழற்சி அமைப்புகளுடன் இருக்கின்றன, அவை தண்ணீரை சிறந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்கின்றன.

சமீபத்தில், பசுமை சலுகை களுடன் குடிமக்களை ஈர்க்கும் சில சுவாரஸ்யமான ரியல் எஸ்டேட் விளம் பரங்களை நான் கண்டேன். இவை சுற்றுச்சூழல்-நட்பு நற்சான்றிதழ்களை நிரூபிக்க முயற்சிக்கும் பில்டர்களின் வழக்கமான பசுமை மோசடி பயிற்சிகள் அல்ல என்று நம்புகிறேன். ஆனால், அவர்கள் செயல்படுத்த உறுதியளிக்கும் சில யோசனைகள், சுவாரஸ்யமானவை.

அப்படிப்பட்ட ஒரு பில்டர், பூங்காக்களுக்கு அருகில் பொதுவான இடங்களில் பழ மரங்களைக் கொண்ட உயரமான குடியிருப்பு பிளாட்களை வழங்குகிறார். அதில், பழங்களைப் பறித்து குடும்பங்களுக்குள் பகிர்ந்து கொள்வது காலனியில் ஒரு கூட்டுச் செயல்பாடாக இருக்கும். மற்ற விஷயங்களைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் இதன் மூலம் சமூகத்தில் வளரும் குழந்தைகள் இந்த மரங்களில் ஏறி பழங்களைப் பறிப்பார்கள்.

மற்றொரு ரியல் எஸ்டேட் விளம்பரம், தங்கள் வீட்டுத் திட்டத்தில் பிரத்தியேகமான குழந்தைகள்-நட்பு மற்றும் செல்லப்பிராணிகள்-நட்பு இடங்களைப் பற்றி பெருமையாகக் கூறுகிறது. இது குழந்தைகளுக்கான வெளிப்புற விளையாட்டுப் பகுதிகளையும், செல்லப்பிராணிகள் பூங்காவையும் உறுதியளிக்கிறது.

ஒரு காலியான அறையில் மின்விசிறிகள் மற்றும் விளக்குகள் எரிவதைப் பார்ப்பது ஒரு விரும்பத்தகாத காட்சி. அது ஒரு 'பசுமை-அல்லாத செயலாகும்.

நிலையான வாழ்க்கையின் மூன்று புனிதமான 'R'களை – குறைத்தல் (reduce), மீண்டும் பயன்படுத்துதல் (reuse) மற்றும் மறுசுழற்சி செய்தல் (recycle) – தொடங்க கேட்டட் குடியிருப்புகள் சிறந்த இடங்களாக இருக்கின்றன. ஒரு பொதுவான இடத்தில் வாழ்வதன் மூலம், நீங்கள் உருவாக்கும் உமிழ்வுகளைக் கூட்டாகப் பகிர்ந்து கொள்வதால், உங்கள் கார்பன் தடம் நிச்சயமாக குறைகிறது. மீண்டும் பயன்படுத்துவதைப் பொறுத்தவரை, கேட்டட் குடியிருப்புகள் தொடங்கியுள்ள சில புதுமையான நடவடிக்கைகளைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவற்றில் ஒன்று, ஒரு தோட்ட விற்பனையை நடத்தியது, அங்கு நீங்கள் அப்புறப்படுத்த விரும்பும் எதையும் மற்றவர்கள் தள்ளுபடி விலையில் வாங்கலாம். எனவே, நான் ஒரு அடுப்பைத் தேடுகிறேன் என்றால், அதை அப்புறப்படுத்த விரும்பும் ஒருவரிடமிருந்து நான் வாங்கிக் கொள்ளலாம். நீங்கள் நல்ல நிலையில் உள்ள பயன்படுத்தப்பட்ட பிராம், சைக்கிள், தொட்டில், கார் இருக்கை, நன்கு பராமரிக்கப்பட்ட பொம்மைகள் மற்றும் புத்தகங்கள் ஆகியவற்றைக் கூட வாங்கலாம்.

உண்மையில், வாட்ஸ்அப் மற்றும் மை-கேட் செயலியும் இத்தகைய சலுகைகளுக்கு பயனுள்ள வலைப்பின்னல்களாகச் செயல்படுகின்றன.

சில கேட்டட் குடியிருப்புகள் மறுசுழற்சியையும் ஒரு கூட்டுச் செயல்பாடாக ஏற்பாடு செய்கின்றன. அவர்கள் ஒரு மறுசுழற்சி நிறுவனத்தை அழைபார்கள், அங்கு வசிக்கும் அனைவரும் தாங்கள் அப்புறப்படுத்த விரும்பும் பொருட்களை வெளியே கொண்டு வருவார்கள். அது அப்புறப்படுத்தப்பட வேண்டிய துணிகள், உங்கள் அலமாரியில் உள்ள பழைய மடிக்கணினிகள் அல்லது மொபைல்கள் அல்லது பயன்பாட்டில் இல்லாத மின்னணுப் பொருட்களாகவும் இருக்கலாம். இது மின்-கழிவுகளை அகற்றுவதற்கான ஒரு சிறந்த வழியாகும். இத்தகைய செயல்பாடுகள் கூட்டாக, ஒரு வார இறுதியில் நடக்கும் போது இது வசதியாகவும் இருக்கும்.

கேட்டட் குடியிருப்புகளை நிலையானதாக மாற்றுவதற்கான பரிந்துரைகள் முடிவில்லாதவை, ஆனால் அதை உண்மையில் நிகழ்த்துவது சில தனிநபர்களின் முயற்சியும், பசுமைக்கான ஆர்வமும் தான்.

எழுத்தாளர் மூத்த இதழாளர்
சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி
எழுதி வருகிறார்.

# முதுகுவலியிலிருந்து விடுபடுங்கள்

கீதா மத்தாய்

உங்களுக்கு முதுகுவலி உள்ளதா? அது எப்போதாவது வரும் வலியாக இருந்தாலும் சரி, அல்லது நீண்டகால வலியாக இருந்தாலும் சரி, நீங்கள் தனியாக இல்லை. நீங்கள் சுற்றிப் பார்த்தால், நிறைய வயதானவர்கள் இடுப்புப் பட்டையை அணிந்துகொண்டு நடப்பதைக் காணலாம். பெரியவர்களில் பன்னிரண்டு சதவிகிதம் எந்த நேரத்திலும் முதுகுவலியால் பாதிக்கப்படுகின்றனர்.

முதுகுவலி ஒரு கடுமையான அசௌகரியமாகவோ, திடீரென செயலிழக்கச் செய்யும் வலியாகவோ அல்லது நீண்டகால வலியாகவோ இருக்கலாம். இரண்டுமே அன்றாட நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கும். இதனால் ஏற்படும் இயலாமையின் அளவு மிக அதிகம். தொடர்ந்து ஏற்படும் எரிச்சல் செயல்திறன் மற்றும் இயங்குதலுக்கு இடையூறாக இருக்கும்.

மனிதர்களாகிய நாம் நான்கு கால்களில் நடக்கும் விலங்குகளிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்தோம். நாம் இரு கால்களால் நடப்பவர்களாகி, நேராக நிற்க ஆரம்பித்தோம். இதனால் மனித தலையின் 8 கிலோ எடையை முதுகெலும்பு தாங்க வேண்டியுள்ளது. இது சிறிய முதுகெலும்புகளின் ஒரு தொடர்ச்சியால் ஆனது, அவை அதிர்வுகளை உறிஞ்சும் பட்டைகள் போல் செயல்படும் குருத்தெலும்பு டிஸ்க்குகளால் பிரிக்கப்பட்டுள்ளன. வயதாக, ஆக தொடர்ந்து எடையைத் தாங்குதல் மற்றும் முறுக்குதல், நிற்றல், வளைதல் போன்ற அதிகப்படியான பயன்பாடு அதன் விளைவுகளை ஏற்படுத்தும், மற்றும் முதுகு வலிக்கத் தொடங்கும்.

வலி பொதுவாக கீழ் விலா எலும்பு ஓரங்களுக்கும் பிட்டதிற்கும் இடையில் அமைந்திருக்கும். வளையும்போது அல்லது ஒரு கனமான பொருளை விகாரமாக எடுக்கும்போது திடீரென ஏற்பட்டிருக்கலாம். வெளிப்படையான காரணமின்றி தோன்றலாம். அசைவதால் அதிகமாகலாம் அல்லது நிலையானதாகவும் மந்தமானதாகவும் இருக்கலாம். இது நிம்மதியான தூக்கத்தைத் தடுக்கலாம். இது சோர்வு, செயல்திறனின்மை மற்றும் எரிச்சல் ஆகியவற்றிற்கு வழிவகுக்கும்.



இடுப்புப் பகுதி மற்றும் கால்களுக்கு நீட்டிக்கப்படும் நரம்புகள் முதுகெலும்புக்கு இடையில் இருந்து வெளியேறுகின்றன. முதுகில் ஒரு பிரச்சனை ஒரு பிட்டத்தில் வலியாக தோன்றலாம் அல்லது கால்களின் பின்புறம் வரை பரவலாம். இந்த அறிகுறி சையாட்டிக்கா என்று அழைக்கப்படுகிறது.

உங்களுக்கு முதுகுவலி ஏற்பட்டால், அறிகுறிகளைப் போக்க பின்வரும் வீட்டு வைத்தியங்களை முயற்சிக்கவும்.

- ❖ கேப்சைசின் கொண்ட களிம்பை தடவி, பின்னர் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை இரண்டு நிமிடங்களுக்கு ஒரு ஐஸ் பேக்கை வைக்கவும்.
- ❖ இபுப்ரூஃபன் அல்லது நாப்ராக்ஸன் போன்ற NSAIDகளை (ஸ்டீராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகள்) எடுத்துக் கொள்ளுங்கள். பாராசிட்டமால் கூட வலியிலிருந்து நிவாரணம் அளிக்கும்.
- ❖ ஆரம்பத்தில் ஓய்வெடுங்கள், ஆனால் தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு மேல் ஓய்வெடுக்க வேண்டாம், ஏனெனில் அது முதுகெலும்பை ஆதரிக்கும் பாராஸ்பைனல் தசைகளை பலவீனப்படுத்தும். இது இறுதியில் வலியை அதிகப்படுத்தும்.

உங்கள் பக்கவாட்டில் படுத்து, உங்கள் முழங்கால்களுக்கு இடையில் ஒரு தலையணையையும் அல்லது உங்கள் முதுகுப் பக்கம் படுத்து உங்கள் முழங்கால்களுக்கு அடியில் ஒரு தலையணையையும் வைத்துக் கொள்ளுங்கள்.

வலி ஒரு காயத்தைத் தொடர்ந்து வந்தால், அல்லது குடல் மற்றும் சிறுநீர்ப்பை பிரச்சினைகளை ஏற்படுத்தினால், காய்ச்சல் இருந்தால், அல்லது கால்களில் பலவீனம் அல்லது உணர்வு இழப்பு இருந்தால், உடனடியாக ஒரு மருத்துவரை அணுக வேண்டும். இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்கும் எந்த வலியையும் தீவிரமாக எடுத்துக் கொண்டு மதிப்பீடு செய்ய வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, எல்லா முதுகுவலியும் ஒரே காரணத்தைக் கொண்டிருப்பதில்லை. ஒரே மாதிரியான அறிகுறிகள் இருந்தாலும், இரண்டு பேருக்கு வெவ்வேறு நோய்கள் இருக்கலாம். தொடர்ச்சியான வலியை ஆராய்ந்து மதிப்பீடு செய்ய வேண்டும். இரத்தப் பரிசோதனைகள், எக்ஸ்-ரேகள், CT மற்றும் MRI ஸ்கேன்கள் தேவைப்படலாம்.

முடிவுகள் வைட்டமின் D குறைபாடு அல்லது குறைந்த கால்சியம் அளவைக் காட்டலாம். யூரிக் அமில அளவுகள் அதிகமாக இருக்கலாம். எலும்புகள் பலவீனமாக இருக்கலாம், ஆஸ்டியோபீனியா, ஆஸ்டியோபோரோசிஸ், முதுகெலும்புகளின் அமுக்கம் அல்லது எலும்பு முறிவுகள், நழுவிய அல்லது சேதமடைந்த இன்டர்வெர்டிப்ரல் டிஸ்க்குகள், மூட்டுப் பிரச்சனைகள், டிஸ்க் எண்ட்ப்ளேட்டுகளில் மாற்றங்கள், இடுப்பு கால்வாய் ஸ்டெனோசிஸ் அல்லது ‘காடா ஈக்வினா சிண்ட்ரோம் என எதுவாகவும் இருக்கலாம். இந்தப் பிரச்சனை வேறு எங்காவது தோன்றியிருக்கலாம், மற்றும் அழற்சி கோளாறுகள், புற்றுநோய் மெட்டாஸ்டாசிஸ் அல்லது சில தொற்றுகளால் இருக்கலாம். வயிற்றின் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன்கள் ஒரு அமைதியான பெருநாடி அனூரிசம் அல்லது மற்ற உள்-அடிவயிற்று நோயியலைக் காட்டலாம்.

மருத்துவர்கள் நிவாரணம் அளிக்க, வலி நிவாரணிகள், தசை தளர்த்திகள் மற்றும் மனச்சோர்வு நீக்கிகளை சேர்த்து வழங்கலாம். வழிகாட்டப்பட்ட பயிற்சிகள் மற்றும் வலுப்படுத்துதலுடன் கூடிய பிசியோதெரபி பெரும்பாலும் உதவுகிறது. சிலர் மாற்று மருந்துகள் மற்றும் அக்குபங்சரை முயற்சி செய்யலாம். குறிப்பிட்ட காரணமில்லாத முதுகுவலிக்கான சிகிச்சை பட்டியல் நீளமானது. பல சிகிச்சைகள் அனுபவத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டவை, மற்றும் நிரூபிக்கப்படாதவை.

கடுமையான நீண்டகால நிலைகளில், மருத்துவர் முதுகெலும்பிற்கு கார்டிகோஸ்டீராய்டு அல்லது நரம்பு அடைப்பு ஊசிகளை பரிந்துரைக்கலாம். நரம்பு அழுத்தம் கொண்ட குடலிறக்க டிஸ்க், தண்டுவட ஸ்டெனோசிஸ் அல்லது தண்டுவட உறுதியற்ற தன்மை போன்ற கட்டமைப்பு காரணங்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்படலாம்.

**சில வாழ்க்கைமுறை மாற்றங்கள் உதவுகின்றன:**

- ❖ சிறந்த உடல் எடையை அடையுங்கள். வயிற்றைச் சுற்றியுள்ள கூடுதல் எடை தோரணையை மாற்றி, முதுகெலும்பை பாதிக்கிறது. இது நிரந்தர கர்ப்ப நிலை போன்றது.
- ❖ வேலை மற்றும் படிப்புக்கு சிறந்த ஏர்கனாமிக் தளபாடங்களைப் பயன்படுத்துங்கள்.
- ❖ நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பது பாராஸ்பைனல் தசைகளை பலவீனப்படுத்துகிறது. ஒவ்வொரு மணி நேரமும் எழுந்து சில அடிகள் நடந்து அல்லது நீட்டிப்பு செய்யுங்கள்.
- ❖ ஏரோபிக் உடற்பயிற்சிகளை (நடைபயிற்சி, ஜாகிங், நீச்சல், சைக்கிள் ஓட்டுதல்) ஒரு நாளைக்கு 30–40 நிமிடங்கள், வாரத்திற்கு குறைந்தது ஆறு நாட்களுக்கு செய்யுங்கள். யோகா அல்லது நீட்சி மற்றும் மைய வலுப்படுத்துதல் பயிற்சிகளையும் தினமும் 20 நிமிடங்கள் செய்யுங்கள்.
- ❖ புகைப்பிடிக்க வேண்டாம். நிகோடின் எலும்பு வளர்சிதை மாற்றத்தில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துகிறது, இது எலும்பு அடர்த்தியைக் குறைக்கிறது.
- ❖ மது அருந்துவது கால்சியம் மற்றும் வைட்டமின் D உறிஞ்சுதலுக்கு இடையூறாக இருக்கும், இதனால் எலும்புகள் பலவீனமடைகின்றன.

முதுகுவலி வருவதற்காக காத்திருக்க வேண்டாம். அதைத் தடுக்க தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள். திருடன் வருவதற்கு முன் வீட்டைப் பூட்டி வைப்பது எப்போதும் நல்லது.

எழுத்தாளர் ஒரு குழந்தை மருத்துவர் மற்றும் *Staying Healthy in Modern India* புத்தக ஆசிரியர்.



## RID 3211

**RC ஹரிபாட் கிரேட்டர்**

DG டினா அந்தோனி முன்னிலையில் அங்கன்வாடிக் குழந்தைகளுக்குப் பொம்மைகள் வழங்கப்பட்டன. அரசு நடத்தும் குழந்தைப் பராமரிப்பு மையங்களில் உள்ள குழந்தைகளை ஊக்குவிக்கும் இந்தச் சங்கத்தின் உறுப்பினர்களின் முயற்சிகளை அவர் பாராட்டினார்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்






## RID 3231

**RC திருப்பத்தூர்**

திருப்பத்தூர் மாவட்டத்தில் புதூர்நாடு மலைகளுக்கு அருகில் உள்ள கீழூர் கிராமத்தில் 25 விவசாயிகளுக்கு உரங்கள் வழங்கப்பட்டன. அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் கல்விப் பொருட்கள் வழங்கப்பட்டன. S கொடியூர் கிராமத்தில், சோனியா அகாதெமியில், 125 மாணவர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

## RID 3234

**RC அண்ணா நகர் மெட்ராஸ்**

காஞ்சிபுரம், வாலஜாபாத் வட்டத்தில் உள்ள அக்ஷய வித்யாலயாவில் சுமார் 1,500 மரக்கன்றுகள் நடப்பட்டன. மலேசியாவைச் சேர்ந்த PDG பாஸ்கரன் கோபால கிருஷ்ணன், IFS அலுவலரும் ரோட்டரியனுமான இருளாண்டி ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.





## RID 3240

**RC கட்வா**

சங்கத்தலைவர் ரூபேஷ் குமார் அகர்வல்லாவின் (2024–25) பெற்றோரான நரேஷ் குமார் அகர்வல்லா மற்றும் புஷ்பா ஆகியோரின் 50வது திருமண நாளை முன்னிட்டு, கொல்கத்தாவில் ஒரு மண்டபத்தில் கூட்டுத் திருமண விழா நடத்தப்பட்டது.

## RID 3212

**RC ராம்நாட்**

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் நினைவு நாளை முன்னிட்டு, கேந்திரிய வித்யாலயாப் பள்ளியில் இரண்டு RO நீர்த் தூய்மைப்படுத்தல் அமைப்புகள் (ரூ.1.5 லட்சம்) நிறுவப்பட்டன. இந்தக் குடிநீர் அமைப்புகளை DGE K காந்தி ஆதரித்தார்.






## RID 3291

**RC சால்ட் லேக் சென்ட்ரல்**

நார்த் 24 பர்கனாஸில் உள்ள முரகச்சா என்ற பகுதியில் உள்ள S C சென் முதியோர் இல்லத்தில், ஆதரவற்ற பெண்களுக்கான ரோட்டரிப் பிரிவு தொடங்கப்பட்டது. இந்த திட்டத்திற்கு சங்கம் பகுதியளவு நிதியளித்தது (ரூ.16.5 லட்சம்).

## RID 3250

**RC பொகாரோ ஸ்டீல் சிட்டி**

முஸ்கான் மருத்துவமனை ஆதரவுடன் ரோட்டரி பிளே குரூப் பள்ளியில் நடைபெற்ற கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு மருந்து முகாமில், 84 பெண்களுக்கு HPV இரண்டாவது தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. திட்டத் தலைவர் ஷினி ஜக்காரியா இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

Rotary PEOPLE OF ACTION

# தடகள வீரர்களை உருவாக்கும் ரோட்டரி ஒலிம்பியாட்

V முத்துகுமரன்

சென்னை மண்டலத்தில் முதல் முறையாக RID 3234-க்கு உட்பட்ட 50 ரோட்டரி சங்கங்கள் இணைந்து பள்ளி மாணவர்களுக்காக "ரோட்டரி ஒலிம்பியாட்" என்ற பெயரில் ஒருநாள் தடகள விளையாட்டுப் போட்டிகளை சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடத்தின. இந்த நிகழ்ச்சியை தொடங்கிவைத்து உரையாற்றிய இந்திய ராணுவத்தின் தட்சிண பாரத ஜெனரல் ஆபீஸர் கமாண்டிங் அதிகாரியான லெப்.ஜெனரல் கரன்வீர் சிங் பிரார், "உலகில் அதிக இளைஞர்களைக் கொண்ட நாடு இந்தியா. எனவே விளையாட்டு மற்றும் முக்கிய துறைகளில் இளைஞர்கள் முன்னேற அவர்களின் செயல் திறனை ஊக்குவிப்பது அவசியமாகும்" என்று கூறினார்.

நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, "இளைஞர்களுக்கு சரியான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். இதுபோன்ற விளையாட்டு நிகழ்ச்சிகள் தனிநபர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தி நாட்டிற்காக ஒலிம்பிக் பதக்கத்தை பெற்றுத்தர உதவும்"என்றார்.

"ரோட்டரி ஒலிம்பியாட் நிகழ்வு என்பது இளைஞர்களின் ஆற்றல், உறுதிப்பாடு, ஒழுக்கம் மற்றும் நகரில் உள்ள மாணவர்களின் விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு கொண்டாட்டம்" என்று DG வினோத் சாரோகி கூறினார்.

ரோட்டரி ஒலிம்பியாட் தலைவர் கர்னல் (ஓய்வு) பூபிந்தர் சிங், தமது உரையில், "தட களப் போட்டி என்பது மற்ற விளையாட்டுப் போட்டிகளைவிட முதன்மையானது. பள்ளி மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி, ஒழுக்கம் மற்றும் குழுவாக இணைந்து செயல்படுவதற்கான ஒரு தளமாகும்" என்று சுட்டிக்காட்டினார்.

சென்னை புறநகர் பகுதியான மீனம்பாக்கத்தில் உள்ள A M ஜெயின் பள்ளியில் 11-ம் வகுப்பு படிக்கும் மாணவி டிம்பிள் தன்வர், ரோட்டரி ஒலிம்பியாட்டில் பங்கேற்றது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார். "படிப்பு தவிர, வேறு சில நடவடிக்கைகளிலும் நான் கவனம் செலுத்தி வருகிறேன். எனக்கு பேட்மின்டன் விளையாட பிடிக்கும். ஓட்டப்பந்தயம் மற்றும் நீளம் தாண்டுதல் விளையாட்டில் பங்கேற்பதிலும் ஈடுபாடு அதிகம். சிவில் சர்வீஸ் தேர்வு எழுதி IAS அதிகாரியாக வர வேண்டும் என்பது எனது வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாக இருந்தாலும், அதற்கு முன்பாக தேசிய அளவில் தடகளப் போட்டிகளில் பங்கேற்று பதக்கம் வெல்ல விரும்புகிறேன்" என்றும் டிம்பிள் தெரிவித்தார்.

ரோட்டரி ஒலிம்பியாட் நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உதவிகரமாக இருந்தது. 250 ரோட்டேரியன்கள் மற்றும் 100 ரோட்ராக்டர்களும் விளையாட்டுப் போட்டி வெற்றிகரமாக நடைபெற உதவினார்கள். தண்ணீர் பாட்டில் மற்றும் பிஸ்கெட் பாக்கெட் ஆகியவை வழங்கப்பட்டன. பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அதே நேரத்தில் வெற்றியாளர்கள் 100 பேருக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் 77 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 1600 மாணவர்கள் பங்கேற்றனர்.■




V முத்துகுமரன்

RID 3234 DG *வினோத் சரோகி மற்றும் , இந்திய ராணுவ தட்சின் பாரத் பகுதி ஜெனரல் கமாண்டிங் ஆஃபிசர் லெப்டினன்ட் ஜெனரல் கரன்பீர் சிங் பிரார், செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றினர். திட்டத் தலைவர் கர்னல் (ஓய்வு பெற்ற) பூபிந்தர் சிங் இடதுபுறத்தில் உள்ளார்.*

ரோட்டரியின் சேவைத்திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## பெண்களுக்கான புற்றுநோய் கண்டறிதல் பேருந்து

பன்னாட்டு நல்கை ஆதரவுடன், பெண்களுக்கான புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதற்கெனக் கும்பகோணத்தில் புற்றுநோய் கண்டறிதல் பேருந்தைத் (₹1.94 கோடி) தொடங்கியுள்ளது RID 2981. இதன் புற்றுநோய் கண்டறிதல் முகாம்களுக்கான சேவைக் கூட்டாளர், புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி.



*வலப்பக்கத்திலிருந்து:* PDGகள் S *பாலாஜி, ரமேஷ் பாபு,* S *பாஸ்கரன்,* DG J *லியோன், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர்* B *பிரியங்கா பங்கஜம்,* PDG *ஜான் டேனியல் (இடமிருந்து* 3-*வது), புற்றுநோய் கண்டறிதல் வேன் தொடக்க விழாவில்.*

## பழங்குடியினக் குழந்தைகளுக்கு உயிர் காக்கும் பராமரிப்பு

மொமென்டிவ் பெர்ஃபார்மன்ஸ் மெட்டீரியல்ஸுடன் இணைந்து, பால்கரில் உள்ள ஜவஹரில், படங்க்ஷா காட்டேஜ் மருத்துவமனைக்கு முழு வசதியுள்ள NICU மருத்துவ உதவி வண்டியைக் கொடையளித்தது RC மும்பை போரிவலி ஈஸ்ட், RID 3141. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான மேம்பட்ட பராமரிப்பு அவ்வளவாகக் கிடைக்காத பழங்குடியினப் பகுதியில் முதன்மையாகப் பணிபுரியவுள்ள இந்த வண்டி 2 மாதங்களில் ஏற்கெனவே 10 குழந்தைகளைக் காப்பாற்றியுள்ளது.



NICU *மருத்துவ உதவி வண்டி வழங்கல் விழாவில் சங்க உறுப்பினர்கள்.*

## விவசாயக் குடும்பங்களுக்கு அரிசி வழங்கல்

திருவள்ளூர் மாவட்டம் ஆற்காட்டில் குப்பம் கிராமத்தில் 100 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 500 கிலோ அரிசி வழங்கியது RC சென்னை சிம்ஃபனி, RID 3234.



*சங்க உறுப்பினர்கள் அரிசி பைகளை விநியோகிக்கின்றனர்.*

## ரோட்டரியின் ஆண்டுக் கருப்பொருட்களுக்கான அஞ்சல்தலைப் பிரியாவிடை

RIன் நிறைவுத் தலைவர் கருப்பொருளான ரோட்டரியின் மாயத்தைக் கொண்டாடுவதற்காக சிறப்புக் கடைசி நாள் உறை அஞ்சலை அறிமுகப்படுத்தியது RC இந்தூர் நவ்லகா, RID 3040. 2025–26 ரோட்டரி ஆண்டிலிருந்து, பிராண்டிங், தகவல் தொடர்பை ஒழுங்குபடுத்துவதற்காக, வழக்கமான ஆண்டுத் தலைவர் கருப்பொருளுக்குப் பதிலாக, இன்னும் தொடர்ச்சியான தலைவர் செய்தி அறிமுகப்படுத்தப்படும்.



IPDG *அனீஷ் மாலிக் (வலது) நினைவு அஞ்சல்தலையுடன்.*

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## பஞ்சாபின் மோகா-வில் HPV முகாம்

டாக்டர் ஷாம் சுந்தர் நர்சிங் ஹோமில் RC மோகா ஸ்டார்ஸ், RID 3090, நடத்திய கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு மருந்து முகாமில் 150க்கும் மேற்பட்ட பெண்களுக்குத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் PDG பர்வீன் ஜின்டால், சங்கத் தலைவர் பங்கஜ் பன்சால், செயலாளர் நளினி ஜின்டால் பங்கேற்றனர்.

இந்தத் திட்டத்துக்கான ரூ.12 லட்சம் செலவை RID 3011 வழங்கி ஆதரித்தது. முகாமைத் தொடங்கிவைத்த தில்லியைச் சேர்ந்த Rtn சமீர் குப்தா வருங்காலத்தில் இதுபோன்ற தடுப்பு மருந்துத் திட்டங்களை ஆதரிக்க முன்வந்தார்.



*தடுப்பூசி முகாமில் PDG பிரவீன் ஜிண்டல்.*

## முஜாஃபர்நகர் பள்ளியில் கணினி ஆய்வகம்

RC முஜாஃபர்நகர் சன்ஸ்க்ரதி, RID 3100, 2024–25 சங்கச் செயலாளர் சஞ்சீவ் ஜின்டாலுக்குச் சொந்தமான ஸ்ரீ திருப்பதி இன்ஃபோடெக் நிறுவனத்துடன் இணைந்து பீபிபூர் காம்போசைட் பள்ளியில் ஒரு கணினி ஆய்வத்தை அமைத்துள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் தொழில்நுட்பக் கல்வியுடன் தொடர்புடைய இந்த முயற்சிகள் குழந்தைகளின் எதிர்காலத்தை மேம்படுத்தும், சமூகத்தை முன்னெடுத்துச்செல்லும் என்று UP திறன் மேம்பாட்டு அமைச்சர் கபில் தேவ் அக்கர்வால் தெரிவித்தார். DG நிதின் குமார் அக்கர்வால் பள்ளி ஆய்வகத் திட்டத்தை நிறைவு செய்த அப்போதைய சங்கத் தலைவர் பிரசாந்த் ஜெயின், ஜின்டால் இருவருடைய முயற்சிகளையும் பாராட்டினார்.



*பள்ளி கணினி ஆய்வகத்தின் தொடக்க விழாவில் ரோட்டேரியன்கள் மற்றும் மாணவர்களுடன் உத்தரபிரதேச அமைச்சர் கபில் தேவ் அகர்வால் (நடுவில்).*

## பள்ளிக் கழிப்பறைத் தொகுதி புதுப்பிக்கப்பட்டது

RC மணிப்பால், RID 3182, இந்திரா நகர் பள்ளியில் ஒரு கழிப்பறைத் தொகுதியைப் புதுப்பித்தது. மேம்படுத்தப்பட்ட இந்தத் தூய்மை அமைப்பு ஆண்கள், பெண்களுக்கான தனித்தனிக் கழிப்பறைகள், தொடர் நீர் வசதியுடன் கை கழுவும் நிலையங்கள், அனைத்து மாணவர்களும் எளிதில் அணுகக்கூடிய எளிய வடிவமைப்புடன் அமைந்துள்ளது.

இதற்குமுன், முறையான கழிப்பறை வசதிகள் இல்லாததால் தூய்மைச் சவால்களை எதிர்கொண்ட மாணவிகளில் இந்த ரோட்டரி திட்டம் நேர்விதத் தாக்கத்தை உண்டாக்கும். இந்த முன்னெடுப்பைத் தொடர்ந்து, மாணவர் வருகை கூடியுள்ளதையும், கற்றல் சூழல் நன்கு மேம்பட்டுள்ளதையும் பள்ளி நிர்வாகிகள் தெரிவித்தார்கள்.



*புதுப்பிக்கப்பட்ட கழிப்பறை வளாகத்தின் முன் ரோட்டேரியன்கள் மற்றும் மாணவர்களுடன் PDG ஜெயகௌரி ஹடிகல்.*

## சோலாப்பூர் பள்ளியில் மருத்துவ முகாம்

RC சோலாப்பூர் பிரைட், RID 3131, காமதி குர்த், லேட் தஜிகாகா கோட்போல் பள்ளியில், யுகந்தர் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் ஆதரவுடன் நடத்திய சுகாதார முகாமில் சுமார் 550 மாணவர்கள் மற்றும் 50 பெற்றோர்கள் பல்வேறு நோய்களுக்கு பரிசோதிக்கப்பட்டனர்.

முன்னாள் ராணுவ மருத்துவ அதிகாரியான சங்கத் தலைவர் சூர்யகாந்த் அகவானே, மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய CPR டெமோவை வழங்கினார்.

சுய பரிசோதனைக்காக பள்ளியில் ஒரு பார்வை பலகை நிறுவப்பட்டது.■



*RC சோலாப்பூர் பிரைட் தலைவர் சூர்யகாந்த் அகவானே (நடுவில்), ரோட்டேரியன்கள் மற்றும் மாணவர்களுடன் சுகாதார பரிசோதனை முகாமில்.*

# திருப்பூரில் ரோட்டரி நீர் ATM-கள்

V முத்துகுமரன்

இந்தியாவின் பின்னலாடைத் தலைநகரமாகப் புகழ் பெற்ற, தமிழ்நாட்டில் உள்ள திருப்பூர் முழுவதும் இலவச நீர் ATM-கள் நிறுவப்பட்டுள்ளன. RC திருப்பூர் சவுத், RID 3203, ஜூலை 2024-ல் முதல் ATM-ஐ அமைத்தது. அதன் அப்போதைய தலைவர் K மோகனசுந்தரம்தான் இந்தத் திட்டத்தைச் சிந்தித்திருந்தார். “நாங்கள் உறுப்பினர் பங்களிப்புகளைக் கொண்டு, ரூ.4.5 லட்சம் செலவுள்ள முதல் ATM-ஐ திருப்பூர் ரோட்டரி அரங்கத்தின் முன்னால் நிறுவினோம். அதன்பிறகு, கிரேட்டர் சிட்னி ரோட்டரி மின் -சங்கத்துடன் (RID 9685) இணைந்து ஒரு பன்னாட்டு நல்கைக்கு விண்ணப்பம் செய்தோம், நகரின் முதன்மைப் பகுதிகளில் மேலும் 14 நீர் ATM-களை நிறுவுவோம்” என்கிறார் இவர்.

12 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட திருப்பூர் தீவிரமான நீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது. காரணம், “நிலத்தடி நீர் குறைந்து வருகிறது, ஏற்கெனவே உள்ள வளங்கள் தொழில் நிறுவனங்களின் கழிவுகளால் விரைவாக மாசுபடுத்தப் பட்டுள்ளன. அதனால் பல நலச் சிக்கல்களுக்கு மக்கள் ஆளாகிறார்கள்,” என்று விளக்குகிறார் மோகனசுந்தரம்.

இச்சங்கம் அக்வா கேர் சிஸ்டம்ஸ், கிங் அக்வா என்ற இரண்டு வணிகர்களுடன் இணைந்து நீர் ATM-களை அமைக்கிறது. இவற்றில் ஓர் RO வடிகட்டிப் பிரிவும், ஒரு நீர் வழங்கல் அமைப்பும் உள்ளன. ஒவ்வோர் இயந்திரமும் மணிக்கு 1,000 லிட்டர் நீரை வழங்கக்கூடியது. இந்தச் சங்கம் இந்நிறுவனங்களுடன் ஐந்தாண்டு AMC-ல் கையொப்ப மிட்டுள்ளது.




*திருப்பூர் ரோட்டரி ஹாலுக்கு அருகில் ஒரு தண்ணீர்* ATM.

“எங்களுக்கு இப்போது $50,000 பன்னாட்டு நல்கை ஒதுக்கப்பட்டுள்ளது. எங்கள் உறுப்பினர்கள் வழங்கிய $33,000 இதில் அடங்கியுள்ளது. மீதமுள்ள 14 ATM-கள் பேருந்து நிலையங்கள், அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, காய்கறிச் சந்தை, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், 3 அரசுப் பள்ளிகளில் அமைக்கப்படுகின்றன” என்கிறார் இவர்.

திருப்பூர் நகராட்சிக் கழகத்துக்கு நன்றி தெரிவிக்கும் இவர், “அனைத்து ATM இடங்கள், நீர், மின்சார இணைப்பு ஆகியவை இந்தக் குடிமையியல் அமைப்பால் வழங்கப்பட்டுள்ளதால் இது எங்களுக்கு மிகவும் உதவியாக உள்ளது” என்கிறார். “சுமார் 150 ஏழைக் குடும்பங்கள் தங்கள் அன்றாடத் தேவைகளுக்காக இந்த நீர் ATM-ஐ முழுக்கச் சார்ந்துள்ளார்கள்” என்கிறார் ரோட்டரி அரங்கத்தில் பணியாற்றும் ராமச்சந்திரன். ரோட்டரி தூய நீர்த்திட்டம் இந்தத் துணி மையம் முழுவதும் அறிவிப்புப் பலகைகளில் காட்சிப்படுத்தப்படுகிறது. இது இந்தச் சங்கத்தின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துகிறது.

கோடை வெப்பத்திலிருந்து வாகன ஓட்டிகளை பாதுகாக்க திருப்பூரில் உள்ள இரண்டு முக்கிய போக்குவரத்து சந்திப்புகளில் பச்சை வலை நிழல்களை சங்கம் அமைத்தது.

### வாரந்தோறும் திட்டத்தலைவர்

ஒவ்வொரு வாரமும் ஒரு சங்க உறுப்பினர் திட்டத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் ஒரு நாளில் சில திட்டங்கள் அல்லது முன்னெடுப்புகளைப் பிறர் உதவியுடன் செய்கிறார். உறுப்பினர்கள் ஒத்துழைப்புடன் “நாங்கள் ரூ.9.5 கோடி மதிப்புள்ள 730 சேவைத்திட்டங்களைச் செய்துள்ளோம், சுமார் பத்து லட்சம் வாழ்க்கைகளைத் தொட்டுள்ளோம்” என்று மன நிறைவுடன் சிரிப்புடன் சொல்கிறார் இவர்.■

# RID 3212ன் உயிரியல் பன்முகத்தன்மைத் திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

RID 3212ன் மாவட்டத் திட்டமான உயிரியல் பன்முகத்தன்மையைக் காப்பாற்றுதலின்கீழ், RCகள் சிவகாசி டவுன், ராஜபாளையம் சூப்பர் கிங்க்ஸ் கை கோத்து, திருவில்லிபுத்தூர் அருகில் மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கும் சதுரகிரி மகாலிங்க மலையில் உள்ள சுந்தர மகாலிங்க சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்குச் துணிப்பைகளை வழங்குகிறார்கள். விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் சுகபுத்ரா, மேகமலை புலிகள் காப்பகத்தின் துணை இயக்குநர் தேவராஜ் பழனிசாமி இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

ஒவ்வோராண்டும் ஆடி அமாவாசை நாளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்த மலைக் கோயிலுக்கு வருகிறார்கள். ஆனால், இவர்கள் அழகான காட்டுப் பகுதியில் பிளாஸ்டிக், பிற குப்பைகளைப் போட்டு நிலத்தை மாசுபடுத்துகிறார்கள். பக்தர்கள் வீசி எறிகிற மட்காத குப்பைகளை உட்கொள்கிற காட்டு விலங்குகளின் உயிருக்கு ஆபத்து உண்டாகிறது. “ரோட்டரியன்கள் துணிப்பைகளை வழங்கும் போது, மலையில் குப்பை போடவேண்டாம் என்று பக்தர்களைக் கேட்டுக்கொண்டார்கள். கோயிலுக்குச் செல்லும் வழியில் குவிந்திருந்த பிளாஸ்டிக், பிற குப்பைகளையும் நீக்கினார்கள்” என்றார் RID 3212ன் செய்தி ஒருங்கிணைப்பாளர் பாலமுருகன். மாவட்ட ஆட்சித் தலைவர் சுகபுத்ரா சுற்றுச்சூழலை, குறிப்பாகக் காடுகள், அழகிய மலைகளைப் பிளாஸ்டிக், பிற ஆபத்தான குப்பைகளின் மாசிலிருந்து பாதுகாக்கவேண்டும் என்றார்.

RID 3212 சங்கங்கள் தங்கள் DG தினேஷ் பாபு வழிகாட்டுதலின் கீழ் ரோட்டரியின் கவனப் பகுதிகளில் பல திட்டங்களை நிறைவேற்றிவருகின்றன. RC ராஜபாளையம் சூப்பர் கிங்ஸ் அரசுக் கலைக் கல்லூரியில் மரக் கன்றுகளை நட்டது. இந்தப் பசுமைப் பணியைச் சங்கத் தலைவர் கார்த்திகேயன், கல்லூரி முதல்வர் சரவணன் வழிநடத்தினார்கள்.

கீழபுத்தளம் கிராமத்தில் RC குழித்துறையும் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையும் ஒரு கண் பரிசோதனை முகாமை நடத்தின. அரசு மருத்துவமனைகளுக்கு சக்கர நாற்காலிகளை RC-கள் யார்ன் சிட்டி நாகர்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் டவுன் வழங்கின. பன்னாட்டுப் பிளாஸ்டிக் இல்லா நாளை (மே 25) முன்னிட்டு, RC ராம்நாட் உறுப்பினர்கள் பொதுமக்களுக்குத் துணிப் பைகளை வழங்கினார்கள்.

RC விருதுநகர் உறுப்பினர்கள், காமராஜர் பொறியியல் கல்லூரியில், போதைப் பொருட்களுக்கு எதிரான மாணவர் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார்கள். RC கோல்டன் சிட்டி நாகர்கோயில் அலுவலர்கள் நிறுவலின் போது, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி மாணவர் ஒருவருக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.■



*மலை கோயிலில் துணி பைகள் விநியோகிக்கப்படுகின்றன.*



*கண் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.*


*ஒரு கல்லூரியில் மரக்கன்றுகள் நடப்படுகின்றன.*



# மேஜை அலங்காரம் – மேற்கு Vs கிழக்கு

LBW



TCA ஸ்ரீனிவாச ராகவன்

கடந்த மாதம், மேஜை அலங்காரம் என்ற பிரபஞ்ச முக்கியத்துவம் கொண்ட விஷயத்தில் நடந்த ஒரு விவாதத்தின் சாட்சியாளனாக இருக்கும் அபூர்வ வாய்ப்பு எனக்கு கிடைத்தது. விஷயம் இப்படிதான் நடந்தது. என் மனைவியின் கல்லூரி தோழிகளில் மூவர், திடீரென காலை காப்பிக்காக வந்தார்கள்; பேசிக்கொண்டே இருந்ததால், மதிய உணவிற்கும் தங்கி விட்டார்கள். உணவு ஆர்டர் செய்த பிறகு, என் மனைவி என்னிடம் மேஜையை அலங்கரிக்கச் சொன்னார். அப்போது வந்திருந்த பெண்களில் ஒருவர், நான் சமையலறையிலிருந்து எடுத்து வந்த கண்ணாடிக் குவளையை தட்டின் வலப்புறமா, இடப்புறமா எங்கே வைக்க வேண்டும் என்று கேட்டார். எனக்கு அதை பற்றி ஒன்றும் தெரியாது. “இது தண்ணீர் குடிக்க, ஆகவே இடப்புறம் வைக்க வேண்டும்” என்றேன். “ஏன்?” என்று அவர் கேட்டார். “இந்தியர்கள் வலது கையால் சாப்பிடுவார்கள்; ஆகவே குவளை வலப்புறம் இருந்தால் அது அசௌகரியம்” என்றேன். ஆனால் அவர், “வழக்கமான முறை வலப்புறமே” என்றார். சிறிது வாதிட்டோம். இறுதியில், “சரி, குவளைகளை மேஜை மீது வைக்கிறேன், வேண்டுமென்றால் நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்” என்றேன். இந்த செயல் மரியாதையற்றது மற்றும் அவர்களுக்கு பிடிக்கவில்லை என்று என் மனைவி பின்னர் சொன்னார். ஏன் என்று எனக்கு புரியவில்லை; இருந்தாலும் வழக்கம் போல, வீரத்தை விட விவேகத்தை தேர்ந்தெடுத்தேன். ஆனால், உடனே கூகுளில் மேஜை அலங்கார விதிகளை தேடினேன்.

அது மிகவும் நுட்பமான விஷயமாக இருந்தது. அதில் இவ்வளவு சிக்கல் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. கூகிள் சொன்னது இதுதான்: “ஃபோர்க் இடதுபுறத்திலும், கத்திகள் மற்றும் கரண்டிகள் வலதுபுறத்திலும் வைக்கப்படும், மேலும் பயன்படுத்தும் வரிசையின் அடிப்படையில் வெளியில் இருந்து உள்நோக்கி பாத்திரங்கள் அடுக்கப்படும். கண்ணாடி குவளைகள் கத்திகளுக்கு மேலே வைக்கப்படும், மேலும் கைக்குட்டையை ஃபோர்க்கின் இடதுபுறத்திலோ அல்லது தட்டின் மீதோ வைக்கலாம்”.

வழிமுறைகள் மிகவும் விரிவாக இருந்தன. பிரட் பிளேட், அல்லது நாம் கோட்டர் பிளேட் என்று அழைப்பது, முக்கிய தட்டின் மேல் இடதுபுறத்தில் இருக்க வேண்டும். வெண்ணெய் கத்தி அதன் மேல் வைக்கப்படுகிறது, வேறு எங்கும் அல்ல. பிறகு ஃபோர்க்கள், நீங்கள் சாப்பிடும் பெரிய ஃபோர்க் சாப்பிடும் தட்டிற்கு மிக அருகில் வைக்கப்படுகிறது, அதன் இடதுபுறம் சாலட் ஃபோர்க். பிறகு கத்திகள், இரவு உணவுக்கான கத்தி உணவு தட்டிற்கு மிக அருகில் இருக்க வேண்டும், அதன் பிளேடு உள்நோக்கி பார்த்தபடி இருக்க வேண்டும். அதன் வலதுபுறம் சாலட் கத்தி இருக்க வேண்டும். கரண்டிகள் அடுத்ததாக வருகின்றன. சூப் ஸ்பூன் கத்திகளுக்கு வலதுபுறம் இருக்க வேண்டும்.

அத்துடன் முடிந்ததா? அல்ல. கண்ணாடிக் குவளைகள் வைக்கும் முறையும் முக்கியம். தண்ணீர் குவளை கத்திகளின் மேல் வைக்கப்பட வேண்டும்; வைன் குவளை அதன் வலப்புறம் வைக்கப்பட வேண்டும். உணவு கைக்குட்டை இல்லாமல் உணவு முழுமை அடையாது – அது உண்மையான துணியால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்; காகிதம் கூடாது. கைக்குட்டையை ஃபோர்க்கின் இடப்புறம் வைக்கலாம், ஆனால் வலப்புறம் ஒருபோதும் வைக்கக்கூடாது. நீங்கள் சோம்பேறியாக இருந்தால் தட்டின் மீதும் கைக்குட்டையை வைக்கலாம்.

மேற்கு பாணியில் உள்ள அதிகாரபூர்வ உணவுக்கான விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. ஆனால் என் மனதில் தோன்றியது – இந்திய பாணி விருந்தில், குறிப்பாக தரையில் உட்கார்ந்து பரிமாறப்படும் உணவில் என்ன விதிமுறைகள் ? அதன் விடை மிகவும் எளிது. மேஜை அலங்காரம் என்ற ஒன்று கிடையவே கிடையாது; ஏனெனில் மேஜையே கிடையாது. தெற்கில் தட்டுகளும் இல்லாமல், வாழை இலை மீது பரிமாறுவர் – முற்றிலும் சுற்றுசூழலுக்கு உகந்தது.

பிறகு ஒரு கலக்கமான எண்ணம் ஒன்று எனக்கு தோன்றியது – வெளிநாட்டில் நம் தூதர்கள் பாரம்பரிய இந்திய விருந்து அளிக்கும்போது என்ன செய்வார்கள்? தால், ரொட்டி, சாதம், ரைதாவை கத்தி, ஃபோர்க், ஸ்பூன்களோடு தருவார்களா? அல்லது விருந்தினர்களை வரிசையாக தரையில் உட்கார வைப்பார்களா? அவ்வாறே செய்ய வேண்டும் என்பதே என் கருத்து.■


YOUR POWERFUL MOVE TO TAKE RJ MANTRA TO INTERNATIONAL
ARENA IS A MILESTONE TO CHERISH
Darshan G
Grade 7
Darshan G
RJ MANTRA ENGLISH SCHOOL
CONGRATULATIONS
For clinching
2ND DOLE TROPHY PASINO GRAND ACCESSION 2025
VENUE:PASINO GRAND IN AIX-EN-PROVENCE, FRANCE.
www.rjmantra.com
9489067789 | 8903660689
admin@rjmantra.com

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27

ADVT.

